REGD. No. M. 4392

அழகிய டி. வி. குமுதினி தனது சருமத்தை வசீகரமாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பைத் தான் உபயோகிக்கிறார் —இதோ உங்களுக்கு ஏனென்று சொல்கிறார்.



"என் சருமத்தின் அழகை பாதுகாப்பதற்கு நான் லக்ஸ் டாய்லட் சோப்பைத்தான் உபயோகிக்கிறேன். ஏனென்றால் அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரத்தினுட்புகுந்து சருமத்தை துப்புரவாகச் சுத்தம் செய்கிறது என்று எனக்கு தெரியும்" என்று இந்த பிரபல சினிமா நட்சத்திரம் சொல்கிறார். "மேலும், அதன் மனோகரமான பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

✡ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!



சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 236-172 TM

கல்கி



மார்ச் 5,1950 4 அண

டயபெப்ஸின்



ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்ததுதான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப்பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் நடிமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்டு கோ., மதராஸ் மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்


5,00,000 நூற்கும் கதிர்கள் நம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்திபெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119 Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


வருங்காலத்தைப்பற்றி கவலைப்படாமலிருக்க
நீங்கள்
முதலிடுங்கள்
நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்களில்
இவை தபாலாபீஸுகளிலும், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமும் (நியமிக்கப்பட்டிருக்கும் இடங்களில்), ஸேவிங்ஸ் பீரோக்களிலும் கிடைக்கும்.
புதுடில்லி இந்திய சர்க்கார் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.
AC77TM

உங்கள் குழந்தைக்கு வியாதி வெக்கையாக இருந்தால்

B. C. P. W.

கிரைப் மிக்ஸர்

உபயோகியுங்கள்



வயிற்றுப் பொருமல், அஜீரணம், சீத பேதி, பல் வளரும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு மற்றும் இதர வியாதிகளையும் தடுப்பதோடு இதமளித்து சொஸ்தம் செய்கிறது

பெங்கால் கெமிகல்

அண்டு பார்மசூடிகல் ஒர்க்ஸ் லிட்.


கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

●

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌடர் & கோ.

41, பந்தர் தெரு :: சென்னை



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலை மயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹித மான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்தபோதிலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(போஸ்ட் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயனசாலை

கிராஸ் கட் ரோடு - கோயமுத்தூர்

"பார்க்கவே முடியாது!" என்று கூறி நிறுத்தினான்.

"ஏன்? என்ன விஷயம்?" என்றேன் பரபரப்புடன்.

"அவன் கோஷாவாகி விட்டாள்! மேலும்......" என்று கூறிக்கொண்டே மௌனமாக என்னைச் சோதனையில் ஆழ்த்தி விட்டான். நான் அவனது தோள்களை உலுக்கினேன்.

"கப்பலிலிருந்து பாவா வந்து விட்டார்" என்றான் அவன். இந்தச் செய்தி எனக்கும் ஓரளவுக்குப் பயங்கரமாகத் தானிருந்தது. ஏனெனில் லஜ்ஜையுடன் பின்புறத்தில் மறைத்து வைத்துக் கொண்டிருந்த அவனது துருக்கிக் குல்லாயே எனக்கு மிகைப் படுத்திவிட்டது!

அன்று மறுதினம் நான் எதிர் பார்த்த படிதான் இப்ராஹீம் நடந்து கொண்டார். பள்ளி வாசலில் தொழுகைக்காக அவர் வந்திருந்த பொழுது அவரை மரியாதைக் காகக் 'குசலம்' விசாரித்தேன். அவர் என்னைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே தலையை அசைத்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

மேலும் இரண்டு தினங்கள் சென்றன. ரஷீத்தையும் காணாததால் எனக்குப் பித்துப் பிடித்தாற் போலிருந்தது. மெது வாக அவர்களது வீட்டை நோக்கிச் சென்றேன். அங்கிருந்து வந்து கொண் டிருந்த பூகம்ப ஓசையினால், நடை ரேழிப் பாதையிலேயே நான் ஒருக்கணம் நிற்கும் படியாகிவிட்டது. "அவன் ஒரு ஹராத்து மகன்தானே—?" என்று கூவிக் கொண் டிருந்தார் இப்ராஹீம். நான் மௌனமாக அந்தச் சூழ்நிலையினின்றும் திரும்பினேன். என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

4

நாலைந்து தினங்கள் வரையில் நான் வீட்டை விட்டே கிளம்பவில்லை. ரஷீத் மாத்திரம் இரண்டொரு தடவைகள் வந்து தேடிவிட்டுச் சென்றதாக என் தாய் கூறினாள்.

அப்பொழுதுதான் தோட்டத்துப் பக்கம் போய்ச் சுற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைந்திருந்தேன். ரஷீத் வியர்க்க விறு விறுக்க என் அறைக்குள் ஓடி வந்தான். அவன் கூறிய செய்தி கேட்டு எனக்கும் ஒரு கணம் வியர்த்துவிட்டது. "ரஸியாவை நாகம் தீண்டிவிட்டது; மூச் சற்றுக் கிடக்கிறாள்" என்றான் அவன். நான் பரபரப்புடன் குல்லா யணிந்து கொண்டு, மயில் தோகையுடன் அவனைப் பின்பற்றி ஓடினேன். அமைதியான சோகரஸம் அந்த வீடு முழுமையும் பரவி யிருந்தது. இப்ராஹீம் துக்கம் நிறைந்த பார்வையுடன் என்னை வரவேற்றார். கோப தாபம், வஞ்சம் எல்லாமே அப் பொழுது அவரது முகத்திலிருந்து விடை பெற்றிருந்தன. 'புத்திரி சோகம்' ஒன்றுக்குத்தான் அவரது உள்ளமும் புறமும் துடித்துக் கொண்டிருந்தன! அத்துடன் அந்த இருட்டறைக் கட்டு மானங்கூட அவரிடம் விடைபெற்றுச் சென்று விட்டது.

ரஸியாவின் தலை அங்கியை விலக்கி விட்டு அவள் முகத்தை நோக்கினேன். அவளது விஷமக் களையான முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது. மெல்லிய தான சுவாசம் ஓடிக்கொண்டிருந்தது.

அடுத்த கணத்தில் என் கைகள் தோகையை யெடுத்துக்கொண்டு பரபரப் படைந்துவிட்டன. சிறிது நேரத்திற் கெல்லாமே எனது கண்கள் எப்படி மூடிக்கொண்டன வென்பதை யறியேன்.

இப்ராஹீம் என் தோள்களைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தார். கண் விழித்



மற்றவர் யார்?



குமாஸ்தா :— இந்த ஆபீஸில் இரண்டு பேர் வேலை இல்லாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை வேலையை விட்டுத் தள்ளி விடலாம் என்று தோன்றுகிறது.

மானேஜர் :—அந்த இரண்டுபேரில் நீங்கள் ஒருவர். மற்றொருவர் யார்?

தேன். ரவீத் ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். அவனது தாயின் முகத்திலோ மறுமலர்ச்சி நிறைந்திருந்தது. ரஸியா இலேசாகப் புரண்டு கொண்டிருந்தாள். ஏன் சிறிது நேரத்திற்கெல்லாமே விழித்துக் கொண்டு சுற்றுப்புறத்தைக் கணத்தில் ஆராய்ந்து விட்டு, நாணத்துடன் திரைக்குள் ஓடி மறைந்துவிட்டாள்!

இப்ராஹீம் என்னைக் கூர்ந்து நோக்கினார். அவரது விழிகளில் நன்றி பிரதிபலித்ததுடன் அவரது தொனியிலும் நடுக்கம் நிறைந்திருந்தது. "தம்பி! வாஹித்! இந்த நிமிஷம் முதல் நீ என்னைப் பற்றிய எண்ணத்தை மாற்றிக் கொள். 'பைத்'திற்குத்தான் அடக்கமென்று என் மகளைப் பற்றிச் சற்றுமுன் தீர்மானித்துவிட்டேன். ஆனால், அல்லாவின் சித்தம் வேறு விதமாக இருக்கிறது. நாளையே ஆன்றோர் முன்னிலையில் பரிசம் போட்டுவிடலாமென்றிருக்கிறேன்" என்றார். அவரது அகன்ற விழிகளிலிருந்துகூட அக்கணம் நன்றிக் கண்ணீர் சுரந்து கொண்டிருந்தது.

அந்தச் சம்பவங்கள் நடந்து இன்றுடன் நாற்பத்து மூன்று தினங்கள் கடந்து விட்டன. இரு குடும்பங்களையும் ஒன்றாக்கிய பின்னர், நேற்றிரவுதான் இப்ராஹீம் கப்பலேறினார்.

வழக்கம் போலவே இன்று அதிகாலையிலும் பக்கிரிசாவின் அழைப்பிற்குப் பின் தொழுகைக்காகக் கிளம்பினேன். ரஸியாவும் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள். என் மனதை அரித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்பதற்கு அப்பொழுதுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. "அதிருக்கட்டும், அன்று நீ மூர்ச்சை தெளிந்ததும் என்ன நினைத்தாய்?—" என்றேன் அவளை நோக்கி.

அவள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டே, "ஏன், ஏமாந்ததற்காக வருத்தமடைந்தேன்—" என்றாள்.

அவளது வார்த்தையின் பொருள் எனக்கு விளங்கவில்லை. மீண்டும் அவளை நோக்கி விழித்தேன். ஆனால், அவளிடமிருந்து கிடைத்த அடுத்த பதில் என்னை மீண்டும் திகைக்கத்தான் வைத்தது!

"நான் எதிர்பார்த்தபடி நடக்காமல் பிழைத்து விட்டேன். அந்த நிமிஷம் எனக்கு அதனால் துக்கம்தான் ஏற்பட்டது" என்றாள் விஷமத்துடன்.

என்னால் ஆத்திரம் தாங்க முடியவில்லை! "அப்படியானால், நீ சாவைத்தான் விரும்பினாயா?" என்றேன்.

அவளொரு கோணல் புன்னகையுடன், "இல்லாமலா வேண்டுமென்றே எங்கோ சென்ற பாம்பிடம் வலுவில் ஓடினேன்?" என்று கூறிக்கொண்டே தன் வெண்கலக் குரலில் கூறினாள்.

அதைத் தொடர்ந்து, "பாவம்! பாவாவின் மனதைத் திருப்பிய அந்தப் பாம்பை ஏன் அநியாயமாகக் கொன்றீர்கள்?" என்று கூறிக்கொண்டே வேகமாக நகர்ந்துவிட்டாள்!

நான் திகைப்பும், மகிழ்ச்சியும் கொண்டு நின்றுவிட்டேன். அடுத்த கணத்தில் அந்தச் செல்லப்புறா வெகு நாட்களுக்குப் பின்பும்கூட மறந்து விடாமல் அவளது கைக்கு வந்து சேர்ந்தது!

என்றோ ஒருநாள் என்னை முழுப் பைத்தியமாக்கிய அதே 'கிஸ்ஷ'ச் சம்பவம்தான் இன்றும் நடந்தது! இந்தக் கடைசிக் கேள்வியையும் கேட்டுவிடுவது—என்ற எண்ணத்துடன் நான் ஓடினேன். அவள் நின்றால் தானே? பாசமும், காதலும் நிறைந்த பார்வையை வீசிவிட்டுத் தொழுகைக் கூட்டத்துக்குள் நுழைந்து விட்டாள் என் ரஸியா!

வழக்கம்போல ரஸியாவின் வெண்கல ஒலியைக் கேட்பதற்காகவே அவர்களது வீட்டுக்குச் சென்றிருந்தேன். ரவீதும் நானும் அளவளாவிக் கொண்டிருக்கும் பொழுது அவனது தாய் வந்தாள். "என் தம்பி, ரஸியாவை நம் வாஹீத்துக்கு நாளையே பரிசம் போட்டுவிட்டாத்தான் என்ன ?—" என்றாள் பாசத்துடன் என்னை நோக்கிக் கொண்டே.

ரவீத் என்னையும் தாயையும் ஆனந்தத்துடன் மாறி மாறிப் பார்த்தான். ரஸியாவோ சுயேச்சை யடைந்துவிட்ட புறாவைப் போல் புழக்கடைப் பக்கம் தாவிக் குதித்துக் கொண்டிருந்தாள் !

நாங்கள் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் ரஸியாவின் தாய் இத்தகைய இன்பத் தாக்குதலை வெகு சுலபமாக என்மீது பிரயோகித்தாள். ஆனால், இதில்தான் எவ்வளவு இடர்கள் பொதிந்து கிடந்தன !

* * *

என் தகப்பனாரின் முன்னோர்கள் தாம் மதத்திற்கே நிலையான அஸ்திவாரமென்று ஊரில் சொல்லிக் கொள்வார்கள்.



என் தகப்பனாரும் பெரிய மதப்பித்தராகத்தா னிருந்தார். அத்துடன், தெய்வீகமான விஷ மந்திரக் கலையின் புகழ் அவரது பெயரை எல்லா வகுப்பினருக்கும் அறிமுகப்படுத்தி யிருந்தது. இந்த ஒரு விஷயத்தில் பகல், இரவு, ஓய்வு—ஏன், பரம விரோதியென்றுகூட அவர் பாகுபடுத்தியதில்லை. ஆனால், அவரது வாழ்நாளில் செய்த ஒரே ஒரு பிழை எத்தகைய விபரீதமாகி விட்டது ! பாழும் பண ஆசை அவரைப் பைத்தியமாக்கிற்று. வியாபாரத்தில் தாம் தேடிய பொருளுக்கு இரகசியமாக வட்டி வாங்கிச் சேகரித்துக் கொண்டிருந்தார். ஊரில் வம்பும் தும்பும் ஒன்றாகச் சேர்ந்து பழைமையே உருவான அவரைப் புறக்கணித்து ஒதுக்கிவைத்தது ! இந்தக் கைங்கரியத்திற்குப் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டவர்களில் இப்ராஹீம்தான் முதன்மையானவர் !

இப்ராஹீம் கப்பல் பிரயாணம் சென்ற சில மாதங்களுக்கெல்லாமே என் தகப்பனார் காலமாகி விட்டார். ஆனாலும், அவரைப் பற்றிச் சமூகத்தில் அவதூறுகள் நடந்துகொண்டு தானிருந்தன. அவர் போகும்பொழுது, அந்த விஷ மந்திரச் சக்தியை வெகு பிரயாசையுடன் என் இளம் உள்ளத்தில் பாய்ச்சிவிட்டுச் சென்றிருந்தார்.

மூன்று வருஷங்களாகி விட்டன. நாகரிகம் சிறிது சிறிதாக எங்கள் ஊருக்கும் படையெடுத்து வந்து கொண்டிருந்தது. சுதந்திர மடைந்த நான் துருக்கிக் குல்லாவையும், வர்ணக் கைலியையும் உதறி எறிந்தேன். ரவீத்தும் என்னை இவ்விஷயத்திலும் பின் பற்றினான்.

இந்த நிலையில்தான் ரஸியாவைப் பற்றிய பைத்தியம் என்னையும், அவளது தாயையும் பற்றிக் கொண்டது ! எங்களது மனோரதங்களின் பாதையில்தான் எவ்வளவு கற்களும், முட்களும்—மேடு பள்ளங்களும் ! ரஸியாவின் அழகான முகத்தையொட்டி, அவளது தந்தையின் பயங்கரமான விழிகளும் என் இதயக் கண்களுக்கெதிரில் வந்து கொண்டேதானிருந்தன !

3

ஒருநாள் காலை. ரவீத் பரபரப்புடன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் வியப்பும் துக்கமும் கலந்திருந்தன. 'ஏன், ரஸியா உன் கிராப்புச் சீப்பை எடுத்து ஒளித்துவைத்து விட்டாளோ ? " என்றேன் பரிகாசமாக.

அவன் அலட்சியமாகத் தலையசைத்து விட்டு, "வாஹீத், ரஸியாவை இனி நீ

ரஸியா

துரோணன்

அன்றைய வைகறைப் பொழுதின் பிறைச் சந்திரன் உருவில்தான் குறைந்திருந்தான்; அழகிலும் ஒளியிலும் அவன் சற்றும் குறையவில்லை. சூரியனிடம் கடன் வாங்கிய சக்திதான் என்பதைக் கூட மறந்திருந்ததுபோ லிருந்தது சந்திரவொளி. ஏன், — அவனது வேகத்தில் கூடக் கர்வம் நிறைந்திருந்தது. குளுமையான தென் மேற்குக் காற்றுடன் சற்றுத் தூரத்திலிருந்த சவுக்கைத் தோப்பின் 'ஸ்' என்ற நிரந்தரமான ஓசை சுருதி மீட்டுவது போன்றிருந்தது. பள்ளிவாசல் ஸ்தூபிகளில் குடியிருந்த புறாக் கூட்டங்களோ வழக்கம் போல ஏக காலத்தில் வேதம் ஓதவாரம்பித்து விட்டன. சுற்றுப் புறத்தின் இந்த மனோரம்மியமான சூழ்நிலையை ஒட்டித்தான் என் மனமும் இயங்கிக்கொண்டிருந்தது. அது என்ன? —'ரஸியா, ரஸியா'—என்ற ஜபம்தான்!

திடீரென்று அந்த மனிதனின் நீண்ட குரல் அந்த வேளையில் ஏதோ ஒரு தேவதையின் இசை போலிருந்தது. 'பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்—!' என்று பள்ளிவாசலின் முன்பு அடக்கமாக நின்று கொண்டு தொழுகைக்காகத்தான் அவ்வாறு அழைத்துக் கொண்டிருந்தார் பக்கிரிசா.

கட்டிலைவிட்டு இறங்கி மேற்கு நோக்கிப் பரபரப்புடன் நடந்தேன். ரஷீத் மாத்திரம் எனக்கு முன்பாகப் போய்க் கொண்டிருந்தான். அன்று வரையில் என்னை அரைப் பைத்தியமாக்கி யிருந்த ரஸியாவைத்தான் காணோம். நான் தயங்கிக்கொண்டே சற்றுப் பின் தங்கிவிட்டேன். சில நிமிஷங்களுக் கெல்லாம் 'களுக்' கென்ற விஷம ஒலி என்னைத் திகைக்க வைத்து விட்டது. விஷமக்காரியான ரஸியா எதிர்ப்புறத்திலிருந்த ஒரு வீட்டின் நிழலி லிருந்து வெளிப்பட்டாள். அவளது கரத்திற்குள் எதையோ மறைத்து வைத்திருந்தாள். அவளது கூரிய விழிகளில் சந்திரவொளியின் பிரதிபிம்பம் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

"ஆகா! எவ்வளவு பக்தி ஆண்டவனிடம்! ஒருநாள் கூடத் தொழுகைக்குத் தவறுவதில்லை!" என்றாள் அந்த விஷமக்காரி. இதற்குப் பதில் சொல்வதற்கு என் கற்பனை ஓடவில்லை. ஆனால் அவள் விடாமல் ஏதேதோ குழந்தை உள்ளத்துடன் அவன் உதிர்த்துக்கொண்டே யிருந்தாள்.

அவளைத் தொடர்ந்து நான் பள்ளி வாசலின் முகப்பிற்கு வரும்போது, அவள் சற்று நின்று ஏதோ ஒரு சைகை செய்தாள். ஸ்தூபியிலிருந்த புறாக்களில் ஒன்று அவளுடைய கையில் வந்து உட்கார்ந்து கொண்டது. நான் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவள் தன் மூடியிருந்த மற்றொரு கரத்தை அதன் மூக்கினிடம் நீட்டினாள். ஒரு இமைப் பொழுதுதான். அவளது கையிலிருந்த தானிய மணிகளைத் தன் சிறிய அலகினால் சேகரித்துக் கொண்டு புறா பறந்துவிட்டது.

"இந்தச் சிநேகத்தை எப்பொழுது பிடித்தாய்?—" என்றேன் ஆர்வத்துடன். அவளோ, பதிலொன்றும் கூறாமல் என் இதயத்தின் சக்தி முழுமையையும் தன் கூரிய விழிகளால் பறித்துக் கொண்டே ஓடிவிட்டாள். எவ்வளவோ வருஷப் பழக்கங்களுக்குப் பின், இந்த ஒரு வைகறை வேளையில்தான் ரஸியா என்னை முழுப் பைத்தியமாக்கி விட்டாள்!

2

மும்தாஜையும், சாந்த் பீபியையும், மெஹரையும் படைத்த ஆண்டவன்தான் ரஸியாவையும் படைத்தார். இதில் ஒரு குறையை மட்டில் அவர் செய்துவிட்டார். மற்றவர்களைப் போல் ரஸியா ஒரு மகாராணியாகப் பிறக்காதது ஒரு குறைதான். ஆனால், என் உலகத்தில் அவள் ஒரு மகாராணி!

ரஸியாவின் வீட்டில், அவளது அண்ணன் ரஷீத், தாய்—இம் மூவர்தாம். அவளது மூர்க்கத் தந்தை இப்ராஹீம் செல்வத்தைக் குவித்துக் கொள்வதற்காகக் கடல் கடந்து பினாங்குக்குச் சென்றிருந்தார். இந்தச் சிறிய குடும்பத்துடன் எனக்கு ஐந்து வயது முதல் பழக்கம். கிராமமு மில்லாத, பட்டணமு மில்லாத எங்கள் சோழபுரம் பள்ளிக்கூடத்தில்தான் நாங்கள் படித்துக் கொண்டிருந்தோம். ஆரம்பத்திலிருந்தே அவர்களது தாய்க்கு என்மீது அளவுகடந்த பாசம்.

ரஷீத் என்னைப் பிரிந்து எங்கும் போகமாட்டான். என் ஆலோசனையின்றி எதையும் செய்யமாட்டான். ஏன் — ரஸியா ஐந்தாம் வகுப்பு வரையில் படித்ததற்கே எனது தூண்டுகோல்தான் காரணம். ரஸியாவைப் பற்றி என்னிடம் எப்பொழுதும் புகார் செய்வதுதான் அவனுக்கு வேலை. ரஸியா அவனைப் பற்றிய வம்புகளை என்னிடம் கூறாமலிருக்கமாட்டாள். அவர்களது தாயோ, இவர்களது வியாச்சியங்களுக்கு எனது தீர்ப்பைத்தான் முடிவான தீர்ப்பாகக் கொள்வாள்!

இன்னார் வீட்டுக்குப் போக வேண்டுமே'' என்று அலுத்துக் கொள்ள வைக்காமல், உற்சாகத்துடன் வரவேற்க வேண்டியது பிள்ளைகளின் கடமையாகும்.

இவ்வாறு எழுதியிருக்கும் நான் ஒரு சங்கீத உபாத்தியாயினி அல்ல. ஆனால் நானும் சங்கீதம் கற்றுக் கொள்ளும் ஒரு கல்லூரி மாணவிதான் என்று இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தாம்பரம்
16—2—50 க. லலிதாம்பிகா

○●○

★ சிறு மாறுதல்

நம் பாரத நாடு விடுதலை பெற்று இன்று குடியரசாகத் திகழ்கிறது. பல மாறுதல்களைக் காண்கின்றோம். இன்னும் பல மாறுதல்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால் சர்க்கார் அதிகாரிகளில் பலர் இன்னும் அடிமை ஆட்சியில் நடந்து கொண்ட தோரணைகளை விட்டபாடில்லை. சுதந்திர நாட்டின் அதிகாரிகளென்றால் அதன் கௌரவம் எத்தகையதென்பதையும், எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் உணர்ந்து கொள்ளவில்லை போலும். தற்பொழுது ஒரு புதிய மாறுதல் உடனடியாகச் செய்தாக வேண்டும். என்னவென்றால் போலீஸ் ஜவான்களின் சிவப்புத் தலைப்பாகையை மாற்றி விட்டு, குடியரசின் ஞாபகத்தை உணர்த்தும் சின்னமாக மாறவேண்டும். ஏனென்றால் அடிமை ஆட்சியின் சின்னமாகவும் அகம்பாவத்தின் தோற்றமாகவும் மக்கள் மனதில் வேரூன்றி விட்டதை மாற்ற வேண்டுமானால் இதை உடனடியாகச் செய்தாக வேண்டும்.

வீரவநல்லூர்
15—2—50 எஸ். இசக்கிமுத்து

ராஜாஜியும் தமிழ்த் தொண்டும்

ராஜாஜி கவர்னர்-ஜெனரல் பதவியிலிருந்து விலகி, மீண்டும் தமிழ் நாட்டிற்கு நம்மிடையே திரும்பி வந்ததுபற்றி நாம் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டிருக்கின்றோம். ராஜாஜி தமிழ் நாடு திரும்புவதற்கு முன்னமே, முக்கியமாய்த் தென்னிந்தியப் பத்திரிகை உலகமும், சிறுவர்களும் அவர் வருகையை ரொம்பவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில், பத்திரிகைகளுக்கு அருமையான கட்டுரைகளும், கருத்து மிக்க நீதிக் கதைகளும் எழுதிச் சிறுவர்களின் அறிவைச் செழித்தோங்கச் செய்வார் என்னும் திட அபிப்பிராயம்தான் காரணம்.

ஆனால் ராஜாஜி டெல்லியிலிருந்து சென்னை திரும்பியதும், சென்னை விமான நிலையத்தில் செய்த பிரசங்கத்திலும், காந்திஜி சர்வோதய நாளாகிய 30—1—50 அன்று மவுண்ட்ரோட்டிலுள்ள ராஜாஜி ஹாலில் செய்த பிரசங்கத்திலும், தாம் தமிழ் மொழியை மறந்து விட்டதாயும், இனிமேல் பள்ளிக்கூடத்திற்குப் போய்த் தமிழ் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் இனிமைத் தமிழிலேயே ஜனங்களிடம் கூறினார்! ராஜாஜி அப்படிக் கூறியது நம் யாவருக்கும் வியப்பை அளித்தது!

தமிழ் நாட்டில் பிறந்து, தமிழர்களிடம் நீண்ட நாள் பழகி, தமிழர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட நம் ராஜாஜி எழுதிய கதைகளும், கட்டுரைகளும் தமிழ் நாட்டில் பிரசித்தமானவை. ராஜாஜியின் சரளமான தமிழ் நடை, பாமர மக்களின் மனத்திலும் பதியும்படியாக எளிதாக இருக்கும். ராஜாஜி எழுதிய ''ராஜாஜியின் குட்டிக் கதைகளும்'' மற்றும் கீதை, உபநிஷத்து இவைகளிலிருந்து எடுத்துக் காட்டும் மேற்கோள்களும் என்றும் தமிழர்களின் மனத்தில் அமரத்துவம் பெற்று விளங்கும். வடக்கே கவர்னர்-ஜெனரல் பதவியை வெகு திறமையுடன் வகித்துத் தமிழ்நாடு வந்த அவர், தமிழ் பாஷையை மறந்துபோய் விட்டதாய்க் கூறினால் யார்தான் அதை நம்ப முடியும்? சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொள்ளும் பொருட்டுத்தான் அவர் அவ்விதம் கூறி இருக்கவேண்டும் என்று திடமாய் நம்புகின்றோம்.

கூடிய சீக்கிரம் நம் ராஜாஜி தம் அருமையான கட்டுரைகளாலும், பிரசங்கங்களாலும், உபதேசங்களாலும் தமிழ்த் தாய்க்கு மாபெரும் தொண்டாற்றி, நம்முடன் இனிது வாழ நீண்ட ஆயுளையும், திடகாத்திரத்தையும் அளிக்க எல்லாம் வல்ல பராசக்தியைப் பிரார்த்தித்துக் கொள்வோமாக.

மயிலாப்பூர்
7—2—50 என். செண்பகலக்ஷ்மி

சிறிது சிறிதாகத் தன் சக்தியை இழந்து வருவது வெளிப்படை. காங்கிரஸ் பெயரையும், காந்திஜியின் பெயரையும் சொல்லிக் கொண்டு பலர் பதவி வேட்டையிலும், மற்றும் பலவிதமான சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தலை முறைக்கு நேரு, பட்டேல், ராஜன்பாபு போன்ற மாபெரும் தலைவர்களாவது மக்களுக்கு மகாத்மாவின் உபதேசங்களை எடுத்துக் கூறி, அவற்றின் படி நடக்கச் சொல்ல இருக்கிறார்கள். தவறான வழியில் செல்பவர்களைத் தடுத்து, காந்தி வழியில் நடத்திச் செல்ல அவர்கள் இருப்பதே நமது பாக்கியம்.

இன்னும் சில வருஷங்களில் மக்கள், நமக்கு அரிய சுதந்திரத்தைப் பெற்றளித்த மகாத்மாவின் பெயரையும், அவருடைய உபதேசங்களையும் அடியோடு மறக்க நேரிட்டாலும் நேரிடலாம். தீய சக்திகள் அவ்வளவு தீவிரமாக வேலை செய்து வருகின்றன.

ஆகவே, மகாத்மாவின் நினைவு நிலைத்திருக்க ஞாபகச் சின்னங்கள் நிறுவ வேண்டியது மிகவும் அவசியமாகிறது. 'ஸ்தூபிகள் கட்டி விட்டால் போதுமா? அவருடைய உபதேசங்களைப் பின்பற்ற வேண்டியது தான் நாம் அவருக்கு நிறுவும் சிறந்த ஞாபகச் சின்னம்' என்று வாதிக்கும் வாய்ச் சொல் வீரர்கள், நாளடைவில் இதைக் கூடச் சொல்ல மாட்டார்கள். அவர்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை.

மகாத்மா நினைவு ஸ்தூபியைச் சென்னைக் கடற்கரையில் மட்டுமின்றி நாடு முழுதும் எழுப்ப வேண்டும். தமிழ்நாட்டுத் தலை நகரில் நிர்மாணிக்கப்பட விருக்கும் மகாத்மாவின் ஸ்தூபி அவருடைய உபதேச மொழிகளையும் தாங்கி நிற்கப் போவது குறித்துப் பெருமையடையலாம்.

சென்னைக் கலங்கரை விளக்கம் (Light House) எப்படி மாலுமிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறதோ, அதைப் போலவே மகாத்மா நினைவு ஸ்தூபியும் தமிழ் மக்களுக்கும், மற்றவர்களுக்கும் மகாத்மாவின் நெறியைக் காட்டும் சின்னமாக நெடுங்காலம் விளங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தமிழ் வருடப் பிறப்பன்று அஸ்திவாரம் ஏற்கப் போகும் ஸ்தூபி, வரும் மகாத்மா பிறந்த தினத்தன்று வானையளாவி ஓங்கி நிற்கும் என்று நம்புகிறேன்.

கல்யாண்
20—2—50 வி. எஸ். சுந்தரராஜன்

○●○

ஆயில்யம்

'மனப் பொருத்தம்' என 5—2—50 'கல்கி'யில் ஸ்ரீ பார்த்தஸாரதி எழுதியதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நானும் ஒரு "ஆயில்ய நக்ஷத்திரக் கன்னி." பெண் ஆயில்ய நக்ஷத்திரமானால் கல்யாணம் ஆனவுடன் மாமியார் இறந்து விடுவார்களாம்.

என் நெருங்கிய உறவினருக்குப் பெண் ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தது. அவர் உடனேயே அந்த நக்ஷத்திரத்தை 'மகம்' என மாற்றி ஜாதகம் தயாரித்து விட்டார். அப் பெண்ணுக்கு விவாகம் ஆகிப் பத்து வருடங்களுக்கு மேல் ஆகியும் அவளுடைய மாமியார் சுகமாக வாழ்கிறார். இங்கு ஆயில்ய நக்ஷத்திரம் என்ன செய்தது?

சென்னை
10—2—50 எஸ். ஜெயலக்ஷ்மி

○●○

★ ஸங்கீத உபாத்தியாயர்கள்

'கல்கி' இதழில், 'சங்கீதம் எப்படி வரும்?' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமதி இந்திராவின் கடிதத்தைப் படித்தேன். பாட்டு வாத்தியார்கள் சார்பில் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன்.

சங்கீதம் என்பது கடினமான கலை. அதற்கு நுண்ணறிவு மட்டும் போதாது. சாதகமும் பொறுமையும் வேண்டும். அதைக் கற்றுக் கொள்வது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் கற்றுக் கொடுப்பவருக்கும் இருக்கிறது. நன்றாகச் சாதகம் செய்து பாடினால் வாத்தியார்களுக்கும் உற்சாகமாயிருக்கும். ஒரு தரத்திற்கு நான்கு தரம் சொல்லிக் கொடுத்தும் சரியாக வராவிட்டால் அவர்களுக்குக் கோபம் வருவது இயற்கை. ஆனால் கற்றுக் கொள்ளும் சிறுமிகள் அவர்கள் கோபித்துக் கொண்டால் அதற்காகத் தாமும் கோபித்துக் கொள்வதைக் காட்டிலும் பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

"அடிக்கும் கை அணைக்கும்" என்பது போல், திட்டும் வாய் வாழ்த்தும். "நாம் சம்பளம் கொடுக்கிறோம்; இவனுக்குத் திட்ட ஏது உரிமை?" என்று எண்ணுகிறார்கள் சிலர். அது சரியல்ல, "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற கூற்றுக் கேற்ப "அவர் குரு, நாம் சிஷ்யை, அவருக்குத் திட்ட உரிமையுண்டு" என்று மனதை ஸ்திரப் படுத்திக் கொண்டு, பொறுமையை மேற் கொள்வதுதான் மேன்மை. இவ்விதம் நடந்து கொண்டால் அவர்களுக்கும் கற்றுக் கொடுக்க ஆவலும் ஆர்வமும் உண்டாகும். சிஷ்யைகளுக்கும் சங்கீதம் நன்றாக வரும்.

நல்ல பாடகரைக் குருவாக ஏற்படுத்தி, நாள் கணக்கு, மணிக் கணக்கு, பாடங்கள் கணக்குப் பாராமல் அவர்கள் மார்க்கத்திலேயே பெற்றோர்கள் குழந்தைகளை விட்டு வைத்தால், கற்பவர்களுக்குச் சங்கீதம் வராமற்போகாது என்று திண்ணமாக நம்புகிறேன். வாத்தியார்களை "ஐயோ......

வட்ட மேஜை

டைகரின் குரல்

சங்கீத கலாநிதி வரதாச்சாரியார் அவர்களின் திடீர் மறைவைக் கேட்டுத் துடிக்கிறேன். சுமார் 30 வருஷங்களாக அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பழகியவன் நான். பல பிரசித்தமான வித்வான்களும் பிரமுகர்களும் அவர் வரலாற்றுக் குறிப்புக்களை வெளியிடுகையில் என் போன்றவன் எழுதுவதற்கு என்ன இருக்கிறது என்றிருந்தேன். ஸ்ரீமான் ஜி. என். பி. யவர்கள் 'கல்கி'யில் அளித்த 'பாத சமர்ப்பணத்தில்' பெரிய குற்றமென அவர் வருத்தத்தைத் தெரிவித்த விஷயம் பற்றி மாத்திரம் எழுத விரும்புகிறேன். அதாவது, டைகருடைய உயர்ந்த மனோ தர்மமுள்ள சங்கீதத்தைப் பிற்காலத்தில் உபமானமாக ஆவது கேட்பதற்கு 'ஒலிப்பதிவு' செய்ய ஏற்பாடு பண்ணாதது மன்னிக்க முடியாத குற்றமெனக் கருதலாம் என்றார் ஜி. என். பி. ஒப்பற்ற பொக்கிஷங்களெனக் கருதப்படும் தமிழ்நாட்டுக் கலைகளுக்கும் இலக்கியங்களுக்கும் அருந்தொண்டு புரிந்து வரும் ஸ்ரீமதி ருக்மிணி தேவி, ஜி. என். பி. பிரலாபிக்கும் இந்தக் குற்றத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறேன். ஸ்ரீ டைகர் அவர்களின் 'முழுக் கச்சேரி' ஒன்றைப் பூராவாக ஸ்ரீமதி ருக்மிணி தேவி ஒலிப் பதிவு செய்து வைத்திருக்கிறார். நான் சென்னைக்கு வரும் சமயங்களில் சாதாரணமாக டைகரைப் பார்த்துப் பேசாமல் இருப்பதில்லை. சென்ற வருஷம் அகடமி சங்கீத விழாவுக்கு வந்திருந்த போது வழக்கம் போல் இரண்டு முறை டைகரைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது இந்த ரகசியத்தை யறிந்தேன். இந்த ஒலிப்பதிவைக் கேட்க ஆவலாயிருக்கிறதென்று ஸ்ரீமதி ருக்மிணி தேவியை வேண்டினேன். ஒரு நன்னாளில் அதை அரங்கேற்றம் செய்யக் கருதியுள்ளதாயும், அவ்வமயம் அறிவிப்பதாகவும் சொன்னார். அவ்வாறே சில மாதங்களுக்குப் பிறகு அரங்கேற்றமும் நிகழ்ந்ததாம். அது சமயம் சென்னைக்குப் போக இயலவில்லை. அந்த ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்ந்த என் அத்யந்த நண்பர் டி. டி. ஸ்ரீனிவாசன் பிறகு சந்தித்தபோது, "வராமல் போனாயே, பயித்தியக்காரா! படுஜோர்! டைகரை அப்படியே கண் முன் நிறுத்தி வைத்திருக்கிறது" என்றார். அசல் டைகரையே இன்னம் பார்த்துக் கொண்டிருக்கும் அதிர்ஷ்டமிருந்து வந்ததால் அந்தச் சமயம் போக முடியாததற்கு அவ்வளவு வருத்தப்படவில்லை. ஆயினும் இனிமேல் வேறு வழியில்லை; டைகரைக் கேட்கக் கலாக்ஷேத்திரத்துக்குப் போக வேண்டியதுதான்.

வீணை தனம்மாள் மறைவுக்குப் பிறகும் இதே போல் 'அடடா அவளுடைய பதங்களையும் ஜாவளிகளையும் ஒலிப்பதிவு செய்யாமற் போனோர்களே' என்று அங்கலாய்த்த ரஸிகர்கள் பலர். ஆயினும் பயன் என்ன? போனது போனதுதானே. வெகு சிரமத்துடன் 5, 6 பிளேட்டுகள் ஒலிப்பதிவு செய்தார்கள். உத்கிருஷ்டமான சங்கீதப் பிளேட்டுக்களை வாங்கி ரஸிக்கக் கூடியவர் எத்தனை பேர்? எனவே, அவை விலையாகாத வெறுப்பினால் அவற்றைப் பதிவு செய்த கம்பெனியார் அவைகளின் 'மெட்ரிக்'களைக் கொளுத்தியே விட்டார்களாம். தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டம் எப்படி! இனியாவது இந்த மாதிரி குற்றங்களுக்குத் தமிழ்நாடு ஆளாகாமலிருக்குமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்; கலா ரஸிகர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

சொல்வது எளிது, நடைமுறையில் பூர்த்தி செய்வதெப்படி? கலை வளர்ச்சியின் பொருட்டு ஏராளமான பொருளை விநியோகப்படுத்தி வந்த ராஜாக்களும் செல்வந்தர்களும் நீங்கின காலம் இது. இந்த 'ஒலிப்பதிவு' அந்தக் காலத்தில் ஏற்பட்டிருந்தால், ஸ்ரீ தியாகராஜரையும், தீக்ஷிதரையும் இன்று நேருக்கு நேர் கேட்டிருப்போமே. சரபோஜியும், ஸ்வாதித் திருநாளும், எட்டையாபுரமும் சும்மா விட்டிருப்பார்களா? அது அந்தக் காலம். இந்தக் காலத்தில் செய்வது யார்? எல்லா அம்சங்களையும் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டிருக்கும் சர்க்காரும், பொதுமக்களும் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

புதுச்சேரி
16—2—50 கே. எஸ். வெங்கடராமன்

○●○

காங்கிரஸும் காந்தியும்

பொதுத் தேர்தல் விரைவில் நடக்கப் போகிறது. நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றளித்த காங்கிரஸே தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்று பெரும்பாலோர் நினைப்பது சகஜம். ஆயினும் காங்கிரஸ் ஸ்தாபனம்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "சங்கீத உபாத்தியாயர்கள்" என்ற கடிதம் எழுதிய தாம்பரம் ஸ்ரீமதி க. லலிதாம்பிகாவுக்கும், "சிறு நாடகம்". என்ற கடிதம் எழுதிய விருதுநகர் ஸ்ரீ எஸ். இசக்கிமுத்துவுக்கும், ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

அவர் வீட்டுக்கு என் தகப்பனாருடன் போனேன். அவர் என்னைப் பார்த்து "ஏண்டாப்பா குழந்தை, ஏதாவது ராகம் கீகம், ஸ்வரம் கிரம் பாடுவாயா?" என்றார். நானும் தைரியமாய், "பாடுவேன்" என்றேன்; பாடியும்காண்பித்தேன். அவர் என் தகப்பனாரிடம் "அண்ணாவாள், பையன் நன்றாய்ப் பாடுகிறான்; கொஞ்சம் கொஞ்சமாய் முன்னுக்கு வந்து விடுவான். நீங்கள் என்னிடம் இவனை ஒப்படைத்து விடுங்கள். இனி இவன் என் குழந்தை!" என்றார். அது முதல், என் தகப்பனார் காலமான பின்பும் நான் அவரைத் தகப்பனாராகவே பாவித்து வந்தேன். அவரும் என்னைத் தம் குழந்தையைப் போலவே பாவித்து அன்பு பாராட்டி அன்பு கலந்த வித்தையையும் ஊட்டி வந்தார்.

சம்பிரதாய சங்கீதம்

ஒரு சமயம் டைகரின் சிநேகிதர் ஒருவர் அவரிடம் வந்து, "தாங்கள் ஏன் கிராமபோன் ரிகார்டு கொடுக்கக்கூடாது? தங்களுக்குப் பிற்காலத்தில் தங்களுடைய சம்பிரதாய சங்கீதத்தை உங்கள் நண்பர்களாகிய நாங்கள் கேட்டு ரஸிக்கவாவது உதவியாயிருக்குமே" என்றார். அதற்கு டைகர், "ஐயோ பாவம், சம்பிரதாய சங்கீதம் தற்சமயம் நாளுக்கு நாள் சீர்கேடடைந்து வருவதால் எனக்குப் பிற்காலத்தில் சம்பிரதாய சங்கீதம் என்பதே அற்றுப் போகும். ஆகையால் என் சம்பிரதாயத்தை என்னுடனேயே எடுத்துச் செல்லப் போகிறேன். உங்களுக்கு என் சங்கீதத்தில் பிரியமிருந்தால் ஆயிரம் முறை வேண்டுமானாலும் பாடுகிறேன், நேரில் கேளுங்கள். என்னை மாத்திரம் இசைத் தட்டுக்கு அழைக்காதீர்கள்" என்று தமாஷாகச் சொன்னார்.

அன்பு

நான் அவர் இல்லத்தில் குருகுலவாசமிருந்தபோது ஒரு நாள் என்னை ஓரிடத்திற்கு அனுப்பியிருந்தார். நான் திரும்புவதற்குப் பகல் இரண்டு மணி ஆகிவிட்டது; நான் வரும் வரையில் அவரும் சாப்பிடாமலேயே இருந்தார். இதைக் கேட்ட நான் "தாங்கள் ஏன் சாப்பிடவில்லை?" என்று கேட்டேன். அதற்கு, "குழந்தை, நீ பட்டினியாயிருக்கும்போது உன்னை விட்டுவிட்டு நான் மட்டும் எப்படிச் சாப்பிடுவேன்?" என்றார்.

ஒரு சமயம், சேலம் சபாவில் அவருடைய கச்சேரிக்குப் போயிருந்த போது, கச்சேரியில் பின்னால் தம்பூரா மீட்டிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து, "ஏண்டா குழந்தை, இந்த ஸதஸில் முதலில் என்ன வர்ணம் பாடினால் நன்றாயிருக்கும்" என்று கேட்டார்.

அதற்கு நான் "இங்கிருக்கும் ரஸிகர்களில் பெரும்பாலோர் சங்கீத வித்வான்களே, அதிலும் செம்பை வைத்தியநாத பாகவதர், ராமபாகவதர், பல்லடம் சஞ்சீவி ராவ் இன்னும் அநேகர். வித்வத் கோஷ்டியாக இருப்பதால் தங்களுக்குப் பிரியமானதும் பல்லவி கோபாலய்யரின் சாஹித்யமுமான கல்யாணி ராக வனஜாக்ஷி அடதாள வர்ணம் மூன்று காலம் பாடுங்கள்" என்றேன். அதையே அவரும் பாடினார். அன்று அவர் பாடிய மூன்று கால வர்ணத்தை அவர் சிஷ்யர்களேனும், அல்லது மற்றுமுள்ள வித்வான்களேனும் சரி, பின்பற்றிப் பாடுவதென்பது மிகவும் சிரமமானதேயாகும். கச்சேரி முடிந்ததும், "பையா, நீ நல்ல சங்கீத ஞானம் பெறுவாய். ஆனால் உனக்கு அதிர்ஷ்டமும் ஐச்வர்யமும் கடவுள் அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்றார்.

முதுமையிலும் சாதகம்

பழைய கால வித்வான்கள் அனுதினமும் காலை 5-மணிக்கு எழுந்து ஒரு மணி நேரமாவது பாடாமலிருக்கமாட்டார்கள் என்று டைகர் அடிக்கடி சொல்லுவார். நான் "வித்வான்கள் எதற்காகச் சாதகம் செய்யவேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "சங்கீத சாதகத்திற்கு வரையறை யென்றொன்றில்லை. அதிகாலையில் அனுதினமும் பாடுவதினால், நம் மூளை குளிர்ச்சி பெறுகிறது. தவிர நல்ல மனோதர்ம சக்தியும் ஏற்படும்" என்றார். அவ்விதமே இரவு படுக்க எந்நேரமாயினும், தேகஅசௌக்கியமுற்றிருந்தாலும், எந்த ஊராயினும், எந்த வீடாயினும், அதிகாலையில் 5-மணிக்கு எழுந்து உட்கார்ந்து பாட ஆரம்பித்து விடுவார். அவருடைய பூரண மனோதர்மத்தை அப்போதுதான் கேட்டு ஆனந்திக்க வேண்டும். அந்தப் பாக்கியத்தை ஐந்து வருஷகாலம் நான் பெற்றிருந்தேன். சென்னை, அடையாறு கலா க்ஷேத்திரத்திலும், அவர் இல்லத்திற்கு வெளியே அதிகாலையில் சில ரஸிகர்கள் நின்றுகொண்டு அவர் பாட்டைக் கேட்டு ஆனந்தித்ததுண்டு. அம்மாதிரியான அரிய லக்ஷண வித்வான் ஒருவர், அதுவும் நான் குருவாயடைந்த ஒருவர், நம்மை விட்டுப் பிரிந்த துயரத்தின் பலனாக, எனக்குச் சங்கீத உலகமே இருள் சூழ்ந்து விட்டாற்போல் தோன்றுகிறது. மறுமுறை இப்பிறவியில் அந்த இருள் நீங்கிப் பிரகாசத்தைக் காணும் பாக்கியம் கிட்டுமா என்று என் உள்ளம் ஏக்கமுறுகிறது.

உத்தரவு' தாங்கி வந்திருந்தது. இருபத்து நாலு மணி நேரத்தில் அவன் ஐம்பது மைலுக்கப்பாலுள்ள ஒரு ஊரில் வேலையை ஒத்துக்கொள்ள வேண்டியது என்று அதில் கண்டிருந்தது. இதைப் படித்ததும் அவனுக்குத் தலை கிர்ரென்று சுற்றியது. இன்னும் இரண்டு நிமிஷம் தாமதித்திருந்தால் அவன் மயக்கம் போட்டு விழுந்திருப்பான். நல்லவேளை; கையில் காப்பியுடன் அவன் மனைவி அங்கே தோன்றினாள். உடனே அவன் கையிலிருந்த காப்பியை வாங்கிக் குடித்துத் தன் மயக்கத்தைத் தீர்த்துக் கொண்டான். பிறகு, எல்லா விவரங்களும் தன் மனைவிக்குக் கூறி அவனுடைய மயக்கத்தையும் தெளிவித்தான்.

• • •

அப்போது, எதிர் வீட்டில் ஆறும் வகுப்புப் படிக்கும் பையன்,

"வகுத்தான் வகுத்த
வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல்
அரிது!"

என்ற குறளைப் பதவுரை பிரித்து வார்த்தை வார்த்தையாகப் பொருளுணராமல் பலத்த குரலில் நெட்டுரு எற்றிக் கொண்டிருந்தான். 'பிரம்மா இட்டமிட்டு அனுப்பியபடிதான் எல்லாம் நடக்குமே தவிர, கோடி ரூபாய் சேர்த்து வைத்திருப்பவர்களும் அதை அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது' என்று எவ்வளவு அழகாக இரண்டாயிர வருஷங்களுக்கு முன் சொல்லி விட்டுப் போயிருக்கிறார். வாழ்க்கையில் ஒரு அனுபவமும் பெறாத இந்தச் சிறுவன் இந்த அரிய உண்மையை எப்படி அறிந்து கொள்ள முடியும்? பாவம்! அவனைச் சொல்லிப் போய் விட்டோமே. பள்ளிச் சிறுவர்கள் கட்டாயமாகக் குறளைப் படிக்க வேண்டும் என்று புகுத்திய கல்வி இலாக்காக்காரர்களுக்குத்தான் விளங்குமா? என்று சாம்பு ரொம்பவும் பரிதாபப் பட்டான்.

எனினும், சாம்புவுக்குத் தன் திட்டங்கள் எல்லாம் வீணாய்ப் போயினவே என்ற வருத்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள், அவன் திட்டங்கள் எல்லாம் வீணாகப் போனதால்தானே அவனுக்கு இந்தக் குறள் புரிந்தது! யாருக்குமே புரிகிறாது என்று சாம்பு நினைக்கும் அளவுக்கு அந்தக் குறள் அவனுக்குப் புரிந்திருக்கிறது.

அவனாகக் கற்றுக் கொள்ள இருந்ததை விட வாழ்க்கை அவனுக்குக் கற்பித்த குறள் மேலான தல்லவா?

என் குருநாதர்

சங்கீத வித்வான் வி. எம். கிருஷ்ணமூர்த்தி

எனது குருநாதர் ஸ்ரீமான் டைகர் வரதாச்சாரியார் அவர்களிடம் 1933 முதல் 1937 வரையில் புராதன சம்பிரதாயப்படி குருகுல வாசம் செய்து அவருடைய உள்ளன்பையும் பெற்று சங்கீதம் கற்றுக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றேன். அந்தப் பாக்கியம் நேர்ந்த சம்பவமே வெகு சுவாரஸ்யமானது.

முதல் சந்திப்பு

1933-ல் சென்னை கோகலே ஹாலில் செம்பை வைத்தியநாத பாகவதர் கச்சேரியைக் கேட்க என்னை என் தகப்பனார் அழைத்துப் போயிருந்தார். டைகர் அங்கு சில சிநேகிதர்களுடன் வந்திருந்தார். கச்சேரி முடிந்ததும், டைகர் தம் சிநேகிதர்களுடன் ஒரு ஹோட்டலுக்குப் போய் அவர்களுடன் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார். அச்சமயம் நடுநடுவே தம் சிநேகிதர்களுக்குச் சிறிது பாடியும் காண்பித்துக் கொண்டிருந்தார். நானும் என் தகப்பனாரும் அவருக்கு அருகிலிருந்த மேஜைக்குப் போய் உட்கார்ந்தோம். அவர் பாடியபோது என்னை மறந்து தலை ஆட்டி விட்டேன். அதைக் கவனித்த டைகர் என் தகப்பனாரைப் பார்த்து, "என்ன அண்ணாவாள், பையன் உங்கள் குழந்தையா? சங்கீதம் தெரியும் போல் தோன்றுகிறதே? தலையை ஆட்டி ரஸிக்கிறானே? இவனைச் சங்கீத வழியிலேயே தயார் செய்யுங்கள்" என்றார்.

அதற்கு என் தகப்பனார் "அதற்காகத் தான் புலியைப் பிடிக்க வலை போட்டிருந்தேன். இன்றுதான் புலி அகப்பட்டது" என்றார்.

"ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! நான் சிறுமம், எனக்கென்ன தெரியும்" என்றார். பிறகு என்னை டைகர், மறுநாள் தம் வீட்டுக்கு வரும்படி சொன்னார். மறுநாள் குறித்த நேரத்தில்

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அவ்வளவையும் ஒரு மாசத்தில் கரைத்துப் புகட்டி விடுகிறேன்!''

இதற்கும் தன் சம்மதம் தெரிவித்துவிட்டு மேலே நடந்தான்.

ரிடையர்டு சப்ரிஜிஸ்திரார் கோவிந்தய்யர் சிவப் பழமாகத் தோன்றினார். அவர் சாம்புவைக் கண்டதும், "என்னடா சாம்பு! நம்ம சிவா விஷ்ணு 'டெம்பிளி'லே பகவத் கீதை அற்புதமா சொல்றா, வந்து கேட்கப்படாதோ? போகிற வழிக்காவது புண்ணியமுண்டு. சாயங்காலம் சினிமா டிராமாவுக்குப் போகிறதற்குப் பதிலாக அங்கே வந்து உட்கார்ந்தாலும் தீர்ந்தது!" என்றார்.

"ஆமாம், மாமா! நீங்கள் சொல்வது அவ்வளவும் வாஸ்தவம். நாளையிலிருந்து 'டெபனெட்டா' பகவத் கீதைக்கு வருகிறேன்" என்றான் சாம்பு.

அப்புறம் தூங்கு மூஞ்சி தூக்கபத்திராசாவ் தூங்கிக் கொண்டே வந்து சாம்புவின் மேல் விழுந்தார். அவரைக் குசலம் விசாரித்ததில் மத்தியானம் தூங்குவதில் உள்ள விசேஷங்களைச் சாங்கோபாங்கமாக விவரித்து விட்டுச் சாம்புவையும் மத்தியானம் தூங்கும் தூய கர்மாவைச் செய்ய வாக்களிக்கச் செய்து விட்டார்.

பின்னர் சம்ஸ்கிருத பண்டித சிரோமணி வ்யாகரண சிம்மம், தர்க்க சாஸ்திர பாரங்கத ஸ்ரீமான் வல்லபாச்சாரியார் சுவாமியைப் பார்த்தான். அவரும் சாம்புவின் வாழ்க்கையில் தினம் இரண்டு மணி நேரம் தமக்கு ஒதுக்கினால், அவனைச் சம்ஸ்கிருத சாஹித்ய வைரமாக இல்லை, ஒரு பாறாங்கல்லாகவாவது பண்ணி விடுவதாகக் கூறினார். "அதற்கென்ன ஒதுக்கி விட்டால் போச்சு!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் சாம்பு.



தலை சுற்றியது !...

இப்படி யார் யாரை எல்லாமோ சந்தித்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் சந்தித்தவர்களின் நீள ஜாபிதா எடுக்க யோசித்தான். அப்போது அவனுக்கு ஒரு விஷயம் புலப்பட்டது. அவன் எத்தனை பேரிடம் வாக்குக் கொடுத்தானோ அத்தனையும் காப்பாற்ற வேண்டுமானால் இந்த இருபத்துநாலு மணி நேரம் போதாது என்று உணர்ந்தான். அத்துடன் 'இந்தச் சூரியனுக்குத்தான் என்ன அவசரம் வந்தது, இந்த உலகை இருபத்து நாலு மணி நேரத்தில் சுற்றிவிட வேண்டுமென்று? நாற்பத்தெட்டு மணி நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாதோ?' என்று சூரியன் மேல் வெகுவாகக் கோபப்பட்டான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் சூரியன் மேல் கோபப்பட்டது தவறு; கோபப்பட வேண்டியது பூமியின் மேல்தான் என்று தெரிந்து கொண்டு விட்டான். ஆமாம், எப்பவோ ஐந்தாம் வகுப்பில் படித்த 'சூரியனைப் பூமிதான் சுற்றுகிறது; சூரியன் சுற்றவில்லை' என்ற விஷயம் அவனுக்கு ஞாபகம் வந்து விட்டதுதான் அதற்குக் காரணம்.

எனினும் அன்றைய இரவெல்லாம் அவனுக்கு ஒரே இன்பக் கனவுகள்தான். தான் மல்யுத்தப் பயில்வானாக மாறிவிட்டதாகவும், 'ஷேக்ஸ்பியரில் சாம்புதான் அத்தாரிட்டி' என்று உலகம் கோஷிப்பது போலவும், சம்ஸ்கிருத விற்பன்னனாகி அவனுக்குப் பட்டங்களுக்கு மேல் பட்டங்கள் கிடைப்பது போலவும் இன்னும் என்னவெல்லாமோ கனவுகள் கண்டான். இந்தக் கனவுகள் காரணமாக இரவு சரியான தூக்கமில்லாததால், காலை வெகுநேரம் வரை தூங்கிவிட்டான். மணி ஏழாகியும் எழுந்திருக்கவில்லையே என்ற கவலையுடன் அவன் மனைவி காப்பி டம்ளருடன் அவனை எழுப்ப வந்தாள். அவன் எழுந்தவுடன் "மணி என்ன?" என்று அலறிய வண்ணம் கேட்டான்.

"ஏழரை" என்றாள்.

"என்ன ஏழரையா?" என்று அவசர அவசரமாகச் சட்டையை மாட்டிக்கொள்ளப் போனான்.

"எங்கே அவ்வளவு அவசரமாகப் போகிறீர்கள்? காப்பி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்" என்றாள்.

"காப்பி குடிக்க நேரமில்லை. வஸ்தாது வடிவேலு வீட்டுக்கு ஆறு மணிக்கே வருவதாகச் சொன்னேன். ஏழரையாகி விட்டதே" என்று கூறிக்கொண்டே ஓடினான்.

வீட்டு வாசலுக்கு வந்தானோ இல்லையோ, ஒரு ஆள் ஒரு கடிதத்தை நீட்டினான். அது கலெக்டரிடமிருந்து வந்திருந்தது. 'மாற்றல்

மடைந்திருப்பேன். அதுவும் போச்சு!

சண்டோ பீமராவ் சொன்னார்: "சாம்பு! தினம் காலை இரண்டு மணிநேரம் வந்து விட்டுப் போ. யோகாசனங்கள் சொல்லித் தருகிறேன். பிறகு பார், உன் தேகத்தை! வஜ்ர தேகமாகி விடும்!" அவர் சொன்னபடியும் கேட்கவில்லை!



ஷேக்ஸ்பியரைத் தவிர்த்து ...

காந்தி பக்தர் கார்மேகம் பிள்ளை, "சாம்பு! நிதம் அரைமணி நேரம் ராட்டை சுற்று. உன் தேவைக்கு வேண்டிய நூல் கிடைத்து விடும்" என்றார். அவர் சொன்னதைக் கேட்டிருந்தால் ஜவுளிச் செலவாவது மிச்சப்பட்டிருக்கும்.

"வரவுக்கும் செலவுக்கும் கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் உள்ள சம்பந்தம்தான் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டிருந்தேன் காந்திய பொருளாதாரத்தைக் கரைகண்ட சொக்கமுத்துச் செட்டியாரிடம். அவர் 'காப்பியை நிறுத்துங்க முதலில். அப்புறம் என்னைக் கேளுங்க!" என்றார்.

அவரைக் 'கேட்க' பயந்துகொண்டு அவர் சொன்னதையும் கேட்கவில்லை!

அப்பப்பா! இப்படி எத்தனை பேர் எத்தனை வித யோசனைகள் எப்படிப் பட்ட இக்கட்டான நிலைமைகளில் கூறியிருக்கிறார்கள். ஆனால் நான் ஒருவர் வார்த்தையாவது கேட்டேனில்லையே! கேட்டிருந்தால் எவ்வளவு பிரயோஜனமாக இருந்திருக்கும்! ஏன், இந்த நிலைமை மாறி வேறு சாம்புவாக அல்லவா நான் இருப்பேன்.

இவ்வாறெல்லாம் எண்ணினான் சாம்பு. அவனுடைய எண்ணம் அத்துடன் முடிந்து விடுவதாக இல்லை! இனி யார் எது சொன்னாலும் கேட்டு விடுவது என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டான்.

ரொம்ப நாழிகை சிந்தித்து விட்டு ஒரு தீர்மானத்துக்கு வந்தால், உடனே உலாவப் போக வேண்டும் என்பது விதி போலிருக்கிறது. இல்லை, காலுக்கும் மூளைக்கும் தான் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதோ, தெரியவில்லை! எதுவானாலும், சாம்பு மேற்கண்ட முடிவுக்கு வந்ததும் வெளியே சற்று உலாவி விட்டு வர வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

வழியில் வஸ்தாது வடிவேலு தென்பட்டார். அவர் சாம்புவைப் பார்த்ததும், "என்ன சாம்பு ஐயா! இப்படித் துரும்பா இளைச்சிட்டீங்க! தினம் காலமே இரண்டு மணி நேரம் நம்ம வீட்டண்டை வாங்க! கஸரத் கத்துக் கொடுக்கிறேன். இரண்டு மாசத்துக்கு அப்புறம் பாருங்க 'ஆட்டம் பாம்' (அணுகுண்டு) ஆட்டம் ஆகி விடுவீங்க!" என்றார்.

சாம்பு மறுநாள் காலை ஆறு மணிக்கு வருவதாகச் சொல்லி விட்டு மேலே நடந்தான்.

அடுத்தாற்போல் ஆங்கிலப் பேராசிரியர் ஆரோக்கியசாமி சாம்புவின் மேல் இடறி விழுந்தார்.

"என்ன ஸார்! ஏதோ பலமாக யோசித்துக் கொண்டே போயிருப்பீர்களோ?" என்று குசலம் விசாரித்தேன்.

"ஆமாம், ஸார்! என் யோசனையிலே உங்களைக்கூடக் கவனிக்கவில்லை. மன்னிச்சுக்கணும். நம்ம கவலைக்கெல்லாம் காரணம் கடன்தான், ஸார்! அதைக் கொடுத்தாலும் கஷ்டமாயிருக்கு, வாங்கினாலும் கஷ்டமாயிருக்கு. இதைத் தெரிஞ்சுதான், என்ன அற்புதமாகச் சொல்லியிருக்கான் 'கடனும் கொடுக்காதே! கடனும் வாங்காதே!' என்று."

"யார் ஸார் அப்படிச் சொன்னது?"

"யார் அப்படிச் சொல்ல முடியும் அந்த ஷேக்ஸ்பியரைத் தவிர்த்து?"

"ஓகோ! எனக்கு அதுகூடத் தெரியவில்லை. நானும் ஒரு பீ. ஏ.! யார் ஸார் இதெல்லாம் நமக்குச் சொல்லித் தருகிறான் என்கிறீர்கள்."

"ஆரோக்கியம் இருக்கிற வரைக்கும் அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், ஸார்! தினம் இரண்டு மணி நேரம் வீட்டுக்கு வாங்க.



நம்ம 'டெம்பிளிலே' ...

சொன்னபடி கேட்டிருந்தால்...

எஸ். வி. எஸ்.

"இந்த மாபெரும் தேசம் மேல் நாடுகளைப்போல் இயந்திர சாதனங்கள் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ வழி செய்ய வேண்டும். அதற்கு முக்கியமான தேவை இன்ஜினியர்கள் தான். வருஷத்தில் ஆயிரக் கணக்கான இன்ஜினியர்கள் தோன்றினால்தான் நம் திட்டங்கள் உருவாகும்; பாரத பூமி பொன் கொழிக்கும் பூமியாகும்."

இவ்வாறு இன்ஜினியரிங் காலேஜ் ஆண்டு விழாவில் தலைமை வகித்த கனம் மந்திரி ஒருவர் கூறினார். இதைத் தினப் பத்திரிகைகளில் படித்தபோது சாம்புவுக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது.

* * *

அந்தக் காலத்திலேயே அப்பா "இன்ஜினியரிங் காலேஜிலே சேருடா, சேருடா" என்று முட்டிக் கொண்டார். அப்போது அவர் பேச்சைக் கேட்கவில்லை. "ஐந்து வருஷம் படிக்க வேண்டும். படித்த பிறகு எந்தக் காட்டிலோ மேட்டிலோ வேலை கிடைக்கும். அங்கெல்லாம் போய் யார் திண்டாடுவது!" என்று கூறி அவர் வார்த்தையைத் தட்டிக் கழித்தோம். அப்போது அவர் சொன்னதைக் கேட்டிருந்தால் இன்று எவ்வளவு நன்றாக வாழலாம். கைநிறையச் சம்பளத்துடனும் பதவியுடனும் 'பொரு' சொகுசாக வாழலாமே என்று தோன்றுகிறது. இப்போது அப்படித் தோன்றி என்ன பிரயோஜனம்?

அன்று அப்பா சொன்னதை மட்டுமா கேட்கவில்லை? மாமா சொன்னதையும் தான் நான் கேட்கவில்லை.

ஆமாம்; கலியாணத்தின்போது மாமா கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போல்தான் சொன்னார். "இந்தப் பெண் வேண்டாமடா, இந்த இடம் வேண்டாமடா! பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணையும் மற்ற சீர் செனத்திகளோடு அழகான பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணி வைக்கிறேன்" என்று எவ்வளவு சொன்னார். அப்போதும் அவர் பேச்சைக் கேட்கவில்லை.

"பணமாவது! வரதட்சிணையாவது! காலம் எப்படி யெல்லாமோ முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்தக் காலத்திலே வரதட்சிணை வாங்குவதாவது! சே! சே! அதெல்லாம் கூடாது, மாமா! இந்த இடம் எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சு, மாமா! இனி என் மனசை மாற்ற முடியாது" என்று கண்டிப்பாய்ச் சொல்லி அசட்டு அலமுவைப் பண்ணிக் கொண்டேன்.

இன்று தோன்றுகிறது, அன்று அவர் சொன்னபடி கேட்டிருந்தால் பணத்தோடு பெண்டாட்டி வந்திருப்பாளே என்று. அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு சின்ன 'பிஸினஸ்' ஆரம்பித்திருந்தால் இன்றைக்கு ஒரு லக்ஷாதிபதியாகி யிருப்பேனல்லவா? இந்த யுத்த காலத்திலே எத்தனை பேர் கறுப்பு மார்க்கெட், அது இது என்று பண்ணிப் பணம் சேர்க்கவில்லை! அவர்களைப்போல் நானும் ஒரு சின்ன முதலாளி ஆகியிருப்பேன் அல்லவா? இல்லை, அந்தப் பணத்தை வட்டிக்கு விட்டாவது வீட்டிலே உட்கார்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருப்பேனல்லவா? இப்படி ஒரு நாலுக்காசின் குமாஸ்தாவாகத் திண்டாட வேண்டியிருந்திரா தல்லவா?—எல்லாம் போச்சு!

* * *

இவ்விதம் சாம்பு எண்ணிக் கொண்டிருந்தபோது, இந்த எண்ணத்தின் தொடர்ச்சிபோல அவனுடைய நண்பன் சங்கரலிங்கம் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது கூறியதும் ஞாபகத்துக்கு வந்தது.

"சாம்பு! பிரமாதமாகத்தான் எங்களுடன் பேசுகிறாய். எந்தச் சிக்கலான அரசியல் விஷயத்தையும் அலசி அலசிப் பிழிகிறபோது எனக்கு நீ ஒரு ஜீனியஸ் என்று தோன்றுகிறது. உன்னைப் போன்ற மேதைகள் தான் அரசியலில் புகுந்து வேலை செய்ய வேண்டும். பாலிடிக்ஸ்தான் உனக்கேற்ற விஷயம். இப்போதே அரசியல் மேடையில் துள்ளிக் குதித்திடணும் ஆம்! அப்போதுதான் நாடு சுபிட்ச மடையும்!" என்று சொன்னான்.

அவன் சொன்னபடி கேட்டிருந்தால், நாடு சுபிட்சமடைகிறதோ இல்லையோ நானும் சுபிட்ச



ஆட்டம்பாம் ஆட்டம்...

களும் உயர்த்து கொண்டே போவதைத் தடுக்க சர்க்காருக்குத் திறமையில்லையென்று அவர் காரணம் கூறினார். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட பொழுது 45 பேர்கள் பாதகமாகவும் 28 பேர்கள் சாதகமாகவும் ஓட்டுக் கொடுத்ததால் தீர்மானம் தோற்றுப் போயிற்று. இதில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இலங்கை இந்திய காங்கிரஸ் மெம்பர்கள் ஓட்டுக் கொடுத்தது முக்கியமானது. இம்மாத ஆரம்பத்தில் டாக்டர் பெரைரா ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த பொழுது இந்திய அங்கத்தினர்கள் நடுநிலைமை வகித்தார்கள். அந்தச் சமயம் இந்திய காங்கிரஸின் கொள்கை சர்க்காரைப் பகைத்துக் கொள்ளாதிருக்கும் நிலைமைக்கு மாறியிருப்பதாகச் சில வட்டாரங்கள் வர்ணித்தன. உண்மை என்னவென்றால் முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம் காமன்வெல்த் மகாநாட்டைக் கண்டிப்பதற்காகக் கொண்டு வந்ததாகையாலும் அந்த மகாநாட்டில் பண்டித நேரு கலந்து கொண்டதாலுமே தீர்மானத்தைக் காங்கிரஸ் அப்பொழுது ஆதரிக்கவில்லையென்றும் இது காங்கிரஸின் கொள்கை மாறுபட்டு விட்டதைக் குறிக்காது என்றும் பிரபல காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறினார்.

புதிய தொழில் தகராறு சட்டம்

சில வாரங்களுக்கு முன்னால் ரோபரித் தோட்டத்தில் சுமார் 1700 இந்தியத் தொழிலாளர் எண்பத்திரண்டு தினங்கள் வரையில் உறுதியாக வேலை நிறுத்தம் செய்ததும் அதைப் பற்றி விசாரிக்க அரசாங்கம் ஒரு மத்தியஸ்த கமிஷனை நியமித்ததும் தொழிலாளர் பக்கத்திலேயே நியாயமிருப்பதாகக் கமிஷன் தீர்ப்புக் கூறியதும் இலங்கைக் கடிதத்தில் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளது. மத்தியஸ்தக் கமிஷன் தீர்ப்பைத் தோட்ட நிர்வாகம் ஏற்க மறுத்தாலும் ஏற்கும்படி தோட்ட நிர்வாகத்தைக் கட்டாயப்படுத்தச் சட்டமில்லாத படியினாலும் நெருக்கடி ஏற்பட்டது. இந்தப் படிப்பினையின் பலனாக ஒரு புதிய சட்டம் இயற்றத் தொழில் மந்திரி ஒரு மசோதாவைத் தயாரித்து வருகிறார். அதன்படி தொழில் தகராறுகளை ஒரு மத்தியஸ்தக் கமிஷன் அல்லது ஒரு ஜில்லா நீதிபதியின் தீர்ப்புக்கு அரசாங்கம் விடலாம். இந்த விசாரணையின் தீர்ப்பை இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டே தீர வேண்டும். இவ்விதச் சட்டம் வேண்டுமென்று இலங்கை இந்திய காங்கிரஸ் நீண்ட காலமாகவே வற்புறுத்தி வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

எதிர்பாராத முடிவு

ரஜனி

கொழும்பு, பிப். 16

இலங்கை இந்தியர் பிரச்னைகளுக்கு விரைவில் ஒரு முடிவு ஏற்படலாமென்று சில வட்டாரங்களில் இப்பொழுது நம்பிக்கை தெரிவிக்கப் படுகிறது. ஆனால் இந்த நம்பிக்கை எவ்வளவு தூரம் பலிதமடையுமென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. லண்டனில் இலங்கை ஹைகமிஷனராயிருக்கும் ஸர் ஆலிவர் குணதிலகா சென்ற வாரம் இங்கு வந்திருந்தார். இந்தியர் பிரச்னையில் ஒரு சமரச முடிவு செய்வதற்காக இங்குள்ள இந்தியத் தலைவர்களையும் பிரதம மந்திரியையும் சர்க்கார் கட்சி முக்கியஸ்தர்களில் சிலரையும் அவர் சந்தித்துப் பேசினார். அதன் பயனாக இந்தியர்கள் பகிஷ்கரித்துள்ள பிரஜாவுரிமைச் சட்டத்தில் இந்தியத் தலைவர்களுக்குத் திருப்தி யளிக்கக்கூடிய சில திருத்தங்களைச் செய்யப் பிரதம மந்திரி இசைந்திருப்பதாயும் சர்க்கார் கட்சியைச் சேர்ந்த மற்றவர்களும் இணங்கினால் இந்தத் திருத்தங்கள் கூடிய சீக்கிரம் பார்லிமெண்டுக்கு வரலாமென்றும் பேசிக் கொள்ளப் படுகிறது. ஆனால் எல்லாம் பேச்சளவில்தான் இருக்கின்றன. திட்டமான பலன்கள் தெரிய இன்னும் சிறிது காலம் பிடிக்கும்போலிருக்கிறது. இதற்கிடையில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் அதனுடைய வருடாந்திர மகாநாட்டை ஏப்ரல் 21, 22ம் தேதிகளில் மாத்தளை நகரத்தில் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. சென்ற முறை ஹட்டன் நகரில் ஆச்சாரிய கிருபளானி முன்னிலையில் நடந்த மகாநாட்டில்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தைப் பகிஷ்கரிப்பதென்று காங்கிரஸ் தீர்மானித்தது. அடுத்த மகாநாடு மாத்தளையில் கூடுவதற்கு முன் இந்தியர் பிரச்னையில் ஒரு சமரச முடிவு ஏற்படுமாயின் மாத்தளை மகாநாட்டின் போக்கே வேறு விதமாயிருக்கும்.

தேசியக் கொடிப் பிரச்னை

இலங்கையின் தேசியக் கொடியைத் தீர்மானிப்பதற்காகப் பிரதம மந்திரி நியமித்திருந்த கமிட்டி சென்ற முறை கூடிய பொழுது தனது தோல்வியை ஒப்புக்கொண்டு பிரதம மந்திரியிடம் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப் பட்டது. அந்த அறிக்கையில் ஒப்பமிடுவதற்காகச் சென்ற திங்கட்கிழமை கமிட்டி மறுபடி கூடிய பொழுது எதிர்பாராத விதமான ஒரு தேசியக் கொடியைக் கமிட்டி நிர்ணயித்தது. அதாவது கொடியில் ஏழில் ஐந்து பாகம் சிவப்பு நிறப் பின்னணியில் சிங்களவர்களின் சிங்கக் கொடி அப்படியே இருக்க வேண்டும். பாக்கி இரண்டு பாகத்தில் சிங்கக் கொடிக்கு வெளியே, கொடி மரத்தில் சுற்றிக் கட்டும் இடத்தில் ஒரு பச்சைக்கோடும் ஒரு மஞ்சள் கோடும் முஸ்லிம்களையும் தமிழர்களையும் குறிப்பதற்காகப் போட வேண்டும். இதுதான் கமிட்டி செய்துள்ள சமரச முடிவு. இந்த முடிவு ஏற்படுவதற்கு மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலமே மூலகாரணமாயிருந்தாராம். ஆனால் இந்தச் சமரச ஏற்பாட்டைக் கமிட்டியிலிருந்த செனட்டர் என். நடேசன் என்ற தமிழ் அங்கத்தினரும் சமஷ்டி வாதிகளும் சம்மதிக்கவில்லை. அதற்குக் காரணம் சிறுபான்மை வகுப்புக்களைக் குறிக்கும் மெல்லிய கோடுகளைச் சிங்கக் கொடிக்கு வெளியே கொடி மரத்தில் சுற்றும் இடத்தில் போடுவதுதான். கம்பத்தில் கொடியைச் சுற்றும் பொழுது கோடுகள் மறைந்து அசல் சிங்கக் கொடிதான் பாக்கியிருக்குமென்று அவர்கள் வாதிக்கிறார்கள். சிங்கக் கொடிக்கு வெளியே கோடுகளைப் போடுவது சிறுபான்மை வகுப்புகளைத் தீண்டத் தகாதவர்களைப் போலாக்கி அவமானப்படுத்துகிறதென்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆயினும் கமிட்டியின் மெஜாரிட்டி அங்கத்தினர்களின் தீர்மானத்தை அனுசரித்தே தேசியக்கொடி நிர்ணயமாகுமென்று தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சென்ற இலங்கை பார்லிமெண்டில் சர்க்கார் மீது நம்பிக்கையில்லை யென்ற ஒரு தீர்மானத்தை ஸ்ரீ டபிள்யூ. தஹநாயகா என்ற அங்கத்தினர் கொண்டு வந்தார். வாழ்க்கைச் செலவும் விலை வாசி


சுசீலா கிப்ஸ் உபயோகிக்கிறாள்
அவள் அழகான பற்களைப் பெறுவாள்
1
சுசீலா தனது கிப்ஸ் டென்டிபிரிஸின் அழகான டப்பியையும், இனிய புதிய மணத்தையும் விரும்புகிறாள்.
2
அவள் பிரஷை தண்ணீரில் நனைத்து கிப்ஸ் டென்டிபிரிஸ் கட்டியில் தேய்க்கிறாள்.
3
அவள் எல்லா பற்களையும் தேய்க்கிறாள். (மேலும் கீழுமாக) உள்ளும் வெளியும் சுத்தம் செய்கிறாள்.
4
பிறகு தண்ணீரால் வாயை கொப்புளிக்கிறாள். இப்பொழுது கிப்ஸ் உபயோகிப்பதால் அது அழகான பற்களைப் பெற உதவும்.
உங்கள் குழந்தைகளும் கிப்ஸ் உபயோகிக்கிறார்களா?
சுரசுரப்பான சுத்தம் செய்யும் வஸ்துக்கள், சாம்பல், கரி இவை போன்றவை, குழந்தைகளின் பற்களுக்கு ஊறுவிளைவிக்கலாம். உங்கள் குழந்தைகளை சிறுவயதிலிருந்தே கிப்ஸ் டென்டிபிரிஸ் உபயோகிக்கச்செய்யுங்கள். அவர்கள் பெரியவர்களானதும் வெண்மையான குற்றமற்ற பற்களைப்பெறுவார்கள். நுரைபோல் மிருதுவான கிப்ஸ் பற்களுக்கோ ஈறுகளுக்கோ ஒருபொழுதும் கெடுதல்செய்வதில்லை. குழந்தைகளும் பெரியவர்களைப் போலவே, கிப்ஸை விரும்புகிறார்கள். அதற்கு காரணம் கிப்ஸின் இனிய புதிய வாசனையும், நேர்த்தியுள்ள 3 கவர்ச்சியான வர்ணங்களிலுள்ள டப்பிகள் இருப்பதினாலும்தான்.
கிப்ஸ் டென்டிபிரிஸ்
அழகான முறையில் பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது
Gibbs
DENTIFRICE

OD. 24-172 TM

தெரிவித்துவிட்டு, அவருடைய வாதங்களுக்குப் பதிலாக, ராஜீப் பேச்சு சம்பந்தமான தந்திப் போக்குவரவுகளை மட்டும் படித்தார். விஷயாலோசனைக் கமிட்டியார் ஏறக்குறைய ஒரு முகமாக மகாத்மா அனுசரித்த முறையே சரியானது என்று ஒப்பம் வைத்தார்கள்.

இதற்கிடையில் பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய் ஆகியவர்களிடமிருந்து சிறைக்குள்ளேயிருந்து கடிதம் வந்தது. "நாங்கள் சிறையில் இருப்பதை முன்னிட்டு நீங்கள் ராஜீப் பேச்சுக்கு இணங்கவேண்டாம். போராட்டத்தை இறுதிவரை நடத்தியே தீரவேண்டும்" என்று அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

ஆகக்கூடி மகாத்மா அனுசரித்த முறைக்குக் காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் பரிபூரண ஆதரவு கிடைத்தது.

இன்னொரு பக்கத்தில் மௌலானா ஹஸரத் மோகினி என்னும் முஸ்லிம் மதத் தலைவர் காங்கிரஸ் திட்டத்தை இன்னும் தீவிரமாக்க விரும்பினார். "பிரிட்டிஷ் சம்பந்தமே அற்ற சுதந்திரமே காங்கிரஸ் இலட்சியம்" என்று மாற்ற மௌலானா ஹஸரத் மோகினி பிரேரணை கொண்டு வந்தார்.

இதைப்பற்றி மகாத்மா கடுமையாகவே பேசினார். இதைக் கொண்டு வந்தவரும் இதை ஆதரிப்பவர்களும் பொறுப்பற்றவர்கள் என்றார். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா சம உரிமையும் சுயராஜ்யமும் பெற்றால் அதன் விளைவு என்ன? இந்தியாவின் ஜனத்தொகைதானே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அதிகம்? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே நாம் ஆட்டி வைக்கலாமே?" என்று சொன்னார்.

எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதை விட்டு, இலட்சியத்தை மேலும் தீவிரமாக்கிக் கொண்டு போவதில் பயனில்லை என்பது மகாத்மாவின் கருத்து.

தேசபந்து தாஸ் சிறைப்பட்டிருந்தபடியால் அவரது தலைமைப் பிரசங்கத்தை ஸ்ரீமதி சரோஜனி தேவி வாசித்தார். ராஜீப்பேச்சு ஆரம்பிக்கும் முன்னாலேயே தேசபந்து எழுதிய பிரசங்கமாதலால் அதில் ஆவேசம் நிறைந்திருந்தது. ஸ்ரீமதி சரோஜனி தேவி வாசித்த முறையினால் அது மேலும் மகிமை அடைந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தேசபந்துதாஸ்; அவருக்குப் பதிலாக அக்கிராசனம் வகித்தவர் ஹக்கிம் அஜ்மல்கான். ஆனால் உண்மையாக ஆமதாபாத் காங்கிரசின் தலைவராக விளங்கியவர் காந்திஜி தான். அவரைச் சுற்றியே எல்லாம் சுழன்று கொண்டிருந்தன. அவருடைய ஜாகையிலேதான் முக்கியமான யோசனைகள் எல்லாம் நடந்தன. அவர் வாக்கை வேதவாக்காகக் கருதி மற்றப் பிரதிநிதிகள் பக்தியுடன் ஒப்புக் கொண்டார்கள்.

இதற்கு முன்னெல்லாம் காங்கிரஸ் மகாசபைகளில் முப்பத்திரண்டு, நாற்பத்தெட்டு என்று தீர்மானங்கள் நிறைவேறுவதுண்டு. ஆனால் ஆமதாபாத் காங்கிரஸில் ஒன்பது தீர்மானங்கள்தான் நிறைவேறின. அவற்றிலும் இரண்டுதான் மிக முக்கியமானவை.

ஒரு முக்கிய தீர்மானத்தில் இந்தியாவுக்குச் செய்யப்பட்ட அநீதிகளையும் அவற்றை நிவர்த்திக்க ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த அவசியத்தையும் சொல்லியிருந்தது. தொண்டர்களின் அமைதியான நடவடிக்கைகளை பிரிட்டிஷ் சர்க்கார் அடக்குவதற்காகக் கையாண்ட அடக்குமுறைப் பாணங்களைக் கண்டித்தது. குடிகளின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்காகப் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் தொடுத்துள்ள அடக்குமுறைச் சட்டங்களை மீறுவது தர்மம் என்றும், இதற்காகத் தொண்டர் படை அமைப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டது. தொண்டர்கள் கையெழுத்திட வேண்டிய வாக்குறுதிகளையும் வகுத்தது. மனோ வாக்கு காயங்களினால் அஹிம்சையை அனுசரிக்க வேண்டும் என்னும் நிபந்தனையில் மனதை எடுத்து விட வேண்டும் என்று சில கிலாபத் தலைவர்கள் முயன்றார்கள். இதை மகாத்மா ஒப்புக் கொள்ளவில்லை; மற்றப் பிரதிநிதிகளும் ஒப்புக் கொள்ளவில்லை.

அடுத்த முக்கிய தீர்மானம் ஒத்துழையாமை, சட்டமறுப்பு இயக்கங்களை நடத்துவதற்கு மகாத்மாவைச் சர்வாதிகாரியாக நியமித்ததாகும். சர்க்கார் அடக்குமுறை காரணமாகக் காரியக் கமிட்டியையோ அகில இந்தியக் கமிட்டியையோ கூட்டுவது அசாத்தியமாகலாம். எனவே அந்த ஸ்தாபனங்களின் அதிகாரங்கள் எல்லாம் மகாத்மாவிடமே ஒப்படைக்கப்பட்டது. மகாத்மாவையும் சர்க்கார் கைது செய்தால் தம்முடைய ஸ்தானத்தில் இன்னொருவரைச் சர்வாதிகாரியாக நியமிக்கும் அதிகாரத்தையும் மகாத்மாவுக்குக் காங்கிரஸ் கொடுத்தது.

முதலாவது முக்கிய தீர்மானத்தைப் பிரேரேபித்த போது மகாத்மா பேசிய பேச்சு பிரதிநிதிகள் — பார்வையாளரிடையே ஆவேசத்தை உண்டு பண்ணியது.

மொத்தத்தில், ஆமதாபாத் காங்கிரஸின்போது தேசிய இயக்கத்தின் உற்சாகம் இமயமலையின் சிகரத்தை யொத்து உயர்ந்திருந்தது. அடுத்த 1922-ம் வருஷம் பிப்ரவரியில் அந்த உற்சாகம் பாதாளத்துக்கே போய்விட்டது!

வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. காங்கிரஸ் பந்தல், பிரதிநிதிகளின் ஜாகைகள், - எல்லாவற்றுக்கும் மேற்கூரைக்குக் கதர்த் துணி உபயோகிக்கப் பட்டது.

காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்கும் விடுதிக்குக் "காதி நகர்" என்று பெயர் வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணப் பிரதிநிதிகளுக்கும் தனித் தனிப் பகுதிகள் விடப் பட்டன. காதி நகரின் மத்தியில் காந்திஜியின் ஜாகை அமைக்கப்பட்டது.

ராஜீப் பேச்சு சம்பந்தமான தந்திப் போக்கு வரவுக்கிடையே டிசம்பர் 22உ மகாத்மா காந்தி சபர்மதி ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டுக் காதி நகரில் தம் ஜாகைக்கு வந்து சேர்ந்தார். காங்கிரஸ் ஏற்பாடுகளை நேர்முகமாய்க் கவனிப்பதற்கும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வரும் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் கலந்து பேசுவதற்கும் சௌகரியமாயிருக்கும் என்றுதான் காதி நகருக்கு மகாத்மா காந்தி தம்முடைய ஜாகையை மாற்றிக் கொண்டார்.

22உயிலிருந்தே காதி நகரில் ஜனக் கூட்டம் நிறைய ஆரம்பித்தது. இரண்டு மூன்று நாட்களுக்குள் பிரதிநிதிகளும் பார்வையாளரும் தொண்டர்களுமாகக் காதி நகரில் ஒரு லட்சம் பேர் சேர்ந்து விட்டார்கள்.

கிலாபத் மகாநாடும் அதே இடத்தில் நடந்தபடியால் அதற்கு வேண்டிய ஜாகை வசதிகளும் செய்யப்பட்டன. காதி நகரைக் காட்டிலும் அதிக அலங்காரமாகவே கிலாபத் நகர் அமைக்கப்பட்டது.

காங்கிரஸ் மகாசபைக்கு அந்த வருஷம் தலைவராகத் தேர்ந்தெடுத்திருந்த தேசபந்து தாஸ் சிறை புகுந்து விட்டார். அவருக்குப் பதிலாக, கிலாபத் மகாநாட்டின் தலைவர் ஹக்கிம் அஜ்மல்கானே காங்கிரஸுக்கும் தலைமை வகித்தார். அந்த நாளில் ஏற்பட்டிருந்த ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காட்ட இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

ஆமதாபாத் காங்கிரஸ் நடந்த வாரத்தில் காதி நகரிலும் கிலாபத் நகரிலும் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. தேசத்தின் சுதந்திரம் இன்னும் ஒரு லட்சியமாகவே இருந்தது. ஆனால் சீக்கிரத்தில் அடையப் போகும் இலட்சியமாகக் காட்சி தந்தது. ஆகையினால் அதன் மகிமை பிரமாதமாயிருந்தது. ஒவ்வொரு மாகாணப் பிரதிநிதிகளும் இறங்கி யிருந்த பகுதியிலிருந்து காலையில் 'பிரபாத் பேரி' என்னும் காலை பஜனை கோஷ்டி கிளம்பியது. ஒவ்வொரு கோஷ்டியாரும் தத்தம் தாய் மொழியில் தேசிய கீதங்களைப் பாடிக் கொண்டு காதி நகர் முழுவதிலும் வலம் வந்தார்கள். பஞ்சாப், சிந்து, அஸ்ஸாம், ஐக்கிய மாகாணம், குஜராத், மகாராஷ்டிரம், பீஹார், ஒரிஸ்ஸா, ஆந்திரா, தமிழ், மலையாளம், கொங்கணம் ஆகிய மாகாணப் பிரதிநிதிகளின் பஜனை கோஷ்டிகள் பாடிக் கொண்டு சென்ற போது, "இது குஜராத் கோஷ்டி" "இது ஆந்திர கோஷ்டி" என்று மற்ற மாகாணத்தவர் பேசிக் கொண்டார்கள் செந்தமிழ் நாட்டில் பாரதியார் என்னும் கவி தெய்விகமான தீர்க்க தரிசனம் வாய்ந்த தேசிய கவிதைகளைப் பாடியிருக்கிறார் என்பது அப்போதுதான் சில வட இந்தியர்களுக்குத் தெரிய வந்தது. மற்ற மாகாணத்தார் இசையோடு அமைதியாக தேசிய கீதங்களைப் பாட, தமிழ் நாட்டார் மட்டும் ஆவேச வெறியோடு பாரதி கீதங்களைப் பாடிப் போவதைப் பார்த்து மற்ற மாகாணத்தார் நின்று கவனித்தனர்.

இப்படிக் காங்கிரஸ் பிரதிநிதிகள், சிதம்பரத்தின் கோபுரத்தைக் கண்டு களிப்படைந்த நந்தனைப்போல் ஆனந்த வெறி கொண்டிருக்கையில், மகாத்மாவின் விடுதியில் முக்கிய ஆலோசனைகளும் விவாதங்களும் நடந்து வந்தன. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வந்த முக்கியப் பிரதிநிதிகளிடமிருந்து அந்தந்த மாகாணத்தில் நடந்த அடக்குமுறைகளைப் பற்றியும் காங்கிரஸ் வேலைத் திட்டங்களைப் பற்றியும் காந்திஜி விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இதைத் தவிர இன்னும் இரண்டு முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன:

1. பண்டித மதன்மோகன் மாளவியாவின் ராஜீப் பிரேரணைகள்.
2. மௌலானா ஹஸரத் மோஹினி காங்கிரஸ் இலட்சியத்தைப் 'பரிபூரண சுதந்திரம்' என்று மாற்றுவதற்குக் கொண்டு வர விரும்பிய பிரேரணை.

பண்டித மாளவியாவுக்கு இன்னும் சபலம் விடாமல், ராஜீப் பிரேரணைகளை ஆமதாபாத்திலும் கிளப்புவதற்கு வந்திருந்தார். லார்ட் ரெடிங்கின் போக்கு எப்படி யிருந்தாலும் காங்கிரஸ் ராஜிக்குத் தயார் என்பதைத் தெரிவித்துவிட வேண்டும் என்று அவர் சொன்னார்.

விஷயாலோசனைக் கமிட்டியில் பண்டித மாளவியாவுக்குப் பேச இடம் கொடுக்கப் பட்டது. பண்டித மாளவியா எப்போதும் வெகு நீளமாகப் பேசுகிறவர். அதிலும் இந்தச் சந்தர்ப்பத்தில் தம்முடைய கட்சியை மிகவும் சாங்கோபாங்கமாக அவர் எடுத்துச் சொன்னார். அவரை ஸ்ரீ ஜெயகரும் ஜனாப் ஜின்னாவும் மட்டும் ஆதரித்தார்கள். மகாத்மாவோ பண்டித மாளவியாவிடம் தமது மரியாதையைத்

தம்முடைய பங்கு என்ன என்பதையும் சொல்லியிருந்தார். இந்தச் சதுரங்கத்தின் முக்கிய ஆட்டக்காரர்கள் லார்டு ரெடிங், காந்திஜி, பண்டித மாளவியா, தேசபந்து தாஸ் ஆகியவர்கள் அல்லவா?

ஸ்ரீ சியாம் சுந்தர் சக்ரவர்த்தி இது சம்பந்தமாக எழுதியதாவது :—

"நான் பண்டித மாளவியாவுடன் ராஜதானி சிறைச்சாலையின் வாசல் வரையில் சென்றேன். மாளவியா உள்ளே போனார். அங்கே தேசபந்து தாஸுடன் மாளவியாவும் தாஸின் குடும்பத்தார் சிலரும் இருந்தார்கள். மகாத்மாவின் தந்தியைக் குறித்துத் தாஸ் மிகவும் கலக்கமடைந்திருந்தார். எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தாலன்றி ராஜி செய்து கொள்வது உசிதமல்லவென்று என் அபிப்பிராயத்தைத் தெரிவித்தேன். மாளவியா மறுபடியும் போய் லார்ட் ரெடிங்கைப் பார்த்துவிட்டு வந்தார். மகாத்மாவின் தந்தி லார்ட் ரெடிங்குக்குக் கோபமூட்டி யிருப்பதாகவும் 'பர்வா' கைதிகள் விஷயமான பேச்சை எடுக்கவே லார்ட் ரெடிங் விடவில்லையென்றும் மாளவியா தெரிவித்தார். மாளவியாவும் தாஸும் எவ்வளவு மனவருத்தம் அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்த நான், என்னுடைய பொறுப்பில் மகாத்மா காந்திக்கு ஒரு தந்திச் செய்தி அனுப்புவதாகச் சொன்னேன்! தேசபந்து தாஸ் இச்சமயம் ஒரு ராஜி செய்து கொள்வதை முக்கியமாய்க் கருதுவதால் மகாத்மா புனராலோசனை செய்ய வேண்டும் என்று தந்தி அடிப்பதாய்ச் சொன்னேன். அதற்கு ஸ்ரீ தாஸ் 'என் பெயரைச் சொல்ல வேண்டாம். வங்காளத்தின் அபிப்பிராயம் இது என்பதாகத் தந்தி அடியுங்கள்' என்றார். இது வங்காளத்தின் அபிப்பிராயம் அல்லவென்னும் உண்மை எனக்குத் தெரிந்துதானிருந்தது. ஏனெனில் ஆமதாபாத் காங்கிரஸுக்குப் போகும் வழியில் கல்கத்தாவுக்கு வந்திருந்த வங்க மாகாண காங்கிரஸ் பிரதிநிதிகள் என்னைப் பார்த்துப் பேசினார்கள். இந்த நிலைமையில் ராஜிப் பேச்சை அவர்கள் விரும்பவில்லை. அரசியல் கைதிகளில் சிலரைச் சிறையில் விட்டு விட்டு மற்றவர்களின் விடுதலையைக் கோருவதையும் அவர்கள் விரும்பவில்லை. இது நன்றாகத் தெரிந்திருந்தும் தேசபந்து தாஸின் வார்த்தையைத் தட்ட முடியாமல் நான் காந்திஜிக்குத் தந்தியடித்தேன். நான் என்ன தந்தி கொடுத்தாலும் காந்திஜி எது சரியோ அதைத்தான் செய்வார் என்ற நம்பிக்கை என் மனதிற்குள் இருந்தது......"

இவ்விதம் ஸ்ரீ சியாம்சுந்தர் சக்கரவர்த்தி 1923-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் எழுதினார். மகாத்மாவிடம் ஸ்ரீ சக்கரவர்த்தியின் நம்பிக்கை வீணாகவில்லை. அவருடைய தந்திக்குப் பிறகும் மகாத்மா தம் கொள்கையிலிருந்து நகரவில்லை.

வங்காளப் பிரதிநிதிகளைப் பற்றி ஸ்ரீ சியாம் சுந்தர சக்ரவர்த்தி கூறியிருப்பது மற்ற மாகாணங்களின் பிரதிநிதிகளின் விஷயத்திலும் உண்மையாக இருந்தது. யாரும் அவசரப்பட்டு ராஜி செய்து கொள்ள விரும்பவில்லை. அதோடு காங்கிரஸ் பிரதிநிதிகள் மிகப் பெரும்பாலோர் மகாத்மாவின் தலைமையில் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவர் காட்டும் வழியைப் பின்பற்றவும் அவர் சொல்லும் திட்டத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் ஒப்புக் கொள்ளவும் நாடெங்குமுள்ள காங்கிரஸ் வாதிகள் தயாரா யிருந்தார்கள். மகாத்மாவிடம் காங்கிரஸ் வாதிகளுக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது என்று ஆமதாபாத் காங்கிரஸில் நன்கு வெளியாயிற்று.

*   *   *

ஆமதாபாத் காங்கிரஸ் பல அம்சங்களில் மிகச் சிறப்புக் கொண்டதாகும். புதிய காங்கிரஸ் அமைப்பின்படி நடந்த முதலாவது காங்கிரஸ் அதுதான். முன்னேயெல்லாம் யார் வேணுமானாலும் வரையறையின்றிக் காங்கிரஸ் பிரதிநிதிகளாக வந்து விடலாம். ஆனால் புது அமைப்பின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே ஆமதாபாத் காங்கிரஸுக்கு வந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் ஒத்துழையாமை இயக்கத்துக்காக மகத்தான தியாகங்களைச் செய்த தேசபக்தர்கள். பிரதிநிதிகள் ஆறாயிரம் என்று வரையறுக்கப்பட்டபடியால் காரியங்களை நடத்துவது இலகுவா யிருந்தது. அதே சமயத்தில் லட்சக் கணக்கான பார்வையாளர்கள் வந்து நடவடிக்கைகளைக் கவனிக்கவும் வசதி செய்யப் பட்டிருந்தது.

ஆமதாபாத் மகாத்மாவின் சொந்த ஊர். சத்தியாக்கிரஹ ஆசிரமம் இருந்த சபர்மதி நதிக்கரையிலேதான் காங்கிரஸும் நடந்தது. மகாத்மாவின் செல்வாக்கு இணையற்றிருந்த காலம். ஆகையால் கங்குகரையில்லாத உற்சாகத்துடனே காங்கிரஸ் ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் எல்லா ஏற்பாடுகளும் மகாத்மா காந்தியின் விருப்பத்தின்படி நடைபெற்று வந்தன.

நாகபுரி காங்கிரஸில் நாற்காலிகளுக்காக மட்டும் 70,000 ரூபாய் செலவாயிற்று. ஆமதாபாத்தில் பிரதிநிதிகளும் பார்வையாளரும் தரையிலேயே உட்கார

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

34. சர்வாதிகாரி காந்தி

பண்டித மாளவியாவும் மற்றும் சில மிதவாதப் பிரமுகர்களும் ஒரு கோஷ்டியாகச் சென்று டிசம்பர் 21வ லார்டு ரெடிங்கைப் பேட்டி கண்டார்கள். லார்டு ரெடிங் அவர்களுடைய ராஜி மனப்பான்மையை மிகவும் பாராட்டினார். இந்த மாதிரியே மற்ற இந்தியத் தலைவர்களும் நடந்து கொண்டால் ஒரு தொல்லையும் இல்லையென்றும், தம்முடைய சர்க்காரும் ராஜிக்குத் தயாராயிருப்பார்கள் என்றும் கூறினார். ஆனால் அந்த மிஸ்டர் காந்தி இவ்வளவு வெறும் பிடிவாதமாக இருக்கும்போது நாம் என்ன செய்ய முடியும் என்று சொல்லி அகலக்கையை விரித்தார்.

டிசம்பர்மீ 24வ வேல்ஸ் இளவரசர் கல்கத்தாவுக்கு விஜயம் செய்தபோது அந்த மாபெரும் நகரில் பரிபூரண ஹர்த்தால் நடைபெற்றது. அன்று கசாப்புக் கடைக்காரர்கள் கூடக் கடையை மூடி வேலை நிறுத்தம் செய்தார்கள்.

மிதவாதிகளின் ராஜிப் பேச்சுக்கு லார்ட் ரெடிங் செவி சாய்ப்பது போல் நடித்ததின் நோக்கம் டிசம்பர் 24வ கல்கத்தாவில் வேலை நிறுத்தம் நடைபெறக் கூடாது என்பதுதான். அந்தச் சூழ்ச்சி பலிக்காமற் போயிற்று. எனவே அதற்குப் பிறகு லார்ட் ரெடிங்கும் ராஜிப் பேச்சுகளில் எவ்விதமான சிரத்தையும் காட்டவில்லை.

ஆனால், பாவம், பண்டித மாளவியாஜியின் சபலம் இன்னும் அவரை விட்ட பாடில்லை. ஆமதாபாத் காங்கிரஸுக்குச் சென்று அங்கேயும் ராஜி யோசனை மூட்டையை அவிழ்த்தார். பிற்பாடு 1922-ம் வருஷம் ஜனவரி மாதத்தின் மத்தியில் பம்பாயில் மிதவாதிகள் ராஜிப் பேச்சு மகாநாட்டைக் கூட்டினார்கள். இவற்றைக் குறித்துப் பின்னால் பார்க்கலாம்.

• • •

ராஜி முயற்சிகள் என்னும் லார்ட் ரெடிங்கின் இராஜ தந்திர சூழ்ச்சிப் படலம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், ஆமதாபாத் காங்கிரஸுக்கு மகத்தான ஏற்பாடுகள் மற்றொரு பக்கம் நடந்து கொண்டிருந்தன. மேற் கூறிய ராஜி முயற்சிகளைப் பற்றித் தேசத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பெரும்பாலோருக்கு ஒன்றும் தெரியாது. அவர்களுடைய கவனமெல்லாம் ஆமதாபாத்தில் கூடும் காங்கிரஸ் மகாசபையில் என்ன முடிவுகள் ஆகப் போகின்றனவோ என்பதிலேயே சென்றிருந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆமதாபாத்தை நோக்கிப் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ரயிலேறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த சமயத்தில் ராஜி முயற்சிகளைப் பற்றிச் சில செய்திகள் அரைகுறையாகக் கிடைத்தன. ஆனால் பிரதிநிதிகள் யாருமே ராஜிப் பேச்சை அச் சமயத்தில் விரும்பவில்லை. வங்காளத்திலிருந்து சென்ற பிரதிநிதிகள் கூட விரும்பவில்லை.

இதை, வங்காளத்தின் பெயரால் மகாத்மாவுக்குத் தந்தி அனுப்பிய ஸ்ரீ சியாம சுந்தர் சக்ரவர்த்தியே பின்னால் ஒப்புக் கொண்டார். 1923-ம் வருஷத்தில் மேற்படி கல்கத்தா ராஜி முயற்சி பற்றி ஒரு விவாதம் பத்திரிகைகளில் எழுந்தது. மகாத்மா காட்டிய பிடிவாதத்தினாலேயே காரியம் கெட்டுப் போய்விட்டது என்றும், இல்லாவிடில் அப்போதே வெற்றி கிட்டியிருக்கும் என்றும் சிலர் சொன்னார்கள். பத்திரிகைகளில் இதைப் பற்றிக் காரசாரமாக விவாதம் நடந்த போது ஸ்ரீ சியாம சுந்தர சக்ரவர்த்தி 1923 ஜூன் 19வ வெளியான தமது "ஸர்வெண்ட்" பத்திரிகையில் "என்னுடைய பலவீனத்தை ஒப்புக் கொள்கிறேன்" என்ற தலைப்புக் கொடுத்து ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் 1921-ம் வருஷக் கடைசியில் நடந்த சதுரங்கப் போராட்டத்தைப் பற்றி விவரமாக எழுதி, அதில்

சந்தோஷம். உலகிலே எண்ணியபடி எல்லாம் நடந்து விட்டால் அப்புறம் கடவுள் எதற்கு அம்மா? நான் ஆற்றிலே மடிய வேண்டி இருந்தது, மடிந்து போனேன். அது என் விதி..... நான் போகிறேன்" என்று கூறிப் படகைச் செலுத்தினான் மீனவராஜா.

"அப்பா, போகாதே!" என்று கூறிய வண்ணம் அலறிப் புடைத்துக்கொண்டு படுக்கையைவிட்டு எழுந்தாள் பொன்னம்மாள். தான் சற்று முன்பு தந்தையைச் சந்தித்தது வெறும் கனவு என்று விளங்க அவளுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை.

"விதியின் விளையாட்டே" என்று விஜயன் தினமும் பாடிச் செல்லும் பாட்டின் பொருளை மனதுருகிச் சிந்திக்கலானாள். தன் தகப்பனார் கனவில் தோன்றிக் கூறிய புத்திமதிகளையும் எண்ணிப் பார்த்தாள் பொன்னம்மாள்.

4

மறுநாள் காலை. பொன்னம்மாள் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு வழக்கம்போல் ஜன்னலின் அருகில் அமர்ந்திருந்தாள். அன்றைக்கு உதயமான சூரியன் என்றுமில்லா ஜோதியுடன் உதயமானது போல் அவளுக்குத் தோன்றியது.

விஜயனின் இனிய குரலிலிருந்து தோன்றிய 'விதியின் விளையாட்டே' என்ற பாட்டு காற்றிலே மிதந்து வந்து பொன்னம்மாளின் காதில் பாய்ந்து ரீங்காரம் செய்தது. விஜயன் வழக்கப்படி ஜன்னல் அருகில் வந்ததும் பொன்னம்மாளைப் பார்த்தான். அவள் தன் தளிர்க்கரத்தை ஜன்னலுக்கு வெளியே நீட்டிப் படகை நிறுத்தும்படி சைகை காட்டினாள். மறுகணம் மானைப் போல் துள்ளி ஓடிச் சென்று விஜயனின் படகிலே ஏறிக் கொண்டாள். படகு தண்ணீரில் மிதந்து சென்றது.

இந்தக் காட்சியை வீட்டின் ஜன்னல் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பொன்னம்மாளின் அத்தை, "விஜயன் ரொம்பவும் கெட்டிக்காரன்! எப்படியோ சொக்குப் பொடி போட்டு மயக்கிவிட்டான். 'நல்ல நாள்' பார்த்துக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தான். அப்பாடி! என் மனம் இப்பொழுதுதான் குளிர்ந்தது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

பொன்னம்மாளும் விஜயனும் ஆற்று நீரில் ஆடி அசைந்து அழகாகச் சென்று கொண்டிருந்த படகில் உல்லாசமாகப் பேசிக் கொண்டே போனார்கள்.

காலக்ஷேபம்

புத்திசாலி!

ராமு:—அப்பா, கடவுள் ரொம்பப் புத்திசாலி!

அப்பா:—ஏன்?

ராமு:—மூக்குக் கண்ணாடியைக் கண்டு பிடிப்பதற்குப் பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே, அதை மாட்டக் காதைச் சிருஷ்டித்து விட்டார் அல்லவா?

★

சபாஷ்!

எஜமான் (தமது கார் டிரைவரின் மகனைப் பார்த்து):—நான் யார் தெரியுமா?

பையன்:—ஓ! தெரியுமே! நீங்கள் என் அப்பாவின் காரில் சவாரி செய்கிறவர்!

★

ஒற்றுமை

போர்ட்டர்:—ஐயா, பெட்டியையும் படுக்கையையும் இப்படி என்னிடம் கொடுங்கள்.

அவர்:—வேண்டாம், அப்பா! நானே தூக்கிக் கொண்டு போகிறேன்.

போர்ட்டர்:—ஒரு காலணா என்னிடம் இருந்தால் உங்களைக் கெஞ்சுவேனா?

அவர்:—அந்த காலணாக் காசு என்னிடம் இருந்தால் இப்படிப் பெட்டியையும் படுக்கையையும் சுமந்து செல்வேனா?

★

சோம்பலா?

அப்பா:—சுப்பு, இன்றைக்கு உபாத்தியாயர் உன்னை அடித்தாராமே, ஏன்?

சுப்பு:—சோம்பல் என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொன்னார் உபாத்தியாயர். நான் அவரிடம் வெறும் தாளைக் கொண்டு போய்க் கொடுத்தேன், அப்பா!

★

சரிதான்!

பட்டணத்தில் ஒரு வீட்டில் ஓடு சரியாக மாற்றப்படாமையால், மழை பெய்யும்போது ரொம்ப ஒழுகிற்று. அந்த வீட்டில் குடியிருந்த ஒருவர் இரவு முழுவதும் அவஸ்தைப் பட்டுவிட்டு, விடியற்காலம் எழுந்திருந்து வாசற் பக்கம் வந்தார். அப்போதுதான் வீடு கூட்டும் வேலைக்காரியும் மழையில் நனைந்து கொண்டு வந்தாள்.

அவர் (அவளைப் பார்த்தவுடன்):—அம்மா, இந்த வீட்டில் எந்த அறையில் நீங்கள் இருக்கிறீர்கள்?

விருதுநகர் ஹிந்து நாடார்கள்

செந்திக்குமார நாடார் காலேஜ் கட்டிட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

○●○

சங்கீத ரத்ன ஸ்ரீ. டி. சௌடய்யா ... வயலின்
கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ... மிருதங்கம்
ஆலங்குடி ஸ்ரீ ராமசந்திரன் ... கடம்

○●○

9 - 4 - 1950 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

விருதுநகர் க்ஷத்திரியப் பெண் பாடசாலையில் அமைக்கப் பட்டிருக்கும் விஸ்தாரமான பந்தலில் நடைபெறும்

டிக்கட்டுகள்: ரூ. 250, 100, 50, 25 & ரூ. 10

நிர்வாகக் கமிட்டியார்.



Jasmine

TOILET SOAP

பாஸ்வா - ஜாஸ்மின்
ஸ்னான சோப்பு

NAS 446

பொன்னன மேனியும் குன்றாத குதூகலமும்......

முகம் கழுவினாலும், கைகளை அலம்பினாலும் வழக்கமாக ஸ்னானம் செய்தாலும் பாஸ்வா ஜாஸ்மின் சோப்பை உபயோகியுங்கள். வெண்மையான நுரை சருமத்தை மிருதுவாகவும் பளபளப்பாகவும் ஆக்குவதுடன் அதன் நறுமணம் நாள் முழுதும் உங்களை உற்சாகமுடன் இருக்கச் செய்யும்.

இன்றே ஒரு சோப் வாங்குங்கள்

பம்பாய் சோப் பாக்டரி
பம்பாய்
(ஸ்தாபிதம்: 1904)

ஏஜண்டுகள்
ஜெய் ஹிந்த் ஏஜன்ஸீஸ்
2, 8, ராஜா தெரு, ஜி. டி., மதராஸ்

வந்தது. அவர்கள் காதல் மூடுமந்திரமில்லாமல் பகிரங்கமாகவும் இருந்தது. அந்த வெண்ணெயாற்றங் கரையிலே ஒரு காளி கோவில் இருந்தது. அந்தக் கோவிலுக்கு அருகில் ஒரு ஆலமரம். அதன் அடியிலே தான் விஜயனும் பொன்னம்மாளும் வழக்கமாகச் சந்திப்பார்கள்.

3

"பொன்னம்மா, விஜயன் சொன்னதிலே என்ன தப்பு இருக்கிறது? உங்க அப்பாவின் விதிதான் அப்படி இருந்தது. எவ்வளவோ பேரு ஆற்றிலே படகு விடவில்லையா என்ன? வீணாகப் பிடிவாதம் செய்யாதே. பிறகு உன் இஷ்டம்" என்று அலுத்துக் கொண்டாள், அத்தை. அவள் விஜயனிடமிருந்து விஷயத்தைத் தெரிந்து கொண்டு வந்திருந்தாளாதலால் பொன்னம்மாள் படும் மன வேதனைக்குக் காரணம் அவளுக்கு விளங்கிவிட்டது.

விஜயனிடம் சண்டையிட்டுக் கொண்டு வந்த பிறகு பொன்னம்மாள் வெளியே தலை காட்டவேயில்லை. வீட்டின் ஜன்னலருகில் உட்கார்ந்து காலம் கடத்தி வந்தாள்.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு ஒரு நாள், "விதியின் விளையாட்டே" என்ற பாட்டு காற்றிலே மிதந்து வந்து ஜன்னல் அருகில் அமர்ந்திருந்த பொன்னம்மாளின் காதில் பாய்ந்தது. மறு விநாடி பொன்னம்மாள் தன் பார்வையை ஆற்றுப் பக்கம் திருப்பினாள். விஜயன் பாடிக்கொண்டே வெண்ணையாற்றில் படகைச் செலுத்திக் கொண்டு போவதைக் கண்டாள். விஜயனின் படகு பொன்னம்மாளின் வீட்டுக்குச் சமீபத்தில் வந்ததும் அவன் கண்கள் சொல்லி வைத்தாற்போல் ஜன்னலை நோக்கின. பொன்னம்மாளின் கண்களும் விஜயனின் கண்களைத் தேடிப் பிடித்துவிட்டன! இருந்தாலும், விஜயன் தன்னுடைய வார்த்தைகளைக் கேட்கவில்லையே என்று அவனிடம் அசாத்தியக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது, அவளுக்கு.

தினப்படி காலையிலும் மாலையிலும் விஜயன் அந்த வழியாக வரும்போதும் போகும்போதும் பாடிக்கொண்டே பொன்னம்மாளை உற்று நோக்கிக் கொண்டு செல்வான். அவனை அவளும் நோக்குவாள். அச்சமயம் அவள் மனம் வேதனைப்படும். விஜயனின் விஷயமாக எப்படித் தீர்மானம் செய்வது என்று அவளுக்கு விளங்கவில்லை. இப்படி இருவர் காதலும், ஊமைக் காதலாகச் சில நாட்கள் இருந்தன!

பொன்னம்மாள் ஆற்றங்கரையிலே நின்று கொண்டிருந்தாள். "பொன்னம்மா, இங்கே வா" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள்; எத்தனையோ வருஷம் கேட்டுப் பழகிய குரல். தகப்பனார் மலைராஜா ஆற்றிலே மிதந்த படகில் நின்று கொண்டிருந்தார். பொன்னம்மாள் ஆவலுடன் தந்தையை நோக்கிக் கரை ஓரம் சென்றாள். "அப்பா, இத்தனை நாள் என்னைத் தவிக்கவிட்டு எங்கே போயிருந்தாய்?" என்று கேட்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. ஆனால் தந்தையைக் கண்டுவிட்ட சந்தோஷ மிகுதியினால் அவள் தொண்டை அடைபட்டு விட்டது. ஒரு வார்த்தைகூட அவளால் பேச முடியவில்லை. அப்போது அவள் தந்தை அவளை ஆசீர்வதிப்பது போல் தன்னுடைய வலிமை பொருந்திய கரத்தை உயர்த்தி, "பொன்னம்மா! விஜயனைப் போன்ற நல்ல புருஷன் உனக்குக் கிடைப்பது கஷ்டம். அவனையே நீ கல்யாணம் செய்துகொண்டு சௌக்யமாக இருப்பதைப் பார்க்க எனக்கு



டாக்டர்:—நாங்கள் தினந்தோறும் ராத்திரி வேளைகளில் ஏதோ பயங்கரக் கனவு காண்பதாகச் சொன்னீர்களே, அது என்ன?

வந்தவர்:—எனக்குக் கல்யாணம் நடப்பது போல் கனவு காண்கிறேன்!

டாக்டர்:—யாருடன் கல்யாணம் நடப்பது போல்?

வந்தவர்:—என் மனைவியுடன்தான்!

நடந்தான். முன்பிருந்த அழுகைக் காட்டிலும் பொன்னம்மாளின் அழுது பன்மடங்கு அதிகமாக இப்பொழுது நிகழ்ந்தது. ஆனால் அப்போதும் அவள் குழந்தைச் செய்கைகள் அவளை விட்டு அகலவே யில்லை. காலையில் தந்தையுடன் சென்று அவரை விட்டுவிட்டு வருவதும், மாலை வேளையில் ஆற்றங் கரையில் காத்திருந்து தந்தையை வீட்டுக்கு அழைத்து வருவதும் அவளது தினசரி வேலைகளாகி விட்டன.

ஒரு நாள் மாலை. வழக்கம்போல் சூரியன் அஸ்தமனமானான். "அப்பா ஏன் இன்னும் வரவே யில்லை?" என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டு ஆற்றங் கரையிலே காத்திருந்தாள் பொன்னம்மாள். இருள் கவ்விக் கொண்டு வந்தது. பொன்னம்மாளால் மேலும் அங்கிருக்க முடியவில்லை. வீட்டுக்குச் சென்று மலைராஜா வரும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள். இரவு மணி எட்டு.. ஒன்பது...பத்து என்று வேகமாக ஓடியது. மலைராஜா வரவே யில்லை. உடனே பொன்னம்மாள், "அத்தை, என் அப்பா இன்னும் வரவில்லை? எங்கே போயிருப்பார்?" என்று கேள்வி மேல் கேட்டு நச்சரித்தாள், குழந்தையைப் போல. அவள் அன்று இரவு சாப்பிடவே யில்லை; தூக்கமும் இல்லை! பாவம், அத்தைக்கு மட்டும் எப்படித் தெரியும், மலைராஜா எங்கே போனான் என்று?

ஒரு தினம்...இரண்டு தினம்...ஒரு வாரமும் பறந்தோடிவிட்டது. பொன்னம்மாளின் அருமைத் தந்தை மலைராஜா வீட்டுக்கு வரவேயில்லை.

"மலைராஜா எங்கேயோ எக்கச்சக்கமாகச் சுழலில் அகப்பட்டுக் கொண்டான் போலிருக்கிறது. பாவம், ரொம்ப நல்லவன். பெண்ணைத் தவிக்க விட்டுப் போய் விட்டானே!" என்று அந்த வட்டாரத்திலுள்ள மற்ற படகோட்டிகள் எல்லோரும் பரிதாபப்பட்டுப் பேசிக்கொண்டார்கள்.

தன்னுடைய அருமைத் தகப்பனார் வீடு திரும்பவில்லையே என்று பொன்னம்மாள் அழுதாள், புரண்டாள், பசுங் கொடிபோல் துவண்டு போனாள்.

• • •

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவளுக்கு வெண்ணெயாற்றங் கரையிலே இருப்பதற்கு வேம்பாகக் கசந்தது. முன்பு எவ்வளவுக்கு எவ்வளவு வெண்ணெயாற்றைக் கண்டு ஆனந்தித்தாளோ அவ்வளவுக்கும் இப்போது அதை வெறுத்தாள். படகுகளைப் பார்க்கவும் அவள் கண்கள் கூசின. படகை ஓட்டுபவர்களைக் கண்டாலும் வெறுப்பாக இருந்தது. இதே காரணத்தினால்தான் விஜயனையும் ஆற்றிலே படகு ஓட்டும் தொழிலை ஆரம்பிக்கக் கூடாது என்று அவள் பிடிவாதமாகக் கூறினாள்!

பொன்னம்மாளின் அத்தை அவளை மிகவும் அக்கறையுடன் கவனித்து வந்தாள். நல்லவனாகப் பார்த்து ஒருவனுக்குக் கல்யாணம் செய்துவிட்டால் தன் பொறுப்பும் கடமையும் தீர்ந்துவிடுமென்று அந்த நல்ல காலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொன்னம்மாளின் கயல் மீன்களைப் போன்ற கண்களையும், தாமரை முகத்தையும் கண்டு மயங்கிய வாலிபர்கள் அவளை மணந்து கொள்ளத் தயாராக முன் வந்தனர். அவர்கள் எல்லோரும் ஆற்றிலே படகு ஓட்டுகிறவர்கள் என்ற காரணத்தைக் காட்டிப் புறக்கணித்து வந்தாள் பொன்னம்மாள். "படகு ஓட்டுபவர்களையே நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்" என்று பொன்னம்மாள் அத்தையிடம் மனதை விட்டும் கூறிவிட்டாள். இதைக் கேட்ட அவள் அத்தையும் என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்தாள்.

பொன்னம்மாள் வசித்து வந்த ஆற்றங் கரைப் பிரதேசத்துக்கு அடுத்தாற் போலுள்ள கடைத் தெருவுக்கு அவள் அடிக்கடி செல்வது வழக்கம். அங்கே அவள் தூரபந்துவான விஜயன் சின்னக் கடை ஒன்று வைத்து வியாபாரம் செய்து வந்தான். அவன் சில மாதங்களுக்கு முன்புதான் ராணுவத்திலிருந்து விலகி வந்தவன். கையிலே வைத்திருந்த பணத்தைக் கொண்டு வியாபாரம் நடத்தி வந்தான். ராணுவத்துக்குச் சென்று வந்தவனாகையினாலே சற்று நாகரிகமாகக் காணப்பட்டான். இயற்கையிலே அவன் நல்லவனும் கூட. ஒரு நாள் அவன் கடையில் ஏதோ சாமான் வாங்குவதற்கு வந்திருந்த பொன்னம்மாளை, அவன் குசலம் விசாரித்தான்; அவளும் அவனைக் குசலம் விசாரித்தாள். அவனுடைய கனிவான பேச்சு அவளைக் கவர்ந்துவிட்டது. அப்போதே அவள் தன் மனதை அவன் வசம் பறிகொடுத்து விட்டாள். தன்னுடைய விருப்பப்படி வாழ்க்கைக்கு ஏற்ற துணைவன் அவன்தான் என்றும் அவள் மனப்பூர்வமாகத் தீர்மானம் செய்து கொண்டாள்.

விஜயன் - பொன்னம்மாளின் காதல் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து

பணக்காரன்தான். ஆற்றங்கரை ஓரத்திலிருந்த அந்தக் குன்றுப் பிரதேசத்தை விலைக்கு வாங்கி அதன்மேல் வீடு கட்டிக் கொண்டு வசித்து வந்தான். மலைபோல் மேடான பிரதேசத்தில் வீடு இருந்ததினாலே அவனை 'மலை ராஜா' என்று அந்த வட்டாரத்தினர் அழைத்து வந்தனர்.

பொன்னம்மாளின் குழந்தைப் பருவத்திலேயே அவள் தாயார் காலமாகிவிட்டாள். தாயில்லாக் குழந்தையை மிகவும் அக்கறையுடன் மலைராஜா கவனித்து வந்தான். மறுமணம் செய்து கொள்ள அவன் விரும்பவில்லை. ஒத்தாசைக்காக அவனது தங்கை அவன் வீட்டில் வந்து இருந்துகொண்டு எல்லாவற்றையும் கவனித்து வந்தாள். மலைராஜாவே தாயும் தந்தையுமாக இருந்து குழந்தையை மிகவும் பரிவுடன் வளர்த்து வந்தான். குழந்தையும் அவனிடம் ரொம்பப் பிரியமாயிருந்தது.

காலையில் அப்பா படகோட்டச் செல்லும் போது கூடவே குழந்தை பொன்னம்மாளும் ஆற்றங்கரை வரையிலும் செல்லுவாள். அவன் படகிலே ஏறிக் கொண்டதும், தன்னுடைய சின்னஞ்சிறு கைகளை மேலே உயர்த்தி, "அப்பா, சீக்கிரம் வந்து விடு அப்பா!" என்று அவனிடம் கூறுவாள்.

பொன்னம்மாளின் கனிவு நிறைந்த மழலைச் சொற்களைக் கேட்டு மலைராஜா மகிழ்ந்து போவான். அவன் தோளில் புதிய தெம்பு உண்டாகிவிடும்.

மாலையில், விதவிதமான ஆடைகளால் தன்னை அலங்கரித்துக் கொள்வாள், பொன்னம்மாள். ஜன்னல் அருகில் உட்கார்ந்து சூரியன் எப்போது அஸ்தமனமாவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். படகை ஓட்டிக்கொண்டு வரும் மலைராஜா தூரத்தில் வருவதைப் பார்த்தவுடன் வீட்டிலிருந்து கிளம்பி மான் குட்டிபோல் துள்ளி ஓடி ஆற்றங்கரையை அடைவாள். மலைராஜாவும் படகைக் கரையிலே நிறுத்திக் கட்டிவிட்டுத் தன் அருமைக் குழந்தைக்காக வாங்கி வந்த விளையாட்டுப் பொம்மையையோ, தின்பண்டத்தையோ கையிலே கொடுத்து அன்புடன் வாரி அணைத்துக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடப்பான்.

* * *

காலப் பறவை வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. குழந்தையாக இருந்து விளையாடித் திரிந்து கொண்டிருந்த பொன்னம்மாள் இப்போது குமரியாகத் துள்ளி



மலை ராஜா

சாம்ராஜ்

"பொன்னம்மா, வியாபாரம் கையைப் பிடிக்கிறது. கடையை மூடிவிட்டுப் பழையபடி வெண்ணெயாற்றிலே படகு விடலாமென்று பார்க்கிறேன்" என்று சொன்னான் விஜயன்.

ஆலமரத்தின் வேரின் மேல் சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்த பொன்னம்மாள் விஜயனின் வார்த்தையைக் கேட்டதும் அப்படியே பதறிப் போனாள்.

"ஏன், வியாபாரம் மந்தமாக இருக்கிறதா? அதுபோனால் போகட்டும், நீ வெண்ணெயாற்றிலே மட்டும் படகு ஓட்ட வேண்டாம். அது எனக்குப் பிடிக்கவில்லை. பயமாக இருக்கிறது. வேறே ஏதாவது செய்தால் போகிறது" என்றாள் பொன்னம்மாள், மிகவும் நடுக்கமான குரலில்.

"அட பைத்தியமே! உங்கப்பாவினுடைய விதி அப்படி இருந்தது. அதுக்காக நான்கூட ஆற்றிலே படகு விடக்கூடாதா, என்ன?"

"நான் வேண்டாம் என்று சொன்னால் நீ கேட்கமாட்டாயா?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டாள் அவள்.

"இந்த வெண்ணெயாறு என்னை என்ன தான் செய்கிறது என்று பார்க்கிறேன். நான் படகு ஓட்டத்தான் போகிறேன்" என்று பிடிவாதமாகக் கூறினான் விஜயன்.

"நான் சொல்கிறேன், நீ படகு ஓட்டக் கூடாது" என்றாள் அவளும் பிடிவாதமாக.

"இல்லை, நான் படகுதான் ஓட்டப் போகிறேன்" என்றான் அவனும் பிடிவாதத்துடன்.

மகுடியின் நாதத்துக்குக் கட்டுப் பட்ட நாகம் போல் என்றுமே அவளுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, சாதுவாகி அடங்குவான் விஜயன். அன்று அவன் தன் வார்த்தையைத் தட்டிப் பேசுவதைக்கண்ட பொன்னம்மாளுக்குக் கோபத்துடன் அழுகையும் வந்து விட்டது. அவளது அழகிய கண்களில் கண்ணீர் பெருகியது. கோபத்தினால் குவிந்த அவள் கன்னங்கள் சிவந்தன. அங்கே நின்று கொண்டிருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. வழக்கமாகச் சந்தித்து விட்டுப் பிரியும் போது ஆயிரம் தடவைக்கு மேல் விஜயனிடத்தில் சொல்லிக் கொண்டு விடை பெற்றுக் கொள்ளும் பொன்னம்மாள் அன்று அவனிடம் பதில்கூடப் பேசாமல் வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள்.

விஜயன் மரத்தடியில் நின்று கொண்டு, "பொன்னம்மா, இங்கே பாரு!" என்று ஆனமட்டும் அழைத்தான். அவள் திரும்பிக் கூடப் பார்க்காமல் விடுவிடென்று நடந்தாள்.

அந்த ஆற்றங்கரை ஓரத்திலே ஒரு மேடான பிரதேசம். பார்ப்பதற்குக் குன்று போல் தோற்றம் அளிக்கும். அதன் உச்சியில்தான் பொன்னம்மாளின் வீடு இருந்தது. அந்த வீட்டைத் தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு அழகிய மலைக்கோட்டையைப் போல் காட்சி யளிக்கும்.

கண்ணும், கண்ணீருமாகப் பொன்னம்மாள் வீட்டுக்குச் சென்றாள். வாசலில் இருந்த அவள் அத்தை, "பொன்னம்மா, என்னடி அம்மா இது? ஏன் அழுகிறாய்? இவ்வளவு நேரம் இரண்டு பேரும் மரத்தடியில் பேசிக் கொண்டிருந்தீர்களே! இதற்குள்ளே என்னம்மா சண்டை?" என்று பரபரப்புடன் கேட்டாள். தன்னுடைய புடவையின் தலைப்பினால் அவள் கண்ணீரைத் துடைத்து விட்டாள். பொன்னம்மாள் பதில் ஒன்றும் கூறாமல் விம்மி விம்மி அழுத வண்ணம் ஆற்றங்கரைப் பக்கத்தில் அமைந்துள்ள ஜன்னல் அருகில் போய் உட்கார்ந்து கொண்டு ஆற்றங்கரைப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள்.

பொன்னம்மாளின் அத்தை மேலும் அவள் அருகில் வந்து "என்னடி அம்மா விஷயம்?" என்று கேட்டாள். பொன்னம்மாள் பதில் பேசாமல் மௌனமாக இருந்ததினால் விஜயனிடமே விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்காகச் சென்று விட்டாள் அவள் அத்தை.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வெண்ணெயாற்றையே பார்த்துக் கொண்டிருந்தாள் பொன்னம்மாள். அதோ! தலையிலே தலைப்பாகையுடனும் முகத்திலே கம்பீரமான மீசையுடனும், ஆஜானுபாகுவான ஒரு மனிதன் படகிலே நின்று கொண்டு, நீண்ட மூங்கில் கழியைத் தண்ணீரில் செலுத்திப் படகை விடுகிறான். இந்தக் காட்சி பொன்னம்மாளின் கண் முன்னால் சலனப் படம்போல் தோன்றியது. அந்த உருவத்தைப் பார்த்ததும் பொன்னம்மாளுக்கு "அப்பா!" என்று வாய்விட்டு அழைக்க வேண்டும்போல் தோன்றியது.

2

பொன்னம்மாளின் தகப்பனார் ராஜா வெண்ணெயாற்றங் கரையிலே வசிக்கும் படகோட்டிகளை எல்லாம் விடச் சற்றுப்

நடந்து போகிறான். பூந்தோட்டங்கள் இரு பக்கங்களிலும் வெகு தூரம் அலங்காரமாய்க் கிடக்கும். வெகு அழகான மாளிகைகளும் ஆங்காங்கு நிற்கும்.

சாதாரண காலங்களில் ராவணன் நடந்து போகும்போது பூந்தோட்டங்களின் அழகைப் பார்த்து அனுபவிப்பான். அப்படியே மாளிகைகளின் பல திறப்பட்ட அழகையும் பார்த்து அனுபவிப்பான். பக்கத்திலுள்ள அறிஞர்களோடு அவைகளைப் பற்றிப் பேசி அளவளாவுவதும் உண்டு. இது சாதாரணமாக நடக்கிற காரியம்.

தோல்வியுற்று வந்த இன்று என்ன செய்தான்:

மாதிரம் எவையும்நோக் கான்,
வளநகர் நோக்கான்வந் த

காதலர் தம்மைநோக் கான்,
கடற்பெரும் சேனைநோக் கான்,

தாதவிழ் கூந்தல்மா தர்
தனித்தனி நோக்கத்,தான் அப்

பூதலம் என்னும்நங் கை
தன்னையே நோக்கிப்புக் கான்.

[மாதிரம் எவையும் நோக்கான்: திசைகளோடு எட்டித் தோன்றும் எதையும் பார்க்கவில்லை; வளநகர் நோக்கான்: அழகிய மாளிகைகளைப் பார்த்து அனுபவிக்கவில்லை; வந்த காதலர் தம்மை நோக்கான்: வரவேற்க ஆசையோடு வந்த பிள்ளைகளை நோக்கவில்லை; கடல்பெரும் சேனை நோக்கான்: பக்கத்தில் அணிவகுத்து நிற்கும் எடுப்பான பரந்த சேனையை நோக்கவில்லை.

பின் என்ன செய்தான்? தாது அவிழ் கூந்தல் மாதர் தனித் தனி நோக்க: பூச்சூடிய பெண்டுகள் சேர்ந்து சேர்ந்து ராவணனுடைய சௌகரியத்தைப் பார்த்துப் பேசிக் களிப்பது வழக்கம். ராவணனும் அவர்களைப் பார்த்துப் பேசி மகிழ்ச்சியோடு நடப்பது வழக்கம். இன்று அந்த மகளிர் கவலையில் ஆழ்ந்தவர்களாய் ராவணன் நடந்து வருவதைத் தனித் தனியாகவே பார்க்கிறார்கள்;— ராவணனும் அப் பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்: அதாவது தரையைப் பார்த்த வண்ணமாகவே நடந்து போனான்.]

ராவணனோடு நாமும் நடந்து போகிறோம். அப்படியிருக்கிறது கம்பர் காட்டும் காட்சி.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

285. தரையை நோக்கியே நடந்தான்!

முதல் நாள் போர் நடந்தது. ராவணனுடைய தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை எல்லாம் ராம பாணங்களால் இருந்த இடம் தெரியாமல் எங்கெல்லாமோ சிதறிப் போய்விட்டன.

வில் ஒடிந்தது, வாள் முறிந்தது, கிரீடமும் எங்கேயோ போய் விழுந்தது; எல்லாம் ராமபாணம் செய்த வேலைதான்!

தன்னந் தனியாய்ப் போர்க்களத்தில் நின்றான் ராவணன்.

அந்த நிலையைப் பார்த்து ராமனுக்கு இரக்கம் வந்தது. அம்பு தொடுத்து ராவணனின் உயிரை அப்படியே வாங்கி விடலாம்தான். அப்படிச் செய்யவில்லை. ராவணனை வீட்டுக்குப் போய் மறுநாள் வரச்சொன்னான், போர் புரிவதற்காக.

ராவணனுக்குத் தோல்வியால் வந்த அவமானம் இப்படி அப்படி அல்ல; அந்த அவமானத்தை நூறு மடங்கு அதிகமாக்கிவிட்டது ராமன் காட்டிய அந்தக் கருணை. இத்தகைய மனநிலையோடு போர்க்களத்திலிருந்து நகரத்தை நோக்கி நடந்து போகிறான் ராவணன்.

ராவணனுடைய வீரப் பிரதாபம் எத்தகையது என்பது உலகம் அறிந்த காரியம்.

ராவணனுடைய தேக திடத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமானால், "பூமியைத் தாங்கி நிற்கும் அஷ்ட திக்கு யானைகளை மார்பினால் தாக்கித் தள்ளினான்" என்று சொல்லலாம். அல்லது "கைலாயங்கிரியையே சொக் தூக்காய்த் தூக்கினான்" என்று சொல்லலாம்.

ராவணனுடைய கோபக் கர்ஜனையைக் கேட்டால் உலகத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம் அல்ல, வானத்திலுள்ள தேவாதி தேவர்களுக்குமே நடுக்கம்தான்.

இத்தகைய வீராதி வீரன் நடந்து போகிறதைப் பார்க்கிறோம். பத்துத் தலை என்று சொல்லக்கூடிய நவரத்தின கசிதமான கிரீடத்தோடு விளங்குபவன். இப்போது வெறுந் தலையனாய் நடந்துபோகிறான்.

வாரணம் பொருதமார் பன்,
வரையினை எடுத்ததோ ளன்
பாரோடு விண்ணும்அஞ் சிப்
பதைத்திட உரப்பும்நா வன், —
தாரணி மவுலிபத் தும்
சங்கரன் கொடுத்தவா ளும்
வீரமும் களத்தேபோட் டு
வெறுங்கையோ(டு) இலங்கை
புக் கான்.

(வாரணம்: யானையோடு அதாவது அஷ்ட திக்கு யானைகளோடு; பொருத மார்பன்: மல் யுத்தம் செய்த திடமான மார்பை உடையவன்; வரையினை எடுத்த தோளன்: கைலை மலையைத் தூக்கிய தோளை உடையவன்; உரப்பும் நாவன்: கோபாவேசத்தோடு அதட்டும் நாவை யுடையவன்; தார் அணி மவுலி பத்தும்: மாலை சூடிய பத்துத் தலை கொண்ட கிரீடத்தையும்; சங்கரன் கொடுத்த வாளும்: ருத்திரமூர்த்தியான சிவபெருமான் கையிலிருந்து வந்ததோ என்று சொல்லும் படியான அத்தகைய வீரச் செயலுக்கான வாளை; வீரமும் களத்தே போட்டு: ராவணனுடைய கைகளில் அரிய வீரத் தோற்றம் இருப்பதைப் பார்க்கலாம்; இப்போது அந்தத் தோற்றம் இல்லை; அந்த வீரத்தையுமே போர்க்களத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டானோ என்று எண்ணும்படியாய் இருந்தது.

குறிப்பு:—சரீர பலத்திலும் வீரத்திலும் உச்ச நிலையில் இருந்த ராவணன் தோல்வியுற்று வெறுங் கையனாய் வருகிறான் என்று காட்டும் பாவம் வெகு அருமையான பாவம்.

ராவணன் இலங்கை நகரை அடைந்தான். ராஜ வீதி வழியாக

கூறினர். அடுத்த கணம் அந்த அறையில் மீண்டும் கரிய இருள் சூழ்ந்தது. வெகு தூரத்திலிருந்து, மோட்டாரின் முகப்பு விளக்குப் போன்ற பிரகாசம் என் கண்களைக் கூச வைத்தது. விழித்துப் பார்த்ததும் நீங்கள் இருவரும் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே கதி கலங்கிப் போய்விட்டேன்."

• • •

இரண்டு மாதம் விரைந்து ஓடிவிட்டது. சீதாவுக்கு உடம்பு நன்ருகத் தேறிவிட்டது. கடுமையான நோயிலிருந்து அவள் பூரணமாகக் குணமடைந்து விட்டாள். அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

ஒருநாள் அவள் தன் அறையில் உட்கார்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி வாசற் பக்கம் பார்ப்பதிலிருந்து யாரையோ எதிர்பார்ப்பதாகத் தோன்றியது. அச்சமயம் அங்கு வந்த கமலியிடம் "கமலி! சித்திரா இன்று வருவதாகத் தானே கடிதம் எழுதியிருந்தாள்? ஏன் இன்னும் அவள் வரவில்லை? ஸ்டேஷனுக்கு யாரையாவது அனுப்பியிருக்கிருயா?" என்று கேட்டாள்.

"ஸ்டேஷனுக்கு நம் வேலைக்காரன் போயிருக்கிருன். இன்னும் சிறிது நேரத்தில் அவளை அழைத்துக்கொண்டு வந்துவிடுவான். ஆஹா! உன்னிடம்தான் சித்திராவுக்கு எத்தனை பிரியம்? உனக்கு உடம்பு சரியில்லை என்று எழுதியதும், தன் அசௌகரியத்தையும் பாராட்டாமல், கணவரையும், குழந்தையையும் விட்டு விட்டு ஓடோடியும் வந்தாளே! நீ பிழைத்து எழுந்ததே அவளுடைய மன உறுதியினுல்தான். அவளுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். அவளை மறக்கவே முடியாது" என்று கூறிக் கொண்டிருக்கும்பொழுதே ஏதோ சத்தம் கேட்டது. கமலி எழுந்து வாசலுக்கு ஓடினுள்.

தான் எதிர்பார்த்தபடி சித்ரா வராமல் தபால்காரன் வந்திருப்பதைக் கண்டாள். அவன் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனுன். கமலி கடிதத்தை வாங்கிக்கொண்டு சிறிது குழப்பத்துடன் உள்ளே வந்தாள்.

"இதோ பார். சீதா! இது சித்ராவின் கடிதம் போலிருக்கிறது. இன்று அவள் வரவில்லையோ, என்னவோ!" என்று சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த கடிதத்தைச் சீதாவிடம் கொடுத்தாள்.

சீதா அதை ஆவலுடன் வாங்கி அவசர அவசரமாக உறையை உடைத்தாள். கடிதத்தைப் படித்துவிட்டு, பேச்சற்று, செயலற்றுக் கமலியை நோக்கினுள்.

விஷயம் புரியாமல் தவித்த கமலி, "என்ன? ஏன் இவ்வளவு கலக்கம் அடைகிருய்?" என்று கேட்டாள்.

சீதா பதில் எதுவும் பேசாமல், "இதோ நீயே படித்துப் பார்!" என்று சொல்லிவிட்டுக் கடிதத்தை அவளிடம் கொடுத்தாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

நெல்லூர்.

....

என் அருமை சீதாவுக்கு,

என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்தக் கடிதம் பெருத்த ஏமாற்றமாகவும் வருத்தமாகவும் இருக்கும். நான் வரமுடியாமல் போன காரணத்தை எப்படி எழுதுவேன்? இரண்டே நாள் அடித்த ஜுரம், என் அருமைக் கண்மணிக்கு எமனாக வந்து முடிந்தது. குழந்தையை இழந்த எங்கள் இருவருடைய மனே நிலைமையை எப்படி எழுதுவது? என் தைரியமும் மன உறுதியும் எப்பாடு பட்டும் பயன்படாமல் எங்கேயோ பறந்துபோய் விட்டன. எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தால் மன உறுதியாவது மண்ணுங் கட்டியாவது; எல்லாம் விதியின் விளையாட்டு என்றுதான் தோன்றுகிறது.

இப்படிக்கு, உன் சித்ரா

நல்ல உதாரணம்



குமஸ்தாக்கள்:—நம் ஜனாதிபதி அவருடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்ட செய்தியைப் பத்திரிகையில் பார்த்தோம். அவருடைய உதாரணத்தைப் பின்பற்றி......

மானேஜர்:—அடே அப்பா! உங்களுக் கெல்லாம் அவ்வளவு தேச பக்தி வந்து விட்டதா?

குமஸ்தாக்கள்:—அவருடைய உதாரணத்தைப் பின்பற்றித் தாங்களும் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்!



தேஜஸும் என்னைக் கவர்ந்தன. என்னையும் அறியாமல் என் கால்கள் அவளைப் பின்தொடர்ந்து இழுத்துச் சென்றன. சிறிது தூரம் சென்றதும் ஒரு விசித்திரமான வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தோம். அந்த வீட்டின் பல அறைகளையும் பின் கட்டுகளையும் தாண்டி, தாளிடப்பட்டிருந்த ஒரு அறையை அடைந்தோம். அப்பெண்மணி கதவை மூன்று தடவை தட்டினாள். கதவு உடனே திறந்து கொண்டது. நாங்கள் உள்ளே நுழைந்ததும், அந்தக் கதவுகள் தாமாகவே தாளிட்டுக் கொண்டன. அங்கு இருந்த மங்கலான தீப ஒளியில் நிகழ்ந்தவை நன்றும் தெளிவாகத் தெரியவில்லை. யாரோ ஒரு திவ்ய புருஷர் அங்கே வீற்றிருப்பதைக் கண்டேன். அவருடைய முகம் தெரியாவிடினும், கம்பீரமான குரலில் அவர் கூறியது இன்னும் அப்படியே என் நினைவில் பதிந்திருக்கிறது. "பெண்ணே! இந்நேரம் நீ என்னுடைய வசம் இருக்க வேண்டியவள். ஆனால், உலகத்து மக்களுக்கு நான் அளித்திருக்கும் 'மன உறுதி' என்னும் மகாசக்தியே அதற்குத் தடையாக நிற்கிறது. உண்மையும் நேர்மையும் உள்ள - தன்னலம் கருதாத எவருக்கும் வெற்றிதான். போய்வா, பெண்ணே! நீ ஒரு அருமைத் தோழியை அடைந்திருக்கிறாய். அவள் காரணமாக நீ உயிர் பிழைத்தாய்" என்று அவர்



இரு தோழிகள்

ராஜேந்திர சங்கர்

"சீதா!"

சூரியனுடைய கிரணங்கள் புதிதாக மலர்ந்த ரோஜா மலர்களில் பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதன் அழகை அனுபவித்துக் கொண்டிருந்தாள் சீதா. தன் தங்கை கமலியின் குரலைக் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். கமலியின் கையில் ஒரு கடிதம் இருந்தது. அதை சீதா ஆவலுடன் வாங்கிப் படிக்கலானாள். படித்ததும் அவளுடைய முகம் கருகியது.

அதைக் கவனித்த கமலி, "ஏன் சீதா? என்ன சமாசாரம்? ஏன் உன் முகம் இப்படி வாடி விட்டது?" என்று கேட்டாள். சீதா பதில் பேசாமல் கமலியிடம் கடிதத்தை நீட்டினாள். கமலி அதைப் படித்து விட்டு 'களுக்'கென்று சிரித்தாள். பிறகு "என்னடி இது? நீயுமா இதை நம்புகிறாய்? 'ஜோசியம், ஆருடம் என்பதெல்லாம் வெறும் பிதற்றல், மன உறுதியினால் எதையும் வெல்ல முடியும்' என்று உன் சினேகிதி சித்ரா சொன்னது உனக்கு ஞாபகம் இல்லையா? இது எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கிறது? இதில் எழுதியிருக்கிறபடி, அடுத்த செவ்வாய்க்கிழமை, அதாவது இன்னும் ஒரு வாரம் கழித்து, நீ ......சே! இது என்ன பைத்தியக்காரத்தனம்!" என்று சொல்லிக் கோபத்துடன் கடிதத்தைக் கிழித்தெறிந்தாள்.

சீதா தன் நினைவற்றுப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். கமலி, கண்களில் நீர் மல்க அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தாள். சீதாவின் படுக்கை அருகில், அவளையே கண்கொட்டாமல் பார்த்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவளுடைய சிநேகிதி சித்ரா.



"கமலி! ஏன் இப்படிக் கலங்குகிறாய்? அதைரியப்படாதே. இப்படி வந்து பேசாமல் உட்கார்ந்து கொள். நான் என் அசௌகரியங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இங்கே எதற்காக வந்திருக்கிறேன்? மன உறுதியால் விதியையும் வெல்ல முடியும் என்பதை நிரூபிப்பதற்காகத் தானே!" என்றாள் சித்ரா.

சித்ராவின் இந்தத் தைரிய மொழிகளைக் கேட்டதும் சிறிது சாந்தம் அடைந்தாள் கமலி. பிறகு பக்கத்திலிருந்த அலமாரியிலிருந்து தெர்மாமீட்டரைக் கொண்டு வந்து சித்ராவிடம் கொடுத்தாள். சித்ரா அதை வாங்கிக் கோபத்துடன் வீசி எறிந்தாள். அதிலிருந்து வழிந்தோடிய பாதரஸத் திவலைகள் சித்ராவின் கோபத்தைக் கண்டு பயந்து மிரண்டு கதவின் இடுக்கில் போய் ஒளிந்து கொண்டன.

"ஜுரத்தை அளப்பதில் என்ன பயன், கமலி? யமனுடன் போராடிச் சீதாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். கமலி, நான் அந்தப் போரில் என் உயிரையும் தியாகம் செய்வதற்குத் தயாராயிருக்கிறேன்" என்றாள் சித்ரா.

சூரியனின் வெப்பத்தால் எங்கும் அனல் மயமாக இருந்தது. ஜுர வேகத்தினால் களை இழந்த சீதாவின் முகத்தை இரண்டு ஜோடிக் கண்கள் உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

சீதா மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். ஆவேசம் வந்தவள்போல் சட்டென்று எழுந்த அவள் சித்ராவைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்தாள்.

"நீங்கள் இருவரும் என்னை என்ன செய்கிறீர்கள்? சித்ரா! நீ எப்பொழுது வந்தாய்? நான் ஒரு அதிசயமான கனவு கண்டு விழித்து எழுந்தேன். என் உடம்பைத் தொட்டுப் பார்! இன்னும் நடுங்குகிறது" என்று சிறிது படபடப்புடன் கூறினாள் சீதா.

சித்ராவும் கமலியும் சீதாவைப் படுக்க வைக்க முயன்றார்கள். ஆனால் சீதா அதைப் பொருட்படுத்தாமல் மேலும் கூறினாள்:

"அது இருக்கட்டும். என் கனவைக் கேளுங்கள். எல்லாம் உண்மையாகவே நடந்ததுபோல் என் மனதில் பதிந்துவிட்டது. நம் வீட்டிற்குப் பின்னால் ஒரு குளம் இருக்கிறதே, அதன் ஓரமாக நான் தனியாக நடந்து கொண்டிருந்தேன். சிறிது நேரம் சென்றதும் யாரோ ஒரு பெண்மணி என் அருகில் வந்து, தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கூறினாள். அப் பெண்மணியின் அழகும் அவள் முகத்தில் விளங்கிய

அமைதி! என்ன அழகு! என்ன பேரின்பம்! கோலாகலம் நிறைந்த உலகத்து வாழ்க்கை என்ன வாழ்க்கை என்று தோன்றுகிறதல்லவா? உலகத்திலே இல்லாத கவலைகளுக் கெல்லாம் இடம் உண்டு. ஆனால் இங்கேயோ அந்த மாதிரிக் கவலைகளுக்கும் துயரத்துக்கும் இடம் இல்லை. கோப தாபமோ ஆசா பாசமோ தலைகாட்டுவதில்லை. வேட்கையும், பொறாமையும், பொய் புனை சுருட்டும் என்னவென்று கேட்டால் கூட இங்கே தெரியாது. அதோ பாருங்கள்! பகட்டான பல நிறப் பட்டாடைகள் உடுத்திய வண்ணாத்திப் பூச்சிகள் மென் மலர்களைச் சூழ்ந்து மொய்த்துக் கொண்டு ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. இவற்றை யெல்லாம் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்ற ஆசை எழவில்லையா?" என்றாள்.

பீஜகுப்தன் அவளை இன்னும் நெருங்கி வந்து பக்கத்தில் நின்று கொண்டான். பிறகு தன்னைச் சுற்றி முற்றிலும் ஒரு தடவை நன்றாகப் பார்த்துக் கொண்டான். அதற்கப்புறம், "யசோதரா தேவி! தாங்கள் சொல்லுவதுபோல் எனக்கு இந்த இயற்கையில் ஒரு எழில் இருப்பதாகத் தோன்றவில்லையே!" என்றான்.

"உங்களுக்கு இயற்கையில் ஒரு எழிலும் இருப்பதாகத் தோன்றவே யில்லையா?"—இதைக் கேட்டவாறே யசோதரா ஆச்சரியத்தினால் அகல விரிந்த கண்களுடன் பீஜகுப்தனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு, "ஸ்வாமி! தாங்கள் உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா, அல்லது விளையாடுகிறீர்களா?" என்றாள்.

"நான் விளையாடவில்லை, அம்மணி! உண்மையாகத்தான் சொல்லுகிறேன். உங்களுக்கு இயற்கை எழில் வாய்ந்தது என்று தோன்றுகிறது. ஆனால் எனக்கு இயற்கை அவலட்சணமாகத் தோன்றுகிறது. உண்மையை ஒளிக்காமல் சொல்லுவது ஒரு தவறா?" என்று கேட்டான் பீஜகுப்தன்.

பீஜகுப்தனுடைய பேச்சை ஒப்புக் கொள்ள யசோதரா தயாராயில்லை. "ஸ்வாமி! இதோ பாருங்கள்! பச்சைப் பசேல் என்று கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கும் இந்தப் புல் தரையைப் பாருங்கள். புல்லில் உள்ள மிருதுத் தன்மையைக் கவனியுங்கள்! 'மெத்' தென்றிருக்கும் இந்தப் புல் தரையில் உட்கார வேண்டும்; இங்கேயே இருக்க வேண்டும்; இதிலேயே இளைப்பாற வேண்டும் என்று எனக்கு ரொம்பவும் ஆசையாக இருக்கிறது" என்றாள்.

பீஜகுப்தன் இலேசாகப் புன்னகை புரிந்தான். "அம்மணி! அப்படி யெல்லாம் செய்து விடாதீர்கள்! இங்கே பக்கத்தில் யாரும் வைத்தியர் கிடையாது. உடம்புக்கு ஏதாவது ஒன்றுக்கு ஒன்று சேர்ந்துவிட்டால், அப்புறம் 'வைத்தியர் எங்கே யிருக்கிறார்?' என்று தேடிக்கொண்டு ஓடவேண்டி யிருக்கும். புல் தரை மென்மையாகவும் அழகாகவும் இருக்கிறது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஏனெனில் தாங்கள் வெட்ட வெளியில் வாழ்ந்து பழக்கப்படவில்லை. அதனால்தான் அப்படிச் சொல்லுகிறீர்கள். இந்தப் புல் தரையில் எத்தனை விஷமான பூச்சிகள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? இந்தப் புல்லில் ஒருவித ஈரப் பசை இருக்கிறது. இதில் அதிக நேரம் உட்கார்ந்தால் நிச்சயம் ஜலதோஷம் பிடித்துவிடும். ஆகவே, அம்மணி! இயற்கை அசௌகரியமானது. அது மட்டும் அல்ல; அபூர்ணமானதுங்கூட" என்றான்.

"என்ன சொன்னீர்கள்? இயற்கை அபூர்ணமானதா?" என்று வியப்புடன் யசோதரா கேட்டாள். (தொடரும்)



பரதநாட்டிய அரங்கேற்றம்

பேபி சாந்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் மார்ச் மாதம் 8-ம் தேதி கும்பகோணம் மாசி மகம் பொருட்காட்சியில் நடைபெறுகிறது.

பேபி சாந்தி, கும்பகோணம் ஸ்ரீ கே. என். ராஜகோபால ஐயங்காரின் பௌத்ரி; பிரபல எழுத்தாளரும் கொழும்பு "வீரகேசரி" நியூஸ் எடிட்டருமான ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் எம். ஏ. அவர்களின் புதல்வி.

குழந்தை சாந்தியின் அரங்கேற்றத்தைக் கும்பகோணம் ரசிகர்கள் கண்டு களித்து ஆசி கூறுவார்களாக.

சித்திரலேகாவும் அவனைக் காதலித்தாள். காதலித்தாளா? அப்படியானால் இப்பொழுது அவள் அவனைக் காதலிக்கவில்லையா?

'காதலிக்கவில்லை என்று யார் சொன்னது? கட்டாயம் காதலிக்கிறாள்' என்றது இதயத்தின் ஆழத்திலிருந்து ஒரு குரல்.

'காதலிக்கிறாள் என்று சொல்லுவது முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பதாகும். அதெல்லாம் அவள் அவனைக் காதலிக்கவில்லை. தெரியுமா?'' என்று ஆட்சேபித்தது இன்னொரு குரல்.

'தன்னலம் சிறிதும் கருதாமல் பீஜகுப்தனுடைய நலன் ஒன்றையே பெரிதாகக் கருதி, அதற்காகஅவள் அவனையே கூடத் தியாகம் செய்தாளே! அவள் அவனைக் காதலிப்பதனால்தானே அப்படிச் செய்தாள்? வேசி குமாரகிரியிடம் 'நான் பீஜகுப்தனைக் காதலிக்கிறேன்' என்று அசாத்தியத் துணிச்சலுடன் சொன்னாளே! அவனை அந்தரங்க சுத்தமாகக் காதலிப்பதனால் தானே அவள் அப்படிச் சொன்னாள்?' என்று கேட்டது முதற் குரல்.

'உண்மையிலேயே அவள் பீஜகுப்தனைக் காதலிப்பவளாக இருந்தால் அப்படி யெல்லாம் சொல்லியிருக்க மாட்டாள். பீஜகுப்தனுடைய மனம் அறிந்து அவனுடைய விருப்பப்படி நடந்திருப்பாள். அவனுடைய உள்ளத்தின் விருப்பத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் அவன் வாழ்க்கையை மாபெரும் சுமையாக்கிப் பாழ் படுத்திவிட்டுச் சென்றாளே! அதை நீதான் காதல் என்று மெச்சிக் கொள்ள வேண்டும்!' என்று இடித்துக் கூறியது இரண்டாவது குரல். பீஜகுப்தனுடைய இதயத்திலே இரண்டுக்குமிடையே மாபெரும் போர் நிகழ்ந்தது.

இம்மாதிரிச் சிந்தனைக் கடலிலே மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த பீஜகுப்தனுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. பட்சி ஜாலங்கள் 'கீச்' சிடும் சத்தத்தைக் கேட்ட பின்தான் பீஜகுப்தனுக்குப் பொழுது புலர்ந்து விட்டது என்ற விஷயம் தெரிய வந்தது. காலை இளங்காற்று 'கம கம' வென்று ஆனந்தமாக இனிய நறுமணத்தை எங்கும் பரப்பிக் கொண்டு வீசியது. வண்ண மலர்கள் 'பச்சைப்பசேல்' என்றிருந்த தளிர்களுடன் கண்ணுமூச்சி விளையாடிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தன. விளையாட்டிலே மனதைப் பறி கொடுத்திருந்த முல்லைக் கொடிகள் முகம் மலர்ந்து தம் முல்லை மலர்ப் பல் வரிசைகளைக் காட்டிக் குலுங்கக் குலுங்க நகைத்துக் கொண்டிருந்தன. கீழ்த்திசையில் உஷா தேவி அருண வர்ணமுள்ள ஆடையுடுத்திக் கையில் தங்கத் தாம்பாளம் ஏந்திக் கதிரவனை வரவேற்பதற்காக மிகவும் ஒய்யாரமாக வந்து நின்றாள். காலைக் கதிரவன் என்னும் செம்படவன் தங்களைப் பிடித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் தானோ, என்னவோ! கடலெனத் திகழும் நீல வானத்தின் ஆழத்திலே விண்மீன்கள் உருத் தெரியாமல் அமுங்கி மறையத் தொடங்கின.

யசோதரா சற்றுத் தொலைவிலிருந்த மல்லிகைச் செடியின் அருகில் நின்று கொண்டிருந்தாள். பாதி மலர்ந்தும் மலராமலும் இருக்கும் மல்லிகை மொட்டுகளில் தேங்கி நிற்கும் முத்துப் போன்ற பனித் துளிகளுடன் யசோதரா விளையாடிக் கொண்டு நிற்பதைக் கண்டான் பீஜகுப்தன். 'கொதிப்பேறியிருக்கும் நம் உள்ளத்தையும் நறுமணம் கமழ்ந்து வீசும் இந்தக் குளிர் காற்றில் குளிர வைத்துக் கொண்டால் என்ன?' என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் எழுந்தது. உடனே அவன் எழுந்து பூந்தோட்டத்தை நோக்கி நடந்தான். யசோதராவின் தளிர்க் கரத்தை மென் மலர்கள் அலங்கரித்தன. பீஜகுப்தன் எழுந்து வருவதைக் கண்ணுற்ற யசோதரா அவனைத் தன் அருகில் வருமாறு சமிக்ஞை செய்து அழைத்தாள்.

பீஜகுப்தன் தன் அருகில் வந்ததும் அவள் அவனைப் பார்த்து, ''ஸ்வாமி! இயற்கையின் இந்த எழிலுருவத்தைப் பாருங்கள். ஆகா! இங்கேதான் என்ன உல்லாசம்! என்ன





மிருத்யுஞ்ஜயர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "நீ சொல்வது நியாயம்தான், பீஜகுப்தா! இங்கே தங்காமல், நாம் மேலும் பிரயாணத்தைத் தொடருவதுதான் எனக்கும் உசிதமாகப் படுகிறது" என்று சொன்னார்.

சிறிது நேரத்துக் கெல்லாம் சுவேதாங்கன் திரும்பி வந்தான். "ஸ்வாமி! இங்கே பக்கத்தில் மிக அழகான ஒரு உத்தியான வனம் இருக்கிறது. அதன் மத்தியிலே ஒரு விசாலமான சகல சௌகரியங்களுடனும் கூடிய மாளிகையும் இருக்கிறது. இந்த உத்தியான வனம் சித்ரரசர் சூரியதேவருடையதாம். தங்குவதற்கு மிகவும் வசதியான இடம்!" என்றான்.

"ஓகோ! சூரிய தேவருடைய உத்தியான வனமா?" என்று கேட்ட மிருத்யுஞ்ஜயர், "அப்படியானால் இங்கே தங்குவதில் யாதொரு விதமான அசௌகரியமும் இராது; சிரமமும் இராது. பீஜகுப்தா! முன்னமொரு தடவை நான் இங்கே தங்கிக் கூட இருக்கிறேன். சூரிய தேவருடைய அரண்மனைகூட இங்கே சமீபத்தில்தான் இருப்பதாக ஞாபகம்" என்றார்.

ரதங்கள் அந்த உத்தியான வனத்தை நோக்கித் திருப்பப்பட்டன. தோட்டத்துக் காவற்காரன் சித்ரரசர்களை மிகவும் மரியாதையுடன் வரவேற்றான். உத்தியான வனத்தின் நடுவே இருந்த அழகிய மண்டபம் ஒன்றில் அதிதிகள் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டில்கள் கொண்டுவந்து போடப்பட்டன. எல்லோரும் பிரயாணத்தின் காரணமாக மிகவும் களைப்புற்றிருந்தனர். ஆகவே படுத்ததும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விட்டனர். ஆனால் எவ்வளவோ முயன்றும் பீஜகுப்தனுக்கு மட்டும் தூக்கமே வரவில்லை.

பீஜகுப்தன் எங்கே போய்க் கொண்டிருந்தான்? எதற்காகப் போய்க் கொண்டிருந்தான்?—இந்தக் கேள்விகள் அவனுடைய மூளையைச் சுற்றி வட்டமிட்ட வண்ணம் இருந்தன. அவன் எங்கே போய்க் கொண்டிருந்தான்? காசிக்குப் போய்க் கொண்டிருந்தான். ஆமாம், அவன் எதற்காகக் காசிக்குப் போய்க் கொண்டிருந்தான்? மன அமைதியை நாடுவதற்காக; மனத்துயரை மறந்து ஒழிப்பதற்காக; தன் கடமையிலிருந்து வழுவாமல் இருப்பதற்காக. சரி, அதற்காக அவன் பாடலிபுத்திரநகரத்தை விட்டு வெளியேறுவானேன்? யசோதராவிடமிருந்து விலகியிருப்பதற்காகவும் சித்திரலேகாவின் நினைவையே மனதிலிருந்து அகற்றுவதற்காகவும் தான்! வேறு எதற்காக? ஆனால் அவனால் தான் யசோதராவை விட்டு விலகியிருக்க முடியவில்லையே! அவள் தான் அவனை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு பின்னோடு வந்து விட்டாளே! பின்னோடு வந்தால் வந்துவிட்டுப் போகட்டும்! கணத்துக்குக் கணம், அடிக்கு அடி அவனை நெருங்கி அவனுடைய உள்ளத்தில் இடம்பெற அவள் ஏன் முயல வேண்டும்? ஈருயிர் ஓருடலாக ஒன்றினால்கூட அவளைப்போல யாரும் நெருங்கி வர முடியாது போலிருக்கிறதே!

பீஜகுப்தன் அவளைப்பற்றி யோசித்தான், யோசித்தான், அப்படி யோசித்தான். கடைசியில், 'இது நடக்காத காரியம்; நடக்கவே நடக்காத காரியம்!' என்று சற்று உரக்கவே சொல்லி நீண்ட பெருமூச்சு விட்டான். பீஜகுப்தனால் யசோதராவைக் காதலிக்க முடியவில்லை; அவளுக்குத் தன் உள்ளக் கோயிலில் இடம் கொடுத்துப் பிரதிஷ்டை செய்யவும் முடியவில்லை. ஆகவே அவனுடைய மனக்கண் முன் நின்ற யசோதரா அகன்றாள். ஆனால் அடுத்த கணமே சித்திரலேகா அந்த இடத்தைப் பொத்திக் கொண்டு அவனுடைய மனக் கண்முன்பு காட்சி அளித்தாள். சித்திரலேகா என்பவள் யார்? அவனுடைய வாழ்க்கைக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? என்ன சம்பந்தமா? இதென்ன அசட்டுக் கேள்வி? சித்திரலேகா அவனுடைய உயிர்க் காதலி அல்லவா? உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மனைவி அல்லவா? ஆம், ஆம், அவன் சித்திரலேகாவைக் காதலித்தான்.

என்பது அவனுக்கே சரியாகத் தெரியாது. ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ எண்ணக் குவியல்கள் அலைமேல் அலைபோல எழுந்தன; அடுத்த கணம் மறையவும் மறைந்தன. அப்பொழுது இருந்த மன நிலையில் அவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை. 'என்ன நேரம் ஆயிற்று?' என்று அறிந்து கொள்வதிலும் அவனுடைய கருத்துச் செல்லவில்லை. அதற்குள் மிருத்யுஞ்ஜயருடைய ரதம் அவனுடைய ரதத்துக் கருகிலே நெருங்கி வந்தது. யசோதார பீஜகுப்தனைப் பார்த்து, "ஸ்வாமி! எங்கேயாவது இளைப்பாறுவது நல்லது அல்லவா?" என்று சுவேதாங்கன் கேட்ட அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டான்.

அதைக் கேட்டதும் பீஜகுப்தன் துணுக்குற்றான். அடுத்த கணம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். சந்திரன் கீழ்த் திசையை விட்டுப் பெயர்ந்து மேற் றிசையை நோக்கி முன்னேறியிருந்தான். உடனே அவன் சுவேதாங்கன் பக்கம் திரும்பி, "சுவேதாங்கா! ரதத்தை நிறுத்தி விட்டு, பக்கத்தில் உள்ள தோட்டங்களில் எங்கேயாவது தங்குவதற்கு வசதி இருக்கிறதா என்பதைப் பார்த்து வா!" என்றான்.

அடுத்த கணம் ரதம் நிறுத்தப்பட்டது. பீஜகுப்தனுடைய ரதம் நின்றதும் மற்ற ரதங்கள் அனைத்தும் நின்று விட்டன. சுவேதாங்கன் ரதத்திலிருந்து இறங்கிப் பக்கத்துத் தோட்டங்களில் தங்குவதற்கு ஏதாவது வசதி இருக்கிறதா என்பதைப் பார்த்து வருவதற்காகப் புறப்பட்டுச் சென்றான். பீஜகுப்தன் மிருத்யுஞ்ஜயரைப் பார்த்து, "ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். நேரம் போனதையே நான் கவனிக்கவில்லை. தங்களுக்கு மிகவும் சிரமமாகப் போயிருந்திருக்கும். ஆனால் இரவு பாதிக்கு மேல் கழிந்து விட்டது. தங்களுக்குப் பாதகமில்லை என்று தோன்றினால், நாம் பிரயாணத்தை மேலும் தொடருவோம். பொழுது விடிந்து சூரியோதயம் ஆவதற்கு முன்பாக ஏதாவது ஒரு கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டால், பகல் முழுவதும் அங்கே இளைப்பாற செளகரியமாயிருக்கும். ஏனெனில் இதுவோ கோடை காலம். பகல் வேளையில் வெப்பம் அதிகமாயிருக்கும். இங்கே தங்குவது என்றால் ஒரு வேளை வசதி போதாமல் இருக்கலாம். காலையில் எழுந்ததும் இந்த வெய்யிலில் மறுபடியும் பிரயாணத்தைத் தொடங்குவது அவ்வளவு உசிதமாயிராது" என்றான்.





யசோதரா தான் சொன்ன சொல்லை நிறைவேற்றினான். அவன் தான் தேச யாத்திரைக்குப் புறப்படுவதற்கான எல்லா வித ஏற்பாடுகளையும் வெகு விரைவாகவே செய்து முடித்தான். மறுநாள் எல்லோரும் காசிக்குப் பிரயாணம் ஆனார்கள்.

மாலைக் கதிரவன் மலை வாயில் விழுந்து விட்டான். சிறிது சிறிதாக இருள் பூமியைக் கவ்வத் தொடங்கியது. ஆகா! கோடை காலத்து இரவிலேதான் என்ன இன்பம்! என்ன சுகம்! ஆனால் பீஜகுப்தனுக்கு அந்த இரவில் எந்த விதமான இன்பமோ, சுகமோ இருப்பதாகத் தோன்றவில்லை. சதுர்த்தசி சந்திரன் கீழ்த்திசையின் அடிவானத்திலே எழும்பிப் பிரகாசிக்கத் தொடங்கினான். பீஜகுப்தனுடைய இதயத்திலும் ஒரு ஜ்வாலை கொழுந்து விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பணியாட்களும் பணிப் பெண்களும் அணி வகுத்தாற் போலக் கும்பல் கும்பலாகக் கையில் தீவட்டி பிடித்துக் கொண்டு முன்னே சென்று கொண்டிருந்தனர். கொழுந்து விட்டெரியும் அந்தத் தீவட்டிகளின் ஜ்வாலையிலே தன் உள்ளத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஜ்வாலையின் பிரதிபிம்பத்தைக் கண்டான் பீஜகுப்தன். அவன் மௌனமே உருவெடுத்து ரதத்தில் சாய்ந்தவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

பீஜகுப்தனுடைய ரதத்திலே பீஜகுப்தனும் சுவேதாங்கனும் அமர்ந்திருந்தனர். மற்றொரு ரதத்திலே மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயருடன் அவருடைய பெண் யசோதரா உட்கார்ந்திருந்தாள்.

ரதம் ஊர்ந்து கொண்டே இருந்தது. பொழுதும் அதற்கேற்றாற் போல ஊர்ந்தது. கடைசியில் நள்ளிரவு கூடக் கழிந்து விட்டது. பால் போன்ற வெண்ணிலவு பட்டப்பகல் எனத் தோற்றும்படி காய்ந்து கொண்டிருந்தது. பாதையின் பக்கத்திலிருந்த உத்தியான வனங்களிலிருந்து மல்லிகை, சண்பகம் போன்ற மலர்களின் நறுமணம் இலேசாகப் பரவி வந்து இன்ப போதையிலே உள்ளத்தைப் பறி கொடுக்கும்படி செய்து கொண்டிருந்தது. சுவேதாங்கன் நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்து மெதுவான குரலில், "ஸ்வாமி! இரவு எங்கேயாவது இளைப்பாறுவது நல்லது அல்லவா?" என்று கேட்டான்.

பீஜகுப்தன் அப்பொழுது ஏதோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான். 'என்ன யோசித்துக் கொண்டிருந்தான்?'



இருபத்து மூன்றாம் அத்தியாயம்

உள்ளக் குமுறல்

யசோதரா தேச யாத்திரைக்கு அவசரப்படுவதைக் கண்டார் மிருத்யுஞ்ஜயர். அவளுடைய உற்சாகத்துக்குப் பங்கம் விளைவிக்க அவர் விரும்பவில்லை. ஆகவே அவர் தயக்கத்துடன், "யசோதரா! இன்று தான் முதல் தடவையாக நீ கேட்கிறாய். இதுவரை நீ இம்மாதிரிப் பிடிவாதம் பிடித்ததே கிடையாது. அப்படியிருக்கும் பொழுது நான் உன் வேண்டுகோளை மறுப்பேனா? ஆனால் ஒரு விஷயம். நீ முதலில் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துகொள். நாளைக்குள் உன்னால் ஏற்பாடு செய்ய முடியாவிட்டால், நமக்காகப் பீஜகுப்தனையும் அல்லவா ஒருநாள் வீணாகத் தங்கிப் புறப்படுமாறு சொல்ல நேரிடும்?" என்று இடைமறித்துச் சொன்னார்.

"ஏற்பாடு செய்ய முடியாமல் என்ன? இது ஒன்றும் பிரமாதமான காரியம் இல்லை, அப்பா! கவலைப்படாதீர்கள், நான் செய்து விடுகிறேன்!" என்றாள் யசோதரா. பிறகு சுவேதாங்கன் பக்கம் திரும்பி, "ஸ்வாமி! நாங்கள் கட்டாயம் வருகிறோம்" என்றாள்.

சுவேதாங்கன் எழுந்து நின்று, "ஸ்வாமி! அப்படியானால் நான் உத்தரவு வாங்கிக் கொள்ளட்டுமா? தாங்கள் வரும் விஷயத்தை அவசியம் பீஜகுப்த மன்னரிடத்தில் சொல்லுகிறேன்" என்றான். பிறகு யசோதராவின் பக்கம் பார்த்து, "அம்மணி! ஏற்பாடுகள் செய்வதில் தங்களுக்கு ஏதாவது சிரமமிருக்குமானால் நான் ஏதோ என்னால் ஆன ஒத்தாசை செய்யத் தயாராயிருக்கிறேன்—இன்று சாயந்திரம் வேண்டுமானால் வரட்டுமா?" என்று கேட்டான்.

யசோதரா சிரித்தவாறே, "தங்கள் ஒத்தாசைக்கு என் நன்றி. சாயந்திரம் வாருங்கள். தங்களுக்கு உகந்த காரியமாக ஏதாவது இருந்தால் அவசியம் சொல்லுகிறேன்" என்றாள்.

சுவேதாங்கன் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுச் சென்றான். மாளிகையை அடைந்ததும் நேரே பீஜகுப்தனிடம் சென்று, "ஸ்வாமி! மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயர் தம் மகளையும் அழைத்துக்கொண்டு காசி யாத்திரைக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்திருக்கிறார். இருவரும் சேர்ந்து போனால் பல விதங்களில் பிரயாணம் சௌகரியமாயிருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறார். தங்களிடம் இந்த விஷயத்தைத் தெரிவிக்கச் சொன்னார்" என்றான்.

பீஜகுப்தன் இதை எதிர்பார்க்கவேயில்லை. எந்த எந்தக் காரணங்களை முன்னிட்டு அவன் தேச யாத்திரைக்குப் புறப்படுவது என்று முடிவு செய்திருந்தானோ, அவற்றில் ஒன்று அவனுடன் கூடவே அல்லவா விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வரத் தயாராகிவிட்டது! ஆயினும் இனிமேல் அவன் என்ன செய்ய முடியும்? அவன் அரை மனதுடன், "சரி! வந்தால் வரட்டுமே!" என்று சுவேதாங்கனுக்குப் பதில் அளித்தான்.

கோவை, சிங்காநல்லூர் ஸ்ரீ கஸ்தூரிபாய் காந்தி பிரசவ விடுதி
சென்னை மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஸ்தூபி
நிதிகளுக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடய்யா ... வயலின்
கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ... மிருதங்கம்
ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் ... கடம்

19-3-1950 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு
ஆர். எஸ். புரம் முனிசிபல் உயர்தர ஆண் பாடசாலையில்
சென்னை பிரதமர் கனம் ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் நடைபெறும்

டிக்கட்டுகள்: ரூ. 500, 250, 100, 25, 10 & 5

கே. சுப்ரி, கே. சுந்தரம் — ஆர்கனைஸர்கள்

கூட்டை எடுக்க வந்த கார் டிரைவர் கண்டு விட்டான்!

"டேய்! திருட்டுப் பயலே!" என்று விழிகளை உருட்டிக் கொண்டே அதட்டி விட்டுப் பாபுவைத் தாவிப் பிடித்துக் கொண்டான். அவன் மீசை, சிவப்புக் கண்கள் - எல்லாமே பாபுவுக்குப் பயமாக இருந்தன.

"நான் திருடன் அல்ல" என்று அவனுகவே சொல்ல ஆரம்பித்து விட்டான். அத்துடன் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. 'குப்'பென்று வியர்த்துக் கொட்டியது.

"போக்கிரிப் பயலே, பாசாங்கு செய்கிருயா?" என்று கேட்டான் டிரைவர்.

பாபு விம்மிக் கொண்டே, "நான் பட்டணம் பார்ப்பதற்காக வந்தேன். மாம்பலத்தில் என் மாமாவுடன் இருக்கிறேன்" என்ருன்.

"அவர் விலாசம் என்ன?" என்று கேட்டான் டிரைவர்.

பாபு அதற்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்தான். டிரைவரின் சந்தேகம் உறுதியாற்று.

"வாடா பயலே! எல்லாவற்றையும் அங்கே வந்து சொல்லு" என்று கூறிவிட்டுத் தன் இரும்புக் கரங்களால் அவனை இழுத்துக் கொண்டு கூடாரத்துக்குள் நுழைந்தான் டிரைவர்.

(தொடரும்)

அது என்ன?

ஒரு விசித்திரமான இடம் இருக்கிறது. அங்கே பெரிய பெரிய கடல்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு சொட்டுத் தண்ணீர் கிடையாது. பெரிய பெரிய மலைகள் இருக்கின்றன. ஆனால் ஒரு கல் கூடக் கிடைக்காது. பெரிய பெரிய ஆறுகள் இருக்கின்றன. ஆனால் அந்த ஆறுகளில் தண்ணீர் ஓடுவதில்லை. பாலைவனங்களும் பிரதேசம். ஆனால் பெயருக்குக் கூட மணல் கிடையாது. அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. ஆனால் புல் பூண்டு கூட வளருவதில்லை. அநேக நகரங்களும், கிராமங்களும் இருக்கின்றன. அவ்வளவு இருந்தும் மனித உருவத்தைக் காண முடியாது. அது என்ன?


சிங்கக் கூண்டு

அன்று அரச சபையிலே ஏகக் கூட்டம். மகாராஜா தம் சிம்மாசனத்திலிருந்து எழுந்து, "சபையோர்களே! அதோ இருக்கும் கூண்டைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார். இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்டிருந்த கூண்டில் செக்கச் சிவந்த கண்களுடன் கம்பீரமாக ஒரு சிங்கம் நிற்பதைச் சபையோர்கள் கண்டனர்.

"அந்தச் சிங்கத்தைக் கூண்டைத் திறக்காமல் வெளியே வரச் செய்ய வேண்டும். உங்களில் யாராலாவது முடியுமா?" என்று கேட்டார் மன்னர்.

துணிச்சலான அந்தக் காரியத்தைச் செய்ய யாரும் முன்வரவில்லை.

ஒரு சிறுவன் மாத்திரம் அரசர் முன்னிலையில் வந்து, "மகாராஜா! என்னால் முடியும்" என்று தைரியமாகச் சொன்னான்.



அவன் சிறிதும் பயப்படாமல் சிங்கம் இருந்த கூண்டை நோக்கி நடந்தான். கூண்டின் அருகில் தீ வைத்துக் கூண்டின் கம்பிகளைச் சூடேற்றினான். கம்பிகள் பழுத்துக் காய்ந்தன. சிங்கத்தின் சிவந்த கண்கள் இன்னும் சிவந்தன. அது கோபத்தில் துடித்தது. பையன் அதைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. கம்பிகளில் சூடேறச் சூடேறச் சிங்கத்துக்கும் சூடேறியது. கடைசியில் என்ன ஆச்சரியம், அது உருகி விட்டது! உருகியதுடன் மட்டும் நின்றதா? கம்பிகளின் இடுக்கு வழியே வெளியே ஓடியும் வந்து விட்டது. அதைக் கண்ட ஜனங்கள் 'பூ! இந்த மெழுகுப் பொம்மைக்குத் தானா நாம் இவ்வளவு பயந்து மிரண்டோம்!' என்று எண்ணி வெட்கித் தலை குனிந்தனர். அரசர் அந்தக் கெட்டிக்காரப் பையனின் புத்திக் கூர்மையை மெச்சி அவனுக்குப் பரிசும் அளித்தார். அந்தக் கெட்டிக்காரப் பையன் யார், தெரியுமா? அவன்தான் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் மகோன்னதமான மகத சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்துச் சரித்திரப் புகழ் பெற்ற சக்கரவர்த்தி சந்திரகுப்த மௌரியன். - அஞ்சயம்.

"எனக்கு அப்பொழுதே தெரியும்! அது ஒரு பட்டிக்காட்டு முகடு. உங்கள் பெயரைக் கெடுக்க வந்து சேர்ந்தது. இந்த அழகான மருமானைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளத் திட்டம் கூடப் போட்டிருந்தீர்கள்!" என்று பழித்தும் காட்டினாள் பாபுவின் மாமி.

மாமாவுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. "எங்கே போயிருப்பான் போக்கிரிப் பயல்?" என்று முகத்தைக் கேள்விக்குறிபோல வைத்துக் கொண்டு அங்கலாய்த்தார்.



பத்திரிகை ஆபீஸ்கள், போலீஸ் இவைகளில் எதில் இருந்தாவது 'பயல் அகப்பட்டான்' என்று நல்ல சேதி வராதா என்று இரவு பகலாக ஏங்கினார். ஒருவேளை ஊருக்கே திரும்பிப் போய்விட்டானோ என்று சந்தேகித்து, "பாபு அங்கே வந்தானா?" என்று கேட்டுத் தம் தமக்கைக்கு உடனே ஒரு தந்தியும் அடித்தார்.

5. டிரைவரின் கேள்வி

பாபுவை மூட்டையோடு மூட்டையாகச் சுமந்துகொண்டு அந்தக் கார் கன வேகமாகப் போயிற்று.

பாபு மெதுவாகத் தலையைத் தூக்கி எட்டிப் பார்த்தான். கப்பி ரோடிலிருந்து கிளம்பிய புழுதி கண்களில் அடித்தது. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. வழிநெடுக ராட்சத உருவத்தில் பெரிய மரங்கள் இருந்தன. இரைந்து கத்தினால் கார் நிற்குமா என்று யோசித்தான். அப்படி நின்றால் இறங்கி இந்த இருட்டில் எங்கே ஓடுவது என்று நினைத்தபோது அவனுக்குப் பயமாக இருந்தது.

நல்லவேளை, கார் நின்றது. நின்ற இடம் ஒரு சர்க்கஸ் கொட்டகை. பாண்டு முழங்கிற்று; டம் டம் என்று டமாரம் அதிர்ந்தது; யானை பிளிறிற்று. குதிரைகள் கனைத்தன. அப்படிப்பட்ட இடத்தில் கார் நின்றதில் பாபுவுக்குக் கொஞ்சம் குஷியாகத்தான் இருந்தது. எட்டிப் பார்த்தான். ஒட்டகம் ஒன்றுக்குப் 'புல்கோட்டுப்' போட்டு ஜோடித்து வைத்திருந்தது. குரங்கு ஒன்று 'வாக்கிங் ஸ்டிக்'குடன் சர்க்கஸ் கொட்டகைக்குள் நுழையத் தயாராக இருந்தது. அந்த இரண்டையும் பார்த்ததும் எங்கே இருக்கிறோம் என்பதைக் கூடச் சற்று மறந்துவிட்டான் பாபு.

ஆனால் நின்ற கார், பின் பக்கம் நாலடி திரும்பிச் சென்று சர்க்கஸ் கொட்டகையை வளைத்துக் கொண்டு ஒரு மூலையில் போய் நின்றது.

அங்கே ஒரு கூடாரம் இருந்தது. கார் நின்றவுடன் அதிலிருந்து நாலு பேர் தாவிக் குதித்து இறங்கிக் கூடாரத்துக்குள்ளே புகுந்தார்கள்.'

அவர்களில் சிறுமி ஒருத்தி. கிட்டத்தட்ட பாபுவின் வயது இருக்கும். பைஜாமா போட்டுக்கொண்டு இரட்டைப் பின்னல் பின்னி முன் பக்கம் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். பாபுவுக்கு அவளை ரொம்பப் பிடித்திருந்தது. இறங்கினவர்கள் பாபுவுக்குப் புரியாத பாஷையில் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் கும்மாளம் அடித்துக் கொண்டும் போனார்கள். போகும்போது கார் டிரைவருக்கு என்னவோ சொல்லிவிட்டுப் போனார்கள்.

பாபு மெதுவாகக் குதித்து இறங்கினான்; இறங்கினதை அந்தப் பக்கம்



எதுவுமே அலட்சியம், - காப்பி குடிப்பது ஒன்றைத் தவிர!

வாசற் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. மாமா சட்டென்று மின்சார விளக்கைப் போட்டு விட்டு விரைந்து சென்று கதவைத் திறந்தார். திறக்கும் போதே, "ஏண்டா, இவ்வளவு நேரம் பாபு?" என்று கேட்டார்.

அதற்கு பதில் சொல்ல பாபு அங்கே இல்லை. கோபு, ஜம்பு, தம்பு மூவரும் நின்றிருந்தார்கள்.

"பாபு எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டார் மாமா. அவரது கண்கள் பாபுவைத் தேடின.

பதில் இல்லை. அதற்குப் பதிலாக மூன்று சிறுவர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு விழி விழி என்று விழித்தனர். கடைசியாக ஜம்பு "அவன்...அவன்...இங்கே வரவில்லையா? எங்களை விட்டுப் பிரிந்து அப்பொழுதே கிளம்பி விட்டானே?" என்று மென்று விழுங்கினான்.


மாமாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. "இதற்குத்தானா உங்களுடன் பாபுவை அனுப்பி வைத்தேன்? அவன் ஊருக்குப் புதிசு ஆயிற்றே? எங்கெங்கே திண்டாடுகிறானோ? ஏண்டா, ஜம்பு! இப்படித்தானா செய்வது? பத்தாவது படிக்கிறாயே? அட அசடுகளா...!" என்று படபடப்புடன் கூறினார். அவர் ஒரு நிமிஷமும் தாமதிக்கவில்லை. காரை எடுத்துக் கொண்டு எக்ஸிபிஷனை நோக்கி வேகமாக பறந்தார்.

இரவு மணி பதினொன்று அடிக்க யோசித்துக் கொண்டிருந்தது. எக்ஸிபிஷனில் ஈ, காக்கை இல்லை. வெளி வாசலை இழுத்து மூடும் சமயம். பாபுவின் மாமா உள்ளே நுழைந்தார். "பாபு என்று ஒருபையன் குட்டையாக இருப்பான்; அவனை பார்த்தீர்களா?" என்று எக்ஸிபிஷன் நிர்வாகியைக் கேட்டார்.

அவர் உதட்டைப் பிதுக்கினார். பாபுவின் மாமா போலீஸுக்குப் 'போன்' செய்தார். "ஆஹா! சொன்ன அடையாளங்களை வைத்துக் கவனிக்கிறோம்" என்று பதில் கிடைத்தது. ஆனால் பாபு அகப்படவில்லை! எங்கேயாவது படுத்துத் தூங்குகிறானோ என்று அவர் மூலை முடுக்குகளில் தேடிப் பார்த்தார். கடைத் தெரு, காப்பி ஹோட்டல், சினிமாக் கொட்டகை, சமுத்திரக்கரை போன்ற இடங்களில் புகுந்து தேடிப் பார்த்தார்.

பலன்? — பத்துக் காலன் பெட்ரோல் புகையாயிற்று. பாபுப் பயல் அகப்படவில்லை. இப்படி மூன்று தினங்களுக்கு இடைவிடாமல் தேடினார். ஊஹூம்! பாபு அகப்படவே இல்லை!

"பையனைக் காணோம்!" என்ற தலைப்பில் அங்க அடையாளங்களுடன் தினப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டார். தேடித் தருபவர்களுக்குப் பரிசு ரூபாய் நூறு கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.





பாபு எங்கே?

நவீனன்

4. மோட்டார் பறந்தது!

பாபு கால் போன பக்கமெல்லாம் நடந்தான். இரவு மணி எட்டு ஆகி விட்டது. எக்ஸிபிஷனிலும் கூட்டம் குறைய ஆரம்பித்தது. கோபுவைப் பற்றி யாரையாவது கேட்கலாமா என்று நினைத்தான். இரண்டொருவ ரிடம் சென்று "கோபுவைப் பார்த் தீர்களா?" என்று கேட்டான். "எந்த கோபு?' என்று அவர்கள் திருப்பிக் கேட்டபோது பாபுவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. "உன் மாமா பெயர் என்ன? அவருடைய வீட்டு நம்பர் என்ன?" என்று யாரோ அனு தாபத்துடன் கேட்டதற்கு அவன் திரு திரு வென்று விழித்தான். எக்ஸி பிஷன் முழுவதும் சுற்றினன். கால் வலித்தது. களைப்பு உண்டாயிற்று. உட்கார்ந்தான். இரவு மணி ஒன்பது ஆகிவிட்டது. பாபுவுக்குத் துக்கம் வந்தது. பிறகு தூக்கம் வந்தது.

கொஞ்ச தூரத்தில் ஒரு மோட்டார் தனியாக நின்று கொண்டிருந்தது. பாபு அதனருகில் சென்று எட்டிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. அதில் ஏறிப் படுத்துக் கொண்டால் என்ன என்று யோசித்தான். ஆனல் பயமாக இருந்தது. சட்டென்று இன்னெரு யோசனை உதித்தது. காரின் பின் பக்கத்தில் சாமான்கள் வைப்பதற் காகத் தனி யாக ஒரு இடம் இருந்தது. மாமாவின் காரில்கூட அதை அவன் பார்த்திருக் கிறன். அதன் கைப்பிடியைப் பிடித்து இழுத்தான். அது திறந்து கொண்டது. உடனே தாவி ஏறி அங்கே படுத்துக் கொண்டான்.

அரைமணிக்குப் பிறகு விழிப்பு வந்தது. திடுக்கிட்டு எழுந்திருந்தான். எட்டிப் பார்த்தான். ஒரே இருட்டு. மோட்டார் அவனையும் இழுத்துக் கொண்டு வெகு வேகமாக எங்கேயோ போய்க் கொண்டிருந்தது.

* * *

பாபுவின் மாமா சாய்வு நாற்காலி யில் சாய்ந்து கொண்டிருந்தார். ரேடியோ கிரிக்கெட் ஸ்கோர் சொல் லிக் கொண்டிருந்தது. "பலே!" "பலே!" என்று ஆரவாரம் செய்து கொண்டிருந்த அவர் சட்டென்று மணி யைப் பார்த்தார். இரவு மணி பத்து. இன்னும் ஊர் சுற்றப் போன பையன்களைக் காணேமே என்று நினைத்தபடி பின்னல் கைகளைக் கட் டிக் கொண்டே கூடத்தில் உலாவினர்.

"நாலு பேரோடு போயிருக்கிறன். என்னத்திற்குக் கவலைப் படணும்? அவன் படுகெட்டிக்காரனுச்சே!" என்று மாமி, ஊஞ்சல் பலகையில் உட் கார்ந்தபடி கூறினன். அவனுக்கு இந்த உலகில்





வந்து உணர்ச்சியுடன் நடித்துப் படம் பார்ப்ப வர்களை உருக்கி விடுகிறார்கள். கதையின் நடு வில் ஆங்காங்கே ஸ்ரீ என். எஸ். கிருஷ்ண னும் ஸ்ரீமதி டி. ஏ. மதுரமும் புதுமையான வேடங்களில் தோன்றிக் களிப்பூட்டுகிறார்கள். 'குளோஸ்-அப்' கலையில் மிகச் சிறந்த கேமரா-மேன் ஸ்ரீ ஜிதேன் பானர்ஜீ இந்தப் படத்தில் தமது கைவரிசையைப் பூரணமாகக் காட்டி யிருக்கிறார். மொத்தத்தில் இந்தப் படம் தமிழ்

நாகூர்தான் இந்த "லைலா மஜ்னு"வுக்கும் டைரக்டர் என்றான், படம் எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. லைலாவும் மஜ்னுவும் குழந்தைகளாயிருக்கும்போதே நம்முடைய அநுதாபத்தைக் கவர்ந்து விடுகிறார்கள். வயதான பிறகு ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கமும் ஸ்ரீமதி ராஜம்மாவும் கதாபாத்திரங்களாக ......







தினசரி காலை 9 மணி முதல் 12 மணிவரை மாலை 2-30, 6 & இரவு 9-30 மணி காட்சிகளுக்கு ரூ. 2-8-0, 1-14-0 வகுப்புகளுக்கு அட்வான்ஸ் புக்கிங் உண்டு



★

உலகத்தின் அதிசய அபூர்வக் காதலர்களிலே முதன்மை ஸ்தானம் பெற்றிருப்பவர்கள் அரேபியாப் பாலைவனத்தில் பிறந்து வளர்ந்த லைலாவும் மஜ்னுவும். இவர்கள் தங்கள் காதலின் காரணமாகப் பட்ட கஷ்டங்களும் முடிவில் அடைந்த கதியும் கல்லையும் கனியச் செய்யும் கதையாக உலகெங்கும் வழங்கி வருகிறது. அந்த அபூர்வக் கதையை பாலாஜி பிக்சர்ஸாரின் சிறந்த தமிழ்ப்படமாக வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மகத்தான வெற்றி பெற்ற "ஞான சௌந்தரி" படத்தை டைரக்ட் செய்த ஜனாப்......

ஈடுபட்டதற்காக அப்பொழுதிருந்த பிரிட்டிஷ் சர்க்கார் அந்த அன்பருக்கு ஆயுள் தண்டனை விதித்தனர்! (பலத்த சிரிப்பு.) இதை யெல்லாம் கவிஞரே தம்முடைய 'என் சரிதம்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். கவிஞருடைய யோகம் அப்படியிருந்தது. அவருக்கு உதவிசெய்ய முன் வந்தவரைக் கூடப் பிடித்தது. இப்படிப்பட்ட நிலைமையில் தேசம் சுதந்திரம் அடைந்து சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டது. நமது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதல் மந்திரியாக இருந்தபொழுது நாமக்கல் கவிஞரை 'ஆஸ்தான கவி'யாகச் செய்தார். (கரகோஷம்.) நீங்கள் கைதட்டுவது சரிதான். ஆனால் நாமக்கல் கவிஞரை ஆஸ்தான கவியாக்கியதும் ஓமந்தூர் ரெட்டியாருக்குப் பிரதம மந்திரி உத்தியோகம் போய்விட்டது! (நீண்ட சிரிப்பு.) சத்திய சந்தராகிய ரெட்டியார் அதை யெல்லாம் பொருட்படுத்தவில்லை. ஓமந்தூர் ரெட்டியார் நமது கவிஞரை 'ஆஸ்தான கவி'யாக்கியது ஒன்றே அவர் முதல் மந்திரி பதவி வகித்ததற்குப் போதுமானது. (கரகோஷ ஆரவாரம்.) உலகத்தில் சக்கரவர்த்திகள், ராஜாக்கள், மந்திரிகள் முதலியோருடைய பெயர்களை ஜனங்கள் சீக்கிரத்தில் மறந்து விடுவார்கள். ஆனால் ஒரு கவியினுடைய பெயர் ஆயிரக்கணக்கான வருஷங்கள் மக்களின் ஞாபகத்தில் இருக்கும். மகாத்மாவின் பெயர் இந்த உலகில் உள்ள வரையில் மகாத்மாவைப் பாடிய நம் கவிஞரின் பெயர் நிலைத்திருக்கும். நாமக்கல் கவிஞர் பெயர் உள்ள வரையில் இந்த நாமக்கல்லின் பெயரும் நிலைத்து நிற்கும்."

இவ்வாறு "கல்கி" ஆசிரியர் பேசிவிட்டு அங்கு கூடியிருந்த சுமார் முப்பதினாயிரம் ஜனங்களுக்கு முன்னிலையில் ஆஸ்தான கவிஞரிடம் நாமக்கல் வாசிகளின் சார்பாக ரூ. 2,500 கொண்ட பணமுடிப்பை அளித்தார்.

நாமக்கல் வாசிகள் தங்களுடைய ஊர்க் கவிஞருக்குப் பணமுடிப்பு அளித்ததற்குச் சாட்சியாக அந்தக் காட்சியைப் புகைப் படம் பிடிக்க ஏற்பாடு செய்திருந்தனர். அப்பொழுது எதிரிலிருந்த விஸ்தாரமான மலைப்பாறையைப் பார்த்தேன். காலையில் முண்டும் முரடுமாகத் தென்பட்ட நாமக்கல் மலையை இருந்த இடம் தெரியாதபடி ஜனங்கள் அமர்ந்து மூடிவிட்டனர். நாமக்கல்லின் ஜனத்தொகை பன்னிரண்டாயிரந்தான் என்று கேள்விப் பட்ட நான், அங்கு கூடியிருந்த முப்பதினாயிரம் ஜனங்களைப் பார்த்தவுடன் "தமிழர் உயர்ந்தனர்! தமிழ் நாடு உயர்ந்தது!" என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

தமக்கு அளித்த பாராட்டுக்கு ஆஸ்தான கவிஞர் பதிலளிக்கையில் அவருடைய குரல் உணர்ச்சி மிகுதியால் தழு தழுத்தது. "எனக்குச் செய்த இந்தச் சிறப்புக்களை, மனிதவர்க்கம் மறக்க முடியாதபடி வாழ்ந்த காந்தி மகானின் ஒப்பற்ற வாழ்க்கையையும் உயரிய போதனைகளையும் நான் தாய் மொழியில் பாடிய கவிதைகளுக்குச் சூட்டுகின்ற புகழ் மாலையாகக் கருதி ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லித் தம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

ஓமந்தூர் ரெட்டியாரின் முடிவுரைக்குப் பிறகு, இரவு எட்டு மணிக்கு மேல் ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதரின் இன்னிசை விருந்து நடந்தது. அவ்வளவு ஜனங்களும் இருந்து கேட்டுக் களித்தார்கள்.

* * *

இந்த விழா இவ்வளவு சிறப்பாக நடப்பதற்கு அரும்பாடு பட்ட ஸ்ரீ தியாகராஜ ரெட்டியார், நாமக்கல் காதி பண்டார் மானேஜர் ஸ்ரீ வி. மாரப்பன், ஜனாப் உஸ்மான் சாயபு, ஸ்ரீ நாகராஜ ஐயங்கார் முதலியவர்களுக்கெல்லாம் தமிழ் மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த இதழில்

ராமகிருஷ்ண உபநிஷதம்

பாரத நாட்டின் தற்கால மேன்மைகளுக் கெல்லாம் அஸ்திவாரம் அமைத்தவரும் சுவாமி விவேகானந்தரின் பரம குருவுமான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசங்களைப் பற்றித் தலைவர் ராஜாஜீ அவர்கள் எழுதும் தொடர் கட்டுரைகள் அடுத்த "கல்கி" இதழில் ஆரம்பமாகின்றன.

ராம செட்டியார். கவிஞரின் பால்ய நண்பரான ஸ்ரீ நாகராஜ ஐயங்கார் கவிஞரின் பால்ய வாழ்க்கையில் நடந்த பல ருசிகரமான சம்பவங்களை விவரித்தார். தமிழ் நாட்டின் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் ஆஸ்தான கவிஞரைப் பாராட்டி விழா நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் விழாத் தலைவர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். (இவர்களுடைய பிரசங்கங்களின் முழு விவரங்களைத் தினப் பத்திரிகைகளில் நேயர்கள் படித்திருப்பார்கள்.)

விழா வெற்றிகரமாக நடந்தேற வேண்டுமென்று தலைவர் ராஜாஜி, ரஸிகமணி டி. கே. ஸி., ரயில்வே மந்திரி கனம் சந்தானம், ஸ்ரீ காமராஜ், முதல் மந்திரி கனம் குமாரசாமி ராஜா, கனம் பக்தவத்ஸலம், ஸ்ரீ வி. ஐ. முனிசாமிப் பிள்ளை முதலானவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். இத்தனை நேரமும் மூடி வைத்திருந்த ஆஸ்தான கவிஞரின் படத்தைக் காரைக்குடி ஸ்ரீ சா. கணேசன் திறந்துவைத்துக் கனிவொன்று பேசினார். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. மீண்டும் மாலை ஐந்து மணிக்கு விழாத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இதையெல்லாம் பார்த்து அதிசயித்த சூரியன் தேவலோகத்துக்குச் செய்தி அனுப்பினார் போலும்! நெடுங்காலமாக நாமக்கல் பக்கம் எட்டிப் பாராமலே இருந்து விட்ட வருண பகவான் ஓடோடியும் வந்தார்.

அதன் பலனாக நாமக்கல்லில் பலமான மழை பொழிந்தது. மழையைக் கண்ட நாமக்கல் மக்களின் மனம் குளிர்ந்தது. அது காரணமாகக் கவிஞரைப் பாராட்டினர் பலர். “புண்ணியவான்கள் எல்லாம் நம் ஊருக்கு வந்திருக்கின்றனர். அதனால் தான் மழை பெய்தது!” என்றனர் சிலர். “நீர் வந்ததால்தான் ஐயா, மழை பெய்தது!” என்று என்னையும் பாராட்டினார் ஒரு நாமக்கல் நண்பர். இப்படி நாமக்கல் ஜனங்கள் மழையைக் கண்டு குதூகலப் பட்டுக்கொண்டிருந்தனர். கடிகாரத்தில் மணி ஓடிக் கொண்டிருந்தது. நாமக்கல் தெருவெல்லாம் மழைத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. விழாக் கமிட்டியார்களோ மாலையில் எங்கே விழாவை நடத்துவது என்று தெரியாமல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர்.

விழாக் கமிட்டியாரின் துக்கம் தோய்ந்த முகங்களையும் வெளியூர்களிலிருந்து ஏராளமாக வந்து திரண்டிருந்த ஜனக்கூட்டத்தையும் பார்த்த வருணபகவான் மனமிரங்கி



கவிஞர் மணி விழாவில் ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் இன்னிசை விருந்தளித்தார்.

னார். மாலை ஆறு மணிக்குக் கொஞ்சம் மழை விட்டது. மழைதான் விட்டதே ஒழியத் தூவானம் விடவில்லை. எனினும், பிரசித்தி பெற்ற நாமக்கல் பாறையில் விழாவைத் தொடங்கினர். சகசவென்று வெறும் சகதியாக இருந்ததைக்கூடக் கவனியாமல் ஜனங்கள் திரண்டுவந்து அமர்ந்தனர். பெண்மணிகளும் ஆண் மணிகளுமாகப் பதினாயிரக் கணக்கில் வந்து உட்கார்ந்து விட்டார்கள்.

அந்தப் பெரும் கூட்டத்தின் சத்தமும் ஆரவாரமும் அடங்குவதற்குக் கொஞ்ச நேரமாயிற்று. ஸ்ரீ சின்ன அண்ணாமலையின் இடிமுழக்கப் பாடல்கள் ஆரவாரத்தை ஒருவாறு அடக்கின. கவிஞரின் கவிதை நயத்தைப் பாராட்டி டாக்டர் மு. வரதராசனார் ஒரு அழகிய சொற்பொழிவு ஆற்றினார்.

பிறகு நாமக்கல் வாசிகள் கொடுத்த நிதி முடிப்பைக் கவிஞரிடம் கொடுப்பதற்காகக் “கல்கி” ஆசிரியர் எழுந்து கூறினார்:

“நாமக்கல் கவிஞர் மிகவும் யோகக்காரர். அவரும் அவருடைய குடும்பத்தாரும் வறுமையின் கொடுமையால் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கவிஞருடைய கஷ்டத்தைப் பார்த்த அவருடைய கோயமுத்தூர் நண்பர் ஒருவர் அவருக்குப் பத்து ஏக்கரா நிலம் வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்துவிட்டு ஊருக்குப் போனார். கவிஞரின் யோகம், கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்த நண்பருடைய சொத்துக்கள் எல்லாம் போய் அவர் ‘இன்ஸால்வென்ட்’ ஆகிவிட்டார். (சிரிப்பு.) கவிஞருக்கு நிலம் கிடைக்கவில்லை. செட்டிநாட்டு நண்பர் ஒருவர் கவிஞருக்கு உதவி செய்வதாகச் சொல்லிவிட்டு ஊருக்குப் போனார். செட்டிநாட்டில் 1942 ஆகஸ்ட் இயக்கத்தில்

நாமக்கல்லில் கவிஞர் விழா

பகீரதன்

நாமக்கல் கவிஞர் ஸ்ரீ வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குச் சென்ற சில வருஷகாலமாகத் தமிழ் நாடெங்கும் உபசாரங்கள் நடைபெற்றன; நிதி முடிப்புகள் அளிக்கப்பட்டன. நாமக்கல் கவிஞர் ஆஸ்தான கவியான பிறகு அவரைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சிறப்பாகப் பாராட்டினர்; பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தினர். ஆயினும் நாமக்கல் கவிஞரின் சொந்த ஊராகிய நாமக்கல்லில் பாராட்டு விழா எதுவும் நடைபெறவில்லை. இது நாமக்கல்லுக்கு, ஏன்?—சேலம் ஜில்லாவுக்கே ஒரு குறையாக இருந்து வந்தது. இந்தக் குறையைச் சென்ற பிப்ரவரி மாதம் 19௳ நாமக்கல் வாசிகள் போக்கிக் கொண்டனர். அன்று அவர்கள் ஒரு பெரிய திருவிழா நடத்தி ஆஸ்தான கவிஞரைப் பாராட்டி அவருக்கு ஒரு நிதி முடிப்பும் அளித்துப் பெருமை பெற்றனர்.

அன்று நடந்த விழாவைப் போல அத்தனை சிறப்பாகவும் அழகாகவும் விமரிசையாகவும் வேறு எந்த விழாவும் நாமக்கல்லில் நடந்ததில்லை என்பது நாமக்கல் வாசிகளின் ஒரு முகமான அபிப்பிராயம். நாமக்கல் கமலாலயக் குளக்கரைக்கு அருகில் சிங்காரமாக அமைக்கப் பட்டிருந்த பந்தலில் ஒருவரை ஒருவர் நெருக்கி அடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவர்கள், பந்தலுக்குப் பக்கத்தில் இருந்த மரத்தின் மீது தொத்திக் கொண்டிருந்தவர்கள், பந்தலுக்குப் பின்புறமிருந்த மண்டபத்தில் அடைந்து கிடந்தவர்கள், பந்தலுக்கு வெளியில் முதலில் சுளீர் என்று காய்ந்த வெய்யிலில் நின்று கொண்டிருந்தவர்கள், பிறகு பெய்த மழையின்போது அதைக் கொஞ்சமும் சட்டை செய்யாது ஒருவர்மீது ஒருவர் மோதிக்கொண்டு நின்றவர்கள் ஆகிய அத்தனை பேரும் ஒரு முகமாக மேற்படி அபிப்பிராயத்தை வெளியிட்டனர்

நாமக்கல் கவிஞரை நாமக்கல் வாசிகளே பாராட்டுகிற அதிசயத்தைக் காணக் குமரி முதல் வேங்கடம் வரை இருக்கும் தமிழ் ரசிகர்கள் பலர் திரண்டு வந்திருந்தனர். இன்னும் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள், தேச பக்தர்கள், தலைவர்கள், பிரபலஸ்தர்கள் பலரும் மேற்படி விழாவுக்கு விஜயம் செய்து சிறப்பித்திருந்தனர்.

பிப்ரவரி மாதம் 19-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை வழக்கம் போல வானவீதியில் உதயமாகி பவனி வந்து கொண்டிருந்த சூரியன் நாமக்கல்லுக்கு நேரே வந்ததும் ஏதோ கோலாகலமான சத்தம் காதில் விழவே சற்றுக் குனிந்து பார்த்தான். இரு பக்கங்களிலும் பச்சிலைகள் கட்டிய கம்பங்களில் வரிசை வரிசையாகத் தோரணங்கள் தொங்கும் அலங்காரமான நாமக்கல் வீதியில் ஆயிரக்கணக்கான மக்கள் குதூகலத்துடன் கூடிவர, மேள வாத்தியம் 'ஜாம் ஜாம்' என்று முழங்க, புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த காரில் ஆஸ்தான கவிஞரையும் அவரது மனைவியாரையும் உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்து வருவதைக் கண்டான். அடாடா! தமிழ் நாட்டில் தமிழ்க் கவிஞருக்கு அவருடைய சொந்த ஊரிலேயே இவ்வளவு பாராட்டா, இது உண்மைதானா என்று வியந்து அதைப் பார்ப்பதற்காகக் கண்களைச் சற்று அகலத் திறந்து பார்த்தான்.

ஊர்வலம் விழாப் பந்தலுக்கு வந்தது. பந்தலில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் "கவிஞர் நீடூழி வாழ்க!" என்று கோஷித்து மலர் தூவி வரவேற்றனர்.

கவிஞர் தம்முடைய தர்மபத்தினி சகிதம் மேடைமீது அமர்ந்தவுடன் கூட்டத்தில் ஒரு பகுதியிலிருந்து சத்தம் வந்தது. திரும்பிப் பார்த்தேன். கவிஞரும் அவர் தம் மனைவியும் மேடைமீது அமர்ந்திருந்த அழகான காட்சியைக் கண்டு அங்கு வந்து கூடியிருந்த பெண்மணிகள் களிப்படைந்து கொண்டிருந்தனர் என்பதை அவர்களுடைய மகிழ்ச்சி பொங்கும் திருமுகங்கள் காண்பித்துக் கொண்டிருந்தன.

விழாவுக்கு வந்திருந்தவர்களைப் பரிவுடன் வரவேற்றுப் பேசினார் நாமக்கல் தாலுக்காவின் பிரமுகர்களில் ஒருவரான ஸ்ரீ பி. பி. கே. தியாகராஜ ரெட்டியார். பின்னர், இந்த வருஷத்துத் தமிழ் மாகாண அரசியல் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தேசபக்தத் தலைவர் ஸ்ரீ என். அண்ணாமலைப் பிள்ளை கவிஞர் பாராட்டு விழாவை ஆரம்பித்து வைத்து ஹாஸ்ய வெடிகளும் குதூகல வேட்டுகளும் நிறைந்த ஒரு பிரசங்கத்தைச் செய்தார். சென்னை சர்க்கார் சார்பில் கவிஞரை வாழ்த்தினார் மந்திரி கனம் தேச


நாமக்கல்
வைபவங்கள்



ஆஸ்தானகவிஞர் மணிவிழா



"அவ்வளவும் பொய்யா? பின் எது தான் உண்மை? உனக்குத் தெரியுமா?" என்றேன்.

"அவன் புருஷன் அப்போதே 'கயா' வாகி விட்டான்! உனக்கு விதவா விவாகம் செய்து கொள்வதில் அபிப்பிராயம் இருந்தால்......"

"சீச்சீ! இது என்ன சுந்தரம்? அபஸ்மாரமாய்ப் பேசுகிறாயே? எனக்குப் பெண்டாட்டி பிள்ளை குட்டி எல்லாரும் இருக்கிறார்கள்."

"ரொம்ப சரி! அப்படி யென்றால் பேச்சை விட்டு விடு!"

"என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று சொன்னாயே? அது என்ன என்று மட்டும் சொல்லிவிடு! பாவம்! அவர்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாயிருந்தது!"

"பரிதாபமா? அந்த கேடி நன்றாகத் தான் உன்னை மயக்கி விட்டிருக்கிறாள். என்னைக் கேட்டால் அவள் வசிக்கும் வீட்டுப் பக்கமே போகாதே என்பேன். தேவகியின் கணவனை ரஸாக்கர்கள் கொண்டு போகவும் இல்லை; அவனுக்குப் பைத்தியம் பிடிக்கவும் இல்லை. ஆசாமி தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போய்விட்டான்!"

"ஐயோ! எப்போது? எதற்காக?"

"எப்போது என்று எனக்குத் தெரியாது. சில வருஷம் ஆயிற்று என்று கேள்வி. எதற்காகத் தற்கொலை செய்து கொண்டான் என்று கேட்கிறாய்? எல்லாம் அந்தப் பரதேவதை தேவகியின் தொல்லையைப் பொறுக்க முடியாமல்தான்! இச்சாமி! நீ கூட அந்த நாளில் தேவகியைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று ஒரு எண்ணம் வைத்திருந்தாயல்லவா?"

"கிடையவே கிடையாது! அந்தப் பொய்க் கதையைக் கட்டி விட்டவர்கள் நீயும் வைத்தியுந்தான்."

"அப்படியே யிருக்கட்டும். நீ தேவகியைக் கலியாணம் செய்து கொள்ளாதது உன் அதிர்ஷ்டந்தான். அதனாலேதான் நீ இன்றைக்குப் பிழைத்திருக்கிறாய். இல்லாவிட்டால் அவள் புருஷன் செய்ததுபோல் நீயல்லவா தற்கொலை செய்து கொண்டிருப்பாய்! போகட்டும். நான் புறப்படட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே சுந்தரம் எழுந்து நடந்து ரேழியில் நிறுத்தியிருந்த சைக்கிள் வண்டியைச் சரி பார்க்க ஆரம்பித்தான். நானும் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன்.

சுந்தரம் கூறியது இன்னும் என் மூளையைக் குழப்பி விட்டது என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா? அவன் சொன்னதே ஒருவேளை உண்மையா யிருக்குமோ என்றும் சிந்திக்க ஆரம்பித்தேன். எது எப்படி யிருந்தாலும் தேவகியிடம் ஒத்துக்கொண்டபடி இன்று சாயங்காலம் அவள் வீட்டுக்குப் போய் அவளையும் குழந்தைகளையும் பொருட் காட்சிக்கு அழைத்துப் போக வேண்டியது. பிறகு எப்படி உசிதமென்று தோன்றுகிறதோ, அப்படி நடந்து கொண்டால் போகிறது.

இவ்விதம் எண்ணமிட்டுக் கொண்டே வீடு சென்றேன். ஆனால் விவரமாகாத ஏதோ ஒரு விஷயம் என் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. அது என்னவென்று ஆனமட்டும் ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தேன். ஆனாலும் அது ஞாபகத்துக்கு வரவில்லை. 'தொண்டையி லிருக்கிறது வாயில் வரமாட்டேனென்கிறது' என்று சில சமயம் சொல்லுகிறோமல்லவா? அந்தமாதிரி என் உள்ளத்தில் தெளிவில்லாத ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருவது போல் தோன்றி, ஆனால் ஞாபகத்துக்கு வராமல் தொல்லைப்படுத்தியது. (தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

"கல்கி" இதழ்களில் நேயர்கள் தொடர்ந்து படித்து வரும் 'தேவகியின் கணவன்' என்ற தொடர் கதையில் வரும் ஒரு காட்சியை இந்த இதழ் அட்டைப்படம் சித்திரிக்கிறது.

துக் கொள்! அப்போது, நாம் பள்ளிக்கூடத்தில் படித்தபோது, நீ யாரோடும் சண்டைக்கு வரமாட்டாயல்லவா? யாராவது உன்னோடு சண்டைக்கு வந்தாலும் நீ பின்வாங்கிப் போய்விடுவாயல்லவா? அதனால் உன்னை நாங்கள் 'சோப்பளாங்கிச்சாமி' என்று சொல்வோம். உன் காதிலும் விழுந்திருக்கலாம். ஆனால் அதைப் பற்றியெல்லாம் இப்போது என்ன? கார், கிர் வைத்துக்கொண்டு ஜோராய் இருக்கிறாய்போலிருக்கிறதே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

நான் நடத்தும் தொழிலைப் பற்றிச் சுந்தரத்திடம் சொன்னேன். அவனும் தன்னைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னான். தண்டாங் கோரையில் எஸ். எஸ். எல். சி. முடித்த பிறகு இந்தப் பட்டணத்துக்கு வந்து ஆயுர்வேத கலாசாலையில் சேர்ந்து மூன்று வருஷம் படித்து எல். ஐ. எம். பட்டம் பெற்று டாக்டர் ஆனானாம். வைத்தியத் தொழிலிலும் மருந்து விற்பனையிலும் மாதம் மூந்நூறு, நானூறு ரூபாய் அவனுக்கு இப்போது வருமானம் வருகிறது என்று அறிந்தேன்.

"உங்கள் வீட்டில் யாருக்காவது ஏதாவது வியாதி என்றால், நேராக இங்கே வந்துவிடு. மருந்துகள் எல்லாம் நானே சாஸ்திரியமாய்ச் செய்கிறேன். டைபாய்டு சுரத்துக்கு ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறேன். இங்கிலீஷ் வைத்தியத்தில் டைபாய்டு சுரத்துக்கு மருந்தே கிடையாது என்று தெரியுமல்லவா! உன் முகம் கூட அவ்வளவு நன்றாயில்லை. ஒரு மாதிரி வெளுத்துப் போயிருக்கிறது. ஆறு மாதம் நீ சியவனப்பிராஸ லேகியம் விடாமல் சாப்பிட்டால் குணம் தெரியும். அப்புறம் அதை விடவே மாட்டாய். இன்னொரு நாளைக்கு வா, மற்ற மருந்துகளைப் பற்றி விவரமாகச் சொல்லுகிறேன். இன்றைக்குக் கொஞ்சம் எனக்கு அவசர வேலையிருக்கிறது. போகட்டுமா?'' என்று எழுந்தான்.

"கொஞ்சம் உட்கார், சுந்தரம்! இன்னொரு நாளைக்கு அவசியம் வந்து உன்னிடமுள்ள மருந்துகளிலெல்லாம் ரகத்துக்குக் கொஞ்சமாக வாங்கிப் போகிறேன். ஒரு முக்கியமான விஷயம் உன்னைக் கேட்கலாம் என்று இன்றைக்கு வந்தேன். அதை மட்டும் சொல்லி விட்டுப் போ! நாம் படித்த போது ஹெட்மாஸ்டர் பத்மநாப ஐயங்கார் என்று இருந்தாரே? அவரைப் பற்றியும் அவர் குமாரி தேவகியைப் பற்றியும் உனக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்க வந்தேன். தெரிந்தால் சொல்லு!''

சுந்தரம் என்னை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்து விட்டு, "அவர்களைப் பற்றி என்ன கேட்கிறாய்? உனக்கு என்ன தெரிய வேண்டும்?'' என்றான்.

"அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?''

"இந்த ஊரில்தான் எங்கேயோ இருக்கிறார்கள் என்று கேள்வி. நான் கூட இரண்டொரு தடவை பார்த்திருக்கிறேன். சிந்தாதிரிப் பேட்டையிலோ கோமளீசுவரன் பேட்டையிலோ இருக்கிறார்கள் போலிருக்கிறது. நீ எதற்காகக் கேட்கிறாய்?''

"ஆமாம். அவர்கள் சிந்தாதிரிப் பேட்டையிலேதான் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் வீடு கூட எனக்குத் தெரியும். நேற்று அவர்கள் வீட்டுக்குப் போய் வந்தேன்.''

"அப்படியா? ரொம்ப சரி! நீ தான் போய்வந்திருக்கிறாயே? என்னை என்ன கேட்கிறாய்?''

"ஒன்றுமில்லை. தேவகியின் புருஷனைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டேன்!''

"தேவகியின் புருஷனைப் பற்றி உனக்கு என்ன இவ்வளவு கவலை?''

"இல்லையப்பா! அவள் புருஷனைப் பற்றிப் பலவிதமாகக் கேள்விப்பட்டேன். ஒருவேளை உண்மை உனக்குத் தெரிந்திருக்கலாமோ என்று எண்ணிக் கேட்டேன். வேறொன்றுமில்லை!''

"பலவிதமாக அப்படி என்ன கேள்விப்பட்டாய்?''

நேற்றுக் காலை தேவகியின் வீட்டில் நடந்ததையெல்லாம் சுந்தரத்திடம் சொன்னேன். தேவகி சொன்னதும், அவள் தகப்பனார் சொன்னதும், நான் பார்த்ததும் ஒன்றுக்கொன்று முரணாயிருந்ததையும் சொன்னேன்.

"அவ்வளவும் பொய்! உன்னை நன்றாய் ஏமாற்றி விட்டிருக்கிறார்கள்!'' என்றான் சுந்தரம்.

குத் தெரிந்த முகம்போலத் தோன்றும். பல தடவை இதைப்பற்றி யோசித்து, 'ஆமாம்; இவன் அந்தத் தண்டாங் கோரை சுந்தரமா யிருக்கக் கூடும்' என்று தீர்மானித்தேன். காரிலே அந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஏற்பட்ட மின்னல் எண்ணங்கள் இவை. மோட்டாரை நிறுத்தி விசாரிப்பதற்கு வேண்டிய அக்கரை அப்போதெல்லாம் எனக்கு ஏற்படவில்லை. எதற்காக விசாரிக்க வேண்டும்? விசாரித்து அந்த சுந்தரமா யிருந்தால்தான் என்ன பயன்? இவனுடைய சிநேகத்தைப் புதுப்பித்துக் கொண்டு இப்போது எனக்கு ஆக வேண்டியது என்ன? ஒன்றுமில்லை!

ஆனால் நான் இந்தத் திங்கட்கிழமையன்று அந்த வழியாகப் போனபோது, காரை நிறுத்தி அவன்தானு தண்டாங் கோரை சுந்தரம் என்று விசாரிப்பதற்குத் தடுக்க முடியாத ஆர்வம் கொண்டேன். காரை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே போனேன். சுந்தரம் மாதிரி தான் இருந்தது. ஆனல் அவனுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை.

அவனிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ள வந்தவர்கள் யாரும் அப்போது அங்கு இருக்கவில்லை. நான் அவன் மேஜைக்கெதிரே கிடந்த பெஞ்சியில் உட்கார்ந்ததும், "உங்களுக்கு என்ன உடம்பு? எங்கே, கையைக் காட்டுங்கள்!" என்று வைத்திய பரிசிலனை செய்யத் தயாரானுன்.

நான் கொஞ்சம் தயங்கினேன்.

"சீக்கிரம் சொல்லுங்கள். எனக்கு இன்றைக்குச் சீக்கிரம் டிஸ்பென்ஸரியைச் சாத்திக் கொண்டு போக வேண்டும்" என்றுன்.

"நான் உடம்பு பார்த்துக் கொள்ள வரவில்லை. எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. வேறொரு விஷயம் விசாரிப்பதற்காக வந்தேன். ஒரு வேளை நீங்கள் என் பழைய சிநேகிதனுயிருக்கலாம் என்று நினைத்தேன். டாக்டர்! நீங்கள் தண்டாங்கோரை ஹைஸ்கூலில் எப்போதாவது படித்ததுண்டா?" என்று கேட்டேன்.

அவன் என்னை அதிசயத்துடன் உற்றுப் பார்த்து, "ஆமாம், படித்திருக்கிறேன். நீங்கள் யார்? ஒரு வேளை ......ஒரு வேளை......அடேடே! நம்ம கிச்சாமிபோ லிருக்கிறதே!" என்றுன்.

"ஆமாம், சுந்தரம்! நான் அந்தக் கிருஷ்ணசாமிதான்!"

"பலே! பலே! நம்ம 'சோப்பளாங்கி' கிருஷ்ணசாமியா? மன்னித்

பிரபல திருமணம்



பிரபல காப்பி வர்த்தகரான ஸ்ரீ வி. எல். நாக அவர்கள் குமாரி சௌபாக்யவதி ராஜாமணிக்கும், தஞ்சாவூர் கன்னிகாபாகை ஜெண்டு ஸ்ரீ. வி. கிருஷ்ண மூர்த்தி ஐயர் குமாரர் சிரஞ்சிவி வெங்கடேசனுக்கும் ஜனவரி மாதம் 29-ந்தேதி சேலத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. ராஜாஜி, ரவிகமணி டி. கே. சி. முதலியவர்களிடமிருந்தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. மாலையில் நடந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரிக்கு சேலம் நகரத்திலிருக்கும் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தினர்கள்.

★ ★ ★

திருந்த ஜன்னல் வழியாக ஒரு பயங்கரமான மனித உருவம் என்னை நோக்கிக் கொண்டிருந்தது. அந்த உருவத்தின் முகத்தில் பைத்தியம் என்று எழுதி ஒட்டியிருந்தது!

12

அன்றைக்கும் மறுநாளும் எனக்கு தேவகியின் நினைவாகவே இருந்தது. ஆனாலும் அவளைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொள்வது என்று தெரியவில்லை. அவளுடைய கணவனைப் பற்றிய உண்மை என்ன? ஹைதராபாத் குழப்பத்தின்போது அவனை ரஜாக்கர்கள் கொண்டு போனார்கள் என்பதும், பிறகு அவன் திரும்பி வரவேயில்லை என்பதும் உண்மையா? அல்லது தேவகியின் தகப்பனார் கூறியபடி அவனுக்குப் பைத்தியம் பிடித்துப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்பது உண்மையா? அல்லது என் கண்ணாலே பார்த்தபடி, அதே வீட்டில் மேல்மாடியில் அந்தப் பைத்தியம் பிடித்த கணவனை அடைத்துப் போட்டிருப்பது உண்மையா?

எல்லாவற்றையும் சேர்த்து யோசித்துப் பார்க்கும்போது கடைசியில் நான் கண்ணால் கண்டதே உண்மையாயிருக்கலாம் என்று தோன்றியது. தேவகியும் அவன் தகப்பனாரும் கூறிய பொய்களுக்குச் சுலபமாகக் காரணம் கண்டு பிடிக்கலாமல்லவா? பாவம்! தேவகிக்குத் தன்னுடைய கணவனைப் பற்றிய உண்மையைச் சொல்வது கஷ்டமாகத்தானேயிருக்கும்? அதினும் என்னிடம்? அந்த வேலைக்காரி முதலில் பதில் சொல்லத் தயங்கிவிட்டுப் பிறகு எங்கேயோ தேவகியின் கணவன் போயிருப்பதாகவும் திரும்பி வரவில்லை யென்றும் சொன்னாள் அல்லவா? புதிய மனிதர்களிடம் அந்த மாதிரி சொல்லும்படியாகத் தேவகி அவளுக்குக் கட்டளையிட்டிருக்க வேண்டும். தேவகியின் தகப்பனாருக்குப் பாவம், அவ்வளவு முழுப் பொய் சொல்ல விருப்பமில்லை. அவர் பாதி உண்மையைச் சொன்னார். தேவகியின் கணவனுக்குப் பைத்தியம் என்று ஒப்புக் கொண்டார். ஆனால் அதே வீட்டு மாடியில் தேவகியின் கணவனை அடைத்து வைத்திருக்கிறது என்று சொல்ல அவருக்கு மனம் வரவில்லை.



அதனாலேயே பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்.

இதையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்த போது ஒரு பக்கத்தில் எனக்கு எவ்வளவோ பரிதாபமாயிருந்தது. தேவகிக்கு இந்தக் கதியா வரவேண்டும்? இப்படிப்பட்ட புருஷனா அவளுக்கு வாய்க்க வேண்டும்? அடடா! ஹெட்மாஸ்டர் எப்படியெல்லாம் சொப்பனம் கண்டு கொண்டிருந்தார்? என்னென்ன ஆகாசக் கோட்டைகளைக் கட்டினார்? கொஞ்சமும் சங்கோசமில்லாமல் என் முகத்துக்கு நேரே 'தேவகிக்குப் பணக்காரக் கணவனாக வரன் பார்க்கிறேன்; உனக்கு அவளைக் கொடுக்க முடியாது; அந்த எண்ணத்தை விட்டு விடு!' என்று பச்சையாகச் சொன்னாரே? இத்தனைக்கும் நான் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட அவரிடம் பிரஸ்தாபிக்கவேயில்லையே? யாரோ காலிப் பயல்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டும் ஊர் வதந்தியை வைத்துக் கொண்டும் என் பேரில் எரிந்து விழுந்தாரே? என் மீது அபாண்டமான பழியும் சுமத்தினாரே? இப்போது என்ன ஆயிற்று? தேவகிக்கு எப்படிப்பட்ட கணவன் வாய்த்தான்? கடவுளே! என்னைப் பரமயோக்யன் என்று அதுகாறும் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் என் மனதின் ஆழத்தில் ஒளிந்திருந்த தீய பிசாசின் வலிமை தெரிந்தது. தேவகி அப்படிப்பட்ட துர்க்கதியை அடைந்திருக்கக் கண்டது வெளிப்படையாக என் மனதில் பரிதாபத்தை உண்டாக்கிய போதிலும் உள்ளுக்குள்ளே ஒருவித திருப்தியையும் உண்டாக்கிற்று. அத்துடன், அத்தகைய பரிதாப கதிக்கு உள்ளான தேவகிக்கு என்னாலான உதவிகளைச் செய்யவேண்டும் என்னும் ஆர்வமும் முன் வந்து நின்றது.

இந்த எண்ணத்தோடு கூட, தேவகியைப் பற்றிய தாழ்வான ஒரு எண்ணமும் என் மனதில் உதிக்கக் கண்டேன். ச்சீ! பைத்தியக்காரப் புருஷனை மேல் மாடியில் அடைத்துப் போட்டு விட்டு இவளுக்குப் பொருட்காட்சி வேடிக்கை என்ன வேண்டிக் கிடந்தது? அடுத்த வீதி ஆண்டு நிறைவுக் கலியாணத்துக்குப் போக எப்படி மனம் வந்தது? எவ்வளவு கடின நெஞ்சு அவளுக்கு? ஒரு தடவை போனது போதாது என்று இன்னொரு நாளும் பொருட் காட்சிக்குப் போக வேண்டுமாமே? அடாடா! ஒரு காலத்தில் நான் இவளை தேவ கன்னிகை என்று நினைத்துப் போற்றினேன் அல்லவா? இவளுடைய பணிவிடைக்காக என் வாழ்வையே அர்ப்பணம் செய்யத் தயாராயிருந்தேன் அல்லவா! ஓ!

—ஆனால் கொஞ்சம் நிதானித்துப் பார்த்தால், அவள் பேரில் அவ்வளவு நிஷ்டூரம் சொல்வதற்கு இடம் என்ன இருக்கிறது? எப்படியும் மூன்று குழந்தைகளுக்குத் தாயார். அந்தக் குழந்தைகளைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டியதுதானே அவசியம்? புருஷனுக்கு ஏதோ துர்க்கதி நேர்ந்து விட்டது என்பதற்காகக் குழந்தைகளையும் கஷ்டப் படுத்துவது நியாயமாகுமா? நாலு இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போய்க் காட்டினால்தானே குழந்தைகள் தந்தையின் நிலையை மறந்து சந்தோஷமாயிருக்க முடியும்?

இப்படி முன்னுக்குப் பின் முரணான எண்ணங்களால் என் உள்ளம் கலங்கிக்கொண்டிருந்தது. என் மனதில் தோன்றிய கேள்விகளுக்கு நானே சமாதானம் கண்டு பிடித்துத் திருப்தியடையப் பார்த்தேன். ஆயினும் பூரண திருப்தி ஏற்படவில்லை.

மறுநாள் திங்கட்கிழமை, நான் ஆபீஸுக்குக் கிளம்பிப் போனபோது வழியில் பார்க்டவுனில் 'டாக்டர் சுந்தரம் எல். ஐ. எம்.' என்று போட்டிருந்த போர்டு என் கண்களைக் கவர்ந்தது. ஏற்கெனவே சில சமயம் நான் இந்த போர்டைப் பார்த்துவிட்டுக் கட்டிடத்தையும் உற்றுப் பார்த்திருக்கிறேன். சுந்தரம் என்று பெயருள்ள எத்தனையோ ஆயிரம் பேர் நாட்டில் இருக்கிறார்கள். ஆயினும் இந்த 'டாக்டர் சுந்தரம்' போர்டு எனக்குத் தண்டாங்கோரையில் என்னுடன் ஹைஸ்கூலில் படித்த சுந்தரத்தை நினைவூட்டிற்று. அதற்கு ஒரு காரணமும் இல்லாமற் போகவில்லை. இரண்டொரு தடவை அந்த ஆயுர்வேத மருந்துக் கடையின் ஜன்னல் வழியாக ஒரு முகம் தெரியும். அந்த முகம் ஏதோ எப்போதோ எனக்



வதுபோல. ஹெட்மாஸ்டர் இவ்விதம் சொன்ன பிறகு, அந்தப் பழைய 'போர்ஜரி' கடிதத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கக் கூட எனக்கு மனம் வரவில்லை. அதற்கு இப்போது என்ன அவசரம்? பிறகு கேட்டுக் கொண்டால் போகிறது.

"சரி, ஸார்! போய்விட்டு நாளை வருகிறேன்! குழந்தைகளைப் பொருட்காட்சிக்கு அழைத்துப் போவதற்காகத் தேவகி நாளை சாயங்காலம் வரச் சொல்லியிருக்கிறாள்" என்று கூறிவிட்டுக் கிளம்பினேன்.

அதே சமயத்தில் அந்த வீட்டின் மேல் மச்சிலிருந்து ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. அது என்ன சத்தம் என்று சொல்ல முடியாது. சிம்மத்தின் கர்ஜனை, புலியின் உறுமல், ஓநாயின் ஊளை, — இவற்றையெல்லாம் விட அந்தச் சத்தம் பயங்கரமாயிருந்தது. கதைகளிலே நாம் படித்திருக்கும் ராட்சதர்கள் ஒருவேளை அப்படித்தான் சத்தமிடுவார்கள் போலும்.

என் உடம்பில் ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. என்னுடைய கால்கள் கீழே நிலைத்து நிற்க முடியாமல் நடுநடுங்கின.

"ஸார்! ஸார்! இது என்ன?" என்று கேட்டேன்.

"எது என்ன என்று கேட்கிறாய்? அடுத்த வீட்டில் ஏதோ புருஷன் பெண்டாட்டி சண்டை போலிருக்கிறது! அதைப் பற்றி நமக்கு என்ன?" என்றார் ஹெட்மாஸ்டர்.

அந்த வீட்டிலிருந்து நான் கிளம்பிச் சென்றபோது ரேழி நடையில் வைத்திருந்த சைக்கிளில் கால் தடுக்கிற்று. கட்டை விரலில் காயம் உண்டாயிற்று.

ஆனால் காயம்பட்டது என்பதாக எனக்கு அப்போது தெரியவேயில்லை. வீடு சென்ற பிறகுதான் தெரிந்தது.

வாசலில் நின்ற மோட்டாரில் நான் ஏறி உட்கார்ந்து காரைச் செலுத்திய போது 'ஸ்டியரிங்'கில் வைத்த என் கைகள் நடுங்கின; 'அக்ஸிலேட'ரில் வைத்த என் காலும் நடுங்கிற்று.

மோட்டாரை விடுவதற்கு முன்னால் தற்செயலாக அந்த வீட்டின் மேல் மாடிப் பக்கம் பார்த்தேன். திறக்

"அதை உன்னிடமும் சொல்லி விட்டாளா? கிருஷ்ணசாமி! நான் சொல்கிறேன், கேள்! தேவகி என்னுடைய பெண்தான். இருந்தாலும் அவள் சில சமயம் செய்கிறது எனக்குப் பிடிக்கிறதில்லை. இந்த மாதிரி வருகிறவர் போகிறவர்களிடம் எல்லாம்......" என்று ஹெட்மாஸ்டர் கூறியதும் நான் குறுக்கிட்டேன்.

"என்ன, ஸார், அப்படிச் சொல்கிறீர்கள்? என்னை வருகிறவர், போகிறவர்களோடு சேர்த்து விட்டீர்களே? ஏதோ பழைய விசுவாசத்தை நினைத்து என்னிடம் தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லலாம் என்று எண்ணித்தான் தேவகி சொன்னாள். அதற்காக நீங்கள் தேவகியைக் கோபித்துக் கொள்ள வேண்டாம்!" என்றேன்.

ஹெட்மாஸ்டர் தம்முடைய பிசகை உணர்ந்தவர் போல், "ஆமாம், கிருஷ்ணசாமி! உன்னிடம் சொன்னால் தவறில்லைதான். ஆனாலும் நாம்தான் கஷ்டப்படுகிறோம் என்றால், நம்மைச் சேர்ந்தவர்களிடமெல்லாம் நம்முடைய கஷ்டங்களைச் சொல்லி அவர்களையும் அநாவசியமாகக் கஷ்டப்படுத்தக் கூடாது அல்லவா?" என்றார்.

"சிநேகிதம் என்பது பின் எதற்காக? நம்முடைய கஷ்டங்களைச் சொல்லிக் கொள்வதற்கும் சமயா சமயங்களில் உதவியா யிருப்பதற்குந் தானே? என்னை வேற்று மனிதனாக நீங்கள் நினைக்கக் கூடாது. அது இருக்கட்டும்...... உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அந்தக் கறுப்பு மூக மூடி தரித்தவர்கள் ரஸாக்கியர்களா யிருப்பார்களா? அல்லது கம்யூனிஸ்டுகளா யிருப்பார்களா? ஹைதராபாத்தில் எனக்குத் தெரிந்த வர்த்தகர்கள், —செல்வாக்கு உள்ளவர்கள்,—சிலர் இருக்கிறார்கள். உங்கள் மாப்பிள்ளையைக் கண்டு பிடிப்பதற்கு நான் ஏதாவது முயற்சி செய்து பார்க்கட்டுமா?" என்று கேட்டேன்.

"பேஷாக முயற்சி செய்து பார்க்கலாம்; ஆனால் பலன் ஒன்றுமிராது!" என்றார் ஹெட்மாஸ்டர்.

அவர் இவ்விதம் கூறிய தொனி என் மன அமைதியைக் கெடுத்தது.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் எல்லாப் பிரயத்தனங்களும் செய்து பார்த்து விட்டீர்களா?" என்று கேட்டேன்.

"நான் ஒரு முயற்சியும் செய்யவில்லை!" என்றார் தேவகியின் தந்தை. பிறகு என் அருகில் வந்து மெல்லிய குரலில், "கிருஷ்ணசாமி! தேவகியின் சுபாவம் இன்னும் உனக்குத் தெரியவில்லையா? பாவம்! உன்னை அவள் ஏமாற்றி விட்டாள். அவள் வார்த்தையை நீ நம்பவே நம்பாதே! அவ்வளவும் கட்டுக் கதை. தேவகியின் கணவன் இந்த ஊரிலேதான் இருக்கிறான்!" என்றார்.

இதைக் கேட்டதும், எனக்கு எவ்வளவு திகைப்பு ஏற்பட்டிருக்குமென்பதை வாசகர்களே ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

"தேவகி அவ்வளவு பொய் புனை சுருட்டுச் சொல்லுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லைதான். அப்படியானால் உங்கள் மாப்பிள்ளை இந்த ஊரில்தான் இருக்கிறாரா? இந்த ஊரில் என்றால் எங்கே?" என்றேன்.

"பைத்தியம் பிடித்தவர்கள் எங்கே இருப்பார்களோ, அங்கேதான்!"

"என்ன, என்ன?"

"ஆமாம், கிருஷ்ணசாமி! ஒரு நாள் உனக்கு உண்மை தெரியாமலிராது. இந்த அசட்டுப் பெண் அதை மறைத்து வைக்க முயல்வதால் என்ன பயன்? என் மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் பைத்தியம். கொஞ்சம் என்ன? ஒரே முற்றின பைத்தியம். அதுவும் சில நாளாய்......" என்று நிறுத்தினார்.

அதற்கு மேலே கேட்பதற்கு எனக்கும் விருப்பம் இல்லை. மனம் ஒரேயடியாய்க் குழம்பி விட்டது. தேவகியிடம் முன்னைக் காட்டிலும் அதிக அநுதாபம் ஏற்பட்டது. அவள் என்னிடத்தில் பொய் சொன்னது பற்றி எனக்குக் கொஞ்சமும் கோபமோ மனஸ்தாபமோ ஏற்படவில்லை. தன் புருஷன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்று எந்த ஸ்திரீதான் தயக்கமின்றிச் சொல்வாள்? புருஷனைப் பற்றிக் கேட்டதும் தேவகியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் எனக்கு நினைவு வந்தன. பாவம்! அவளைப்போய்க் கேட்கப் போனேனே? புண்ணிலே குச்சியை எடுத்துக் குத்து

ணக்கு வந்து தன் தந்தையின் வீட்டில் தஞ்சம் புகுந்தாள். அது முதல் அப்பாவின் ஆதரவில் இருந்து வருகிறாள். எவ்வளவோ பத்திரிகைகளில் விளம்பரம் செய்து பார்த்தும், ஹைதராபாத் சர்க்காருக்கு மனுப் போட்டுப் பார்த்தும், தேவகியின் கணவனைப்பற்றி நாளது வரையில் தகவல் ஒன்றும் தெரியவில்லை!

இந்தத் துயரமான, பீதிகரமான வரலாற்றைத் தேவகி சொல்லிவிட்டு, கண்களில் துளித்த கண்ணீரைப் புடவைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டு "நான் வீட்டு வேலையைப் பார்க்கப் போகட்டுமா? இன்னும் சொல்ல வேண்டியது, பேசவேண்டியது எவ்வளவோ இருக்கிறது! இன்னொரு நாள் சொல்கிறேன்" என்றாள்.

அவள் போவதற்காக எழுந்து நின்றதும் எனக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

"தேவகி! என்னிடம் நீ கொஞ்சம் கூடச் சங்கோசப் படக்கூடாது. உனக்கு ஏதாவது எப்போதாவது என்னால் ஆகக்கூடிய உதவியிருந்தால் உடனே சொல்ல வேண்டும். அப்படி உனக்கு உதவி செய்யக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் அதைப் பெரும் பாக்கியமாகக் கருதுவேன்" என்றேன்.

தேவகி சில கண நேரம் யோசனை செய்துவிட்டு, "ஆமாம்; நானே ஒரு உதவி உங்களைக் கேட்கலாமென்றுதானிருந்தேன். நாளை மாலை இன்னொரு தடவை பொருட்காட்சிக்குப் போகவேண்டும் என்று குழந்தைகள் ஆசைப்படுகிறார்கள். பஸ்ஸில் இவர்களை அழைத்துக்கொண்டு போய் வருவது ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. உங்களிடம்தான் பெரிய மோட்டார் வண்டி இருக்கிறதே! நாளை சாயங்காலம் சுமார் நாலு மணிக்கு வந்து எங்களைப் பொருட்காட்சிக்கு அழைத்துப் போக முடியுமா?" என்று கேட்டாள்.

"இது என்ன பிரமாதம்? பேஷாக வந்து அழைத்துப் போகிறேன்!" என்று உற்சாகத்துடன் சொன்னேன்.

தேவகி சமையல் உள்ளுக்குச் சென்றதும், நானும் வெளிக் கிளம்பலாம் என்று யத்தனித்தேன். அச்சமயம் ஹெட்மாஸ்டர் ஸ்நான அறையிலிருந்து வந்துவிட்டார். "என்ன, கிருஷ்ணசாமி! புறப்படுகிறாயா?" என்றார்.

"புறப்பட வேண்டியதுதான்; உங்களிடம் விடைபெறுவதற்காகத்தான் காத்திருக்கிறேன்!" என்றேன்.

அவருடைய அறைக்குள் போனதும் "சற்றே உட்காரு, அப்பா, கிருஷ்ணசாமி! அவசரம் ஒன்றும் இல்லையே? கொஞ்சம் கழித்துப் போகலாம் அல்லவா?" என்றார்.

அதன்படியே நான் உட்கார்ந்தேன். ஏனெனில் என்னுடைய சந்தேகத்தை இன்னும் நான் நிவர்த்தி செய்து கொண்டபாடில்லை. தேவகியின் கையெழுத்துப் போல் எழுதியிருந்த அந்த 'போர்ஜரி' கடிதத்தை எழுதியது யார் என்னும் உண்மை அவர்களுக்குப் பிற்பாடு தெரிந்ததா? குற்றவாளி நான் இல்லை என்பதை அவர்கள் அப்புறமாவது தெரிந்து கொண்டார்களா? இதை அறிந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு ஆர்வம் அதிகமாயிருந்தது. ஆனால் அந்தப் பேச்சை எடுப்பதற்குச் சங்கோசமாயிருந்தது.

நான் உட்கார்ந்ததும் ஹெட் மாஸ்டர் "தேவகி உன்னிடம் என்ன சொன்னாள்? என் பேரில் ஏதாவது புகார் சொன்னாளா? நான் யோகாசனம் செய்வது பற்றிக் குறை சொல்லியிருப்பாளே?" என்று கேட்டார்.

"அதெல்லாம் இல்லை, ஸார்! உங்களைப் பற்றி தேவகி ஏன் புகார் சொல்லப் போகிறாள்? பாவம், அவளுக்கு நேர்ந்த கஷ்ட காலத்தில் நீங்களாவது தஞ்சம் கொடுப்பதற்கு இருந்தீர்களே? தேவகியின் புருஷனுடைய கதியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நினைக்க நினைக்க ரொம்ப வருத்தமாயிருக்கிறது!" என்றேன்.

"ஓஹோ! புருஷனைப் பற்றியும் சொல்லிவிட்டாளா? என்ன சொன்னாள்?" என்றார் ஹெட்மாஸ்டர்.

"ஹைதராபாத்தில் நடந்ததையெல்லாம் சொன்னாள். ஒரு நாள் இராத்திரி கறுப்பு முகமூடி போட்டுக் கொண்டு ஐந்தாறு பேர் வந்து டாக்டரை அழைத்துக் கொண்டு போனதைப் பற்றிச் சொன்னாள். அப்புறம் அவர் திரும்பியே வரவில்லையாமே?"



11

தேவகி தன்னுடைய கணவனைப் பற்றி "இப்போதே சொல்லத்தான் வேண்டுமா?" என்று கேட்டபோது, அவளுடைய குரலில் எல்லையில்லாச் சோகம் தொனித்தது. நான் எதிர்பார்த்தபடியே அவளுடைய இல்லற வாழ்க்கை துர்ப்பாக்கிய வாழ்க்கைதான் போலும்!

என் இருதயம் கனிந்து உருகிற்று. கண்ணில் கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "உனக்கு அது கஷ்டம் தருவதாயிருந்தால், இப்போது சொல்ல வேண்டாம். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்!" என்றேன்.

"இல்லை, இல்லை! அதை இப்போதே சொல்லி விடுவதுதான் நல்லது. அந்த விஷயம் ஒன்று மனதில் பாரமாய் இருப்பானேன்?" என்று தேவகி சொல்லி விட்டுத் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை ஒருவாறு கூறினாள். அதன் சுருக்கம் வருமாறு:—

தேவகிக்கு முதலில் நிச்சயிக்கப்பட்ட கலியாணம் நின்று போன மூன்று வருஷத்துக்குப் பிறகு வேறு வரனுக்குக் கலியாணம் ஆயிற்று. கலியாணம் ஆனதும் குடும்பம் சென்னைக்கு வந்து விட்டது. தேவகியின் கணவன் வைத்தியக் கல்வி படித்துத் தேறி டாக்டர் ஆனான். ஹைதராபாத் சமஸ்தானத்தில் டாக்டர்களுக்கு நல்ல வருமானம் என்று கேள்விப்பட்டு இருவரும் அங்கே போனார்கள். எதிர்பார்த்தபடியே அங்கு நல்ல வருமானமும் வந்தது. பல வருஷ காலம் அவர்களுடைய இல்லற வாழ்க்கை சந்தோஷமாக நடந்து வந்தது.

பிறகு, ஹைதராபாத்துக்குச் சனியன் பிடித்தது! ரஸாக்கியர்களின் கொடூர ஆட்சி அந்த நவாப் சமஸ்தானத்தில் ஏற்பட்டது. அத்துடன் கம்யூனிஸ்டுகளின் தொல்லையும் சேர்ந்து கொண்டது. ஹைதராபாத்தில் வசித்த ஜனங்கள் எல்லாரையும் போல் தேவகியும் அவள் குடும்பத்தாரும் எப்போது என்ன ஆபத்து நேருமோ என்று கதிகலங்கிக்கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

ஒரு நாள் இரவு பத்து மணிக்கு யாரோ சிலர் அவர்களுடைய வீட்டு வாசலுக்கு வந்து தடதட வென்று கதவை இடித்தார்கள். கதவைத் திறந்ததும் கறுப்பு முகமூடி அணிந்த ஐந்தாறு தடியர்கள் வீட்டுக்குள் புகுந்தார்கள். டாக்டரை அவருடைய மருந்துப் பெட்டியையும், மற்ற அவசியமான கருவிகளையும் எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். 'ஏதோ வைத்தியத்துக்குத் தானே கூப்பிடுகிறார்கள்?' என்று எண்ணி டாக்டர் அவர்களுடன் சென்றார். வாசலில் போலீஸ் வண்டியைப் போன்ற கூண்டு மோட்டார் வண்டி ஒன்று நின்றது. அதில் டாக்டரை ஏற்றி அழைத்துப் போனார்கள். அன்றைக்குப் போனவர் அப்புறம் திரும்பி வரவேயில்லை. எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அவர் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தேவகி தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்



விநியோகஸ்தர்கள்:

வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் சித்தூர்: மெஸர்ஸ். குமாரவேல் பிக்சர்ஸ், மெட்ராஸ் 7
திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர்: மெஸர்ஸ் ராதாகிருஷ்ணா பிக்சர்ஸ், 68, பெரிய பஜார் தெரு, திருச்சிராப்பள்ளி
சேலம்: மெஸர்ஸ். தனலக்ஷ்மி பிலிம்ஸ், செவ்வாய்ப்பேட்டை, சேலம்
கோயமுத்தூர்: மெஸர்ஸ். கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்
மதுரை ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை: மெஸர்ஸ். CT. RM. பிலிம்ஸ், கானாடுகாத்தான்
திருவாங்கூர்: மெஸர்ஸ். நாஷனல் [illegible], கோட்டயம்
கொச்சி, வட. தென் மலபார்: மெஸர்ஸ். அஸோஸியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணாகுளம்
சிலோன்: மெஸர்ஸ். வெலிங்டன் டாக்கி சர்க்யூட், கொழும்பு

இதர பிரதேசங்களுக்கு எழுதவும்: பாலாஜி பிக்சர்ஸ், 28, [illegible] ரோடு, சேத்துப்பட்டு, மதராஸ்

பிரிட்டிஷ் மக்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பிரிட்டிஷ் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட சர்ச்சிலும், இந்திய சுதந்திரத்தைப் பற்றிப் பேசவில்லை; அதை ஆட்சேபிக்கவும் இல்லை. பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் சக்திக்கு இதுவும் ஒரு அத்தாட்சி என்பதில் சந்தேகம் என்ன?


இந்தியாவுக்கு எச்சரிக்கை

பிரிட்டனின் பொதுத் தேர்தல் முடிவு இந்தியாவுக்கும் ஓர் எச்சரிக்கையாகும். இங்கேயும் நம் அருமைத் தலைவர்களைக் கொண்ட காங்கிரஸ் சர்க்கார் மத்திய வகுப்பாரின் தலையில் சுமக்க முடியாத பாரங்களைச் சுமத்தி வருகிறார்கள். மத்திய வகுப்பார் பொதுவாக அறிவு பலம் படைத்தவர்கள் என்பதைக் காங்கிரஸ் மந்திரிகள் மறந்துவிடக் கூடாது. தேசபக்தர்களும் தேசீயப் போரில் பெரும் பங்கு கொண்டவர்களுமான மத்திய வகுப்பாரைப் பெரிதும் பாதிக்கும்படியான காரியங்களைக் காங்கிரஸ் மந்திரிமார்கள் செய்வது உசிதமல்ல; நியாயமல்ல; அறிவுடைமையும் ஆகாது. மத்திய வகுப்பார் பொதுவாகத் தேசபக்தர்கள் என்பதற்காக அவர்களை அளவுக்கு மீறிச் சோதிக்கக் கூடாது.

விஷயத்தை இன்னும் நன்றாகத் தெளிவுபடுத்தும் பொருட்டு "மத்திய வகுப்பார்" என்பவர் யார் என்பதையும் சொல்லிவிடுகிறோம். மாதம் முப்பது ரூபாயிலிருந்து மாதம் முந்நூறு ரூபாய் வரையில் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள், வாத்தியார்கள், வர்த்தக குமாஸ்தாக்கள், சில்லறைக் கடை வியாபாரிகள், பத்து ஏக்கரா அல்லது இருபது ஏக்கரா நிலம் படைத்த சொற்ப மிராசுதார்கள், குடியானவர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடுகிறவர்கள் — இவர்கள்தான் மத்திய வகுப்பினர். தற்சமயம் காங்கிரஸ் ஆட்சியில் இவர்கள் பலவிதங்களிலும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

தேர்தல் முடிவை இப்படியோ அப்படியோ மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் மத்திய வகுப்பார் ஆவர். அவர்களை ரொம்பவும் தொல்லைப்படுத்தினால் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் மெஜாரிட்டி பலம் குன்றியதுபோல் காங்கிரஸ் மெஜாரிட்டி பலமும் அடுத்த தேர்தலில் குன்றிவிடக் கூடும். இதை நம்முடைய மாபெருந் தலைவர்களும் காங்கிரஸ் ஊழியர்களும் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக.

பழைய டிரைவரேதான் ஆனால்.....!



ஜயித்துக் கொடுத்த சர்ச்சிலுடைய கன்சர்வேடிவ் கட்சி பெருந்தோல்வி அடைந்தது. நமது ராஜாஜியைத் தவிர வேறு யாருமே அப்போது "தொழிற் கட்சி ஜயிக்கும்" என்று சொல்லவில்லை. ஆனாலும் தொழிற் கட்சி அபாரமாக வெற்றி அடைந்தது. பார்லிமெண்டில் தொழிற் கட்சிக்கு 150 அதிக ஸ்தானங்கள் கிடைத்தன. இதைப் பிரமாதமான 'மெஜாரிட்டி' என்றே சொல்லவேண்டும்.

தேர்தல் முடிவு இவ்விதம் வெளியாகி, ஆட்லியைத் தலைவராகக் கொண்ட தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்பட்ட போது உலகத்தில் பல தேசங்களின் மக்கள் "பிரிட்டிஷ் ஜனங்கள் நன்றியில்லாதவர்கள். இல்லாவிடில் யுத்தத்தை ஜயித்து பிரிட்டனைக் காப்பாற்றிய சர்ச்சிலைப் புறக்கணித்திருப்பார்களா?" என்று கேட்டார்கள். ஆனால், சர்ச்சில் அவ்விதம் சொன்னாரோ என்றால், அது தான் இல்லை. பிரிட்டிஷ் மக்களைப் பார்த்து அவர் "யுத்தத்தில் ஜயித்த என்னைப் புறக்கணித்தீர்களே! நீங்கள் நன்றி கெட்டவர்கள்!" என்று திட்டவில்லை. அரசியலிலிருந்து விலகிச் சந்நியாசம் பூணவில்லை. "பிரிட்டிஷ் மக்கள் தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தினார்கள். ரொம்ப சரி!" என்றார். அதோடு எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் பார்லிமெண்டுக்குத் தவறாமல் வந்து தொழிற் கட்சித் திட்டங்களை ஆதரிக்க வேண்டியபோது ஆதரித்தும் எதிர்க்க வேண்டியபோது எதிர்த்தும் வந்தார். மக்களிடையிலும் தம்முடைய கட்சியை நன்கு எடுத்துச் சொல்லி வந்தார்.

கடைசியாக, சென்ற மாதத்தில் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடந்து முடிவும் வெளியாகி விட்டது. இதில் நாம் காண்பது என்ன? ஆட்லியின் கட்சி ஆட்டம் கொடுத்துப் போனதைக் காண்கிறோம். தொழிற்கட்சி பெற்றிருந்த மெஜாரிட்டி பலம் ரொம்ப ரொம்பச் சுருங்கிப் போய் விட்டது. மற்றக் கட்சி அங்கத்தினர்களைக் காட்டிலும் தொழிற் கட்சியில் ஏழு அங்கத்தினர்தான் அதிகம்! எனவே இப்போது ஏற்படும் தொழிற் கட்சி சர்க்கார் நித்தியகண்டமாகத் தான் நடைபெற வேண்டும். பார்லிமெண்டில் ஒரு நாள் பத்து தொழிற் கட்சி அங்கத்தினர் வராமற்போனால் சர்க்கார் கட்சி தோற்றுப்போகும் நிலைமை ஏற்பட்டு விடும். இதில் தொழிற் கட்சிக்கு ஏமாற்றமும் கன்சர்வேடிவ் கட்சிக்குக் கொண்டாட்டமும் ஏற்படுவது இயற்கையே. ஆனால் உலகத்தில் ஜனநாயகம் வளர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த நிலைமை பற்றி மொத்தத்தில் உற்சாகமே அடைவார்கள். தொழிற் கட்சியார் ஓரளவு தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் சீக்கிரத்தில் அவர்களுடைய சர்க்கார் விழுந்து மறுதேர்தல் நடத்த வேண்டி நேரிடும். இதன் மூலம் பிரிட்டனில் பொதுஜன அபிப்பிராயம் விழிப்புடனிருந்து உண்மையாகவே ஜனநாயக அரசாங்கத்தை நடத்துகிறது என்று ஏற்படுகிறது அல்லவா?

ஆட்டத்தின் காரணம்

ஆட்லி கட்சியின் மெஜாரிட்டி பலம் இவ்வளவு குறைந்து போனதற்குக் காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். தொழிற் கட்சி சர்க்கார் பிரிட்டிஷ் தொழிலாளருடைய நிலைமையை உயர்த்தி அவர்களுக்கு வசதி தரும்படியான பல திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக நாட்டின் நலன்களையும் நன்கு பாதுகாத்து வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றும்போது அவர்கள் பணக்கார வகுப்பாருக்கும் நடுத்தர வகுப்பாருக்கும் சில கஷ்டங்களைத் தரவேண்டியதாயிற்று. பணக்கார வகுப்பார் தங்கள் சுகபோகங்களில் பெரும் பகுதியைக் குறைத்துக் கொள்ள நேர்ந்ததினால் தேர்தல் முடிவில் பாதகம் அதிகம் நேர்ந்திராது. ஏனெனில், பெரும் பணக்காரர்கள் எந்த நாட்டிலும் குறைவாகவே இருப்பர். ஆனால் தொழிற் கட்சியின் திட்டங்கள் நடுத்தர வகுப்பாரையும் அதிகமாகப் பாதித்தன. நடுத்தர வகுப்பார் தொகையில் அதிகமானவர்கள். அதோடு அறிவிலும் ஆற்றலிலும் மிக்கவர்கள். அவர்களுடைய வோட்டுக்கள் பெரும்பாலும் தொழிற் கட்சிக்கு எதிராகப் போனதே இப்போது நடந்த தேர்தலில் தொழிற் கட்சியின் மெஜாரிட்டி குன்றிப் போனதற்கு முக்கிய காரணமாகும்.

இந்தத் தேர்தலில் இன்னும் ஒரு முக்கியமான அம்சத்தை நாம் அவசியம் கவனிக்க வேண்டும். இந்தியாவின் சுதந்திரத்துக்குச் சர்ச்சில் பெரிய விரோதியாயிருந்தார் என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆயினும் தேர்தல் பிரசாரத்தின்போது இந்தியா விஷயத்தைப் பற்றிச் சர்ச்சில் பிரஸ்தாபிக்கவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்ததைத் தொழிற் கட்சி செய்த குற்றமாக எடுத்துச் சொல்லவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்தது நியாயம் என்றும் புத்திசாலித்தனம் என்றும் பொதுவாக


பலே பிரிட்டன்!

பிரிட்டானிய மக்கள் ஒரு அதிசயமான இனத்தினர். வெற்றியினால் அவர்கள் மதோன்மத்தம் அடைவதில்லை. தோல்வியினால் சோர்ந்து உட்காருவதுமில்லை. சுகங்களில் அடியோடு ஆழ்ந்துவிடுவதில்லை. கஷ்டங்களைக் கண்டு மிரண்டு விடுவதில்லை. உலகத்தில் இன்றைக்கு எந்தத் தேசத்திலாவது உண்மையான ஜனநாயகம் குடிகொண்டிருக்கிறது என்றால், அது பிரிட்டானியாவிலேதான்! உண்மையான ஜனநாயகத்தைப் பிரிட்டிஷ் மக்கள் பாதுகாப்பதற்கு அவர்களுடைய அரசியல் கட்சி முறை அரிய சாதனமாய் அமைந்திருக்கிறது. ஏற்கெனவே டோரி கட்சி ஒன்றும் லிபரல் கட்சி ஒன்றும் ஏறக்குறைய சம பலத்துடன் இருந்து மாற்றி மாற்றி அரசாங்கத்தை நடத்தி வந்தன. இப்போது கன்சர்வேடிவ் கட்சியும் தொழிற் கட்சியும் அதே கைங்கரியத்தை நடத்தி வருகின்றன. இரண்டு கட்சிக்கும் நாட்டில் சமமான செல்வாக்கு இருப்பதில் ஒரு பெரிய அநுகூலம் இருக்கிறது. ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்தும்போது அதன் குற்றங் குறைகளை இன்னொரு கட்சி எடுத்துக் காட்டிக் கொண்டே வருகிறது. இதனால் அரசாங்கக் கட்சி பெரிய தவறு எதுவும் செய்ய முடிவதில்லை. "அடுத்தாற்போல் தேர்தல் வருமே?" என்ற எண்ணம் எப்போதும் இருந்து வருகிறது. ஆகையால் பெரும்பாலான மக்களுக்குச் சௌகரியமான, அவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய முறைகளையே அரசாங்கத்தை நடத்தும் கட்சி கடைப்பிடிக்கிறது. "ஐந்து வருஷம் கழித்துத்தானே தேர்தல்?" என்று அசட்டையாயிருக்கவும் முடிகிறதில்லை. ஏனெனில், அரசாங்கத்துக்குப் பொது ஜன ஆதரவு உண்டா என்பதைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும் எதிர்க் கட்சியார் "தேர்தல் நடத்துங்கள்!" என்று கேட்கிறார்கள். அரசாங்கம் உடனே தேர்தலுக்கு ஏற்பாடு செய்கிறது. புதிய தேர்தலில் பொதுஜன அபிப்பிராயத்தை யொட்டிக் கட்சியின் பலாபலங்கள் ஏற்படுகின்றன. ஒரு கட்சியாரிடமிருந்து இன்னொரு கட்சியாரிடம் அரசாங்கத்தை மாற்றிக் கொடுப்பதில் இன்னொரு பெரிய அநுகூலம் உண்டு. அதாவது ஜனங்கள் தங்களுடைய அரசாங்கந்தான் நடைபெறுகிறது என்பதை மேற்படி மாறுதல் மூலம் உறுதிப் படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே அரசாங்கத்தை மாற்றுவதற்குப் புரட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணமே ஜனங்களுக்கு உண்டாவதில்லை. வோட்டு மூலம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு வசதி இருக்கும்போது பலாத்கார முறையைக் கைக்கொள்ளும் எண்ணமே தோன்ற இடமில்லை அல்லவா? இதனாலேயே பிரிட்டனில் 'கம்யூனிஸ்ட்' கட்சிக்குச் செல்வாக்கு ஏற்படுவதில்லை. பிரிட்டிஷ் கட்சி முறையில் இன்னொரு பெரிய அற்புதம் என்னவென்றால், யுத்தம் முதலிய பெரும் விபத்துக்கள் ஏற்படும்போது இரு கட்சியார்களும் ஒன்று சேர்ந்து கூட்டு சர்க்கார் அமைத்து விடுகிறார்கள். கட்சி வேற்றுமைகளை அப்போது அடியோடு மறந்து பூரண ஒற்றுமையுடன் சர்க்காரை நடத்துகிறார்கள். யுத்தம் என்கிற அவசியம் முடிந்ததும் கட்சிகள் பிரிந்து தனித்தனியாகி விடுகின்றன. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது "பலே பிரிட்டன்!" என்று சொல்லத் தோன்றுகிறதா, இல்லையா?

ஆட்லியின ஆட்டம்

சென்ற மகா யுத்தத்தின்போது முன் எப்போதும் பிரிட்டனுக்கு நேராத அபாயம் நேர்ந்திருந்தது. அச்சமயம் கன்சர்வேடிவ் கட்சியும் தொழிற் கட்சியும் கூட்டாகச் சேர்ந்து சர்க்காரை நடத்தினார்கள். யுத்த காலத்துக்குத் தக்க தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில்தான் என்பதை உணர்ந்து அவரைப் பிரதம மந்திரியாக வைத்துக்கொண்டு அவருக்கு அடங்கி எல்லாரும் ஒத்துழைத்தார்கள். யுத்தத்துக்கு முன்னால் வின்ஸ்டன் சர்ச்சில் கன்சர்வேடிவ் கட்சியினால் புறக்கணிக்கப் பட்டவர் என்பதை மறந்து விடக் கூடாது. அதேமாதிரி யுத்தகாலத்தின் மந்திரி சபையில் முக்கியஸ்தரா யிருந்த ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தொழிற் கட்சியிலிருந்து தள்ளப்பட்டவர். இவர்கள் இருவரையும் யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் மக்கள் பிரமாதப் படுத்தினார்கள். சர்ச்சிலை வானத்துக்கும் மேலே தூக்கி வைத்துத் தோத்திரம் செய்தார்கள்.

யுத்தம் முடிந்ததும் கட்சிகள் பிரிந்தன. தேர்தல் நடந்தது. யுத்தத்தை


"லியாகத், ஞாபகம் இருக்கட்டும்! நானும் உம்மைப் போலத் தான் என் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தேன். ஆனால், அது பலிக்கவில்லை."
ஒதுங்கள்! இங்கே நிற்காதீர்கள்!
ஹிட்லர்


ஐக்கிய தேச மகாசபை காஷ்மீர் விவகாரத்தை விசாரணை செய்யும் போக்கைப் பார்த்தால் கி.பி. 2500லும் கூட அது ஒரு முடிவுக்கு வராது போலத் தோன்றுகிறது!
ஐக்கிய தேச மகாசபை
கி.பி. 2500
SHASTRI

டிருக்கலாம். இதைப்பற்றிக்கூட கனம் கோபால் ரெட்டி யோசித்து வருவதாக அவருடைய பேச்சிலிருந்து தெரிகிறது. இந்த மாகாணத்தில் மோட்டார்களுக்கு விதித்திருக்கும் வரி மிக அதிகம் என்றும் அதைக் குறைக்கலாமா வென்று யோசித்து வருவதாகவும் நிதி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார். மோட்டார் வரியைக் குறைப்பதைக் காட்டிலும் முக்கியமானது ஹோட்டல் வரியை எடுப்பதாகும். வருஷம் ரூ. 25,000க்கு மேல் விற்பனையாகும் ஹோட்டல்களுக்கு இப்போது விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியானது பணக்கார ஹோட்டல் முதலாளிகளைப் பாதிக்கிறது என்று நினைப்பது தவறு. நம் நாட்டு ஹோட்டல்களில் சாப்பிடுவோரில் மிகப் பெரும்பாலோர் ஏழை எளியவர்களும் நடுத்தர வகுப்பினருந்தான். ஹோட்டலுக்குப் போடும் வரி, ஏழைக் குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், சில்லறைக் கடை வியாபாரிகள், தொழிலாளிகள் முதலிய எளியவர்களின் தலையில்தான் கடைசியில் போய் விழுகிறது. வரியை ஈடு செய்வதற்காக ஹோட்டல் முதலாளிகள் ஒன்று விலையைத் தூக்குகிறார்கள்; அல்லது பலகாரங்களின் அளவைக் குறைக்கிறார்கள். பொதுவாக இப்போது நாடெங்குமுள்ள ஹோட்டல்களில் கிடைக்கும் பண்டங்களின் தரம் மிக மிக மோசமாயிருக்கிறது. ஆகவே மோட்டார் வரியைக் குறைப்பதற்கு முன்னால் ஹோட்டல் வரியை எடுப்பது அவசியமாகும்.

புது வரிகள் இல்லையென்பது தவிர இந்த வருஷத்துச் சென்னை மாகாணத்துப் பட்ஜெட்டில் பிரமாதமான உற்சாகத்தை அளிக்கக்கூடிய அம்சங்கள் இல்லை. மக்களின் முன்னேற்றத்துக்கும் தேசத்தின் பொது நலத்துக்கும் உகந்த திட்டங்கள் காணப்படவில்லை.

உத்தேச நீர்ப்பாசனத் திட்டங்களைக் குறித்துச் சொல்லியிருப்பது ஒன்றுதான் சிறிது உற்சாகத்துக்கு இடமாயிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நாட்டின் தேவைக்குப் போதுமானவை அல்ல. 1952-ம் வருஷத்துக்குள் நம்முடைய உணவுத் தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தேசம் நிறைவேற வேண்டுமானால், உணவு உற்பத்தி—நீர்ப்பாசனத் திட்டங்களில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்போது போட்டிருக்கும் திட்டங்களைப் போல் இன்னும் நாலு மடங்குத் திட்டங்கள் போட்டுத் துரிதமாக நடத்தி வைக்க வேண்டும்.

ஆகாச வெடி

"பிரிட்டனில் கரன்ஸி நோட்டுகளில் தொத்து நோய்ப் பூச்சிகள் ஓட்டிக் கொண்டிருக்கின்றனவாம்."

—லண்டன் செய்தி.

கரன்ஸி நோட்டுகள் கைக்குக் கை தொத்திக் கொண்டிருக்குமாதலால் தங்களுடைய தொத்தும் வெகு சுலபமாகி விடும் என்று மேற்படி பூச்சிகள் எண்ணியிருக்கவேண்டும்!

★

"உணவு தானியங்களை மிச்சப்படுத்தும் நோக்கத்துடன் பம்பாய்ப் பிரதம மந்திரி ஸ்ரீ பி. ஜி. கேர் 'ஒரு வருஷத்துக்கு எனக்கு ரேஷன் வேண்டாம்' என்று தமது ரேஷன் கார்டை ஒப்படைத்து விட்டார்."

—ஒரு செய்தி.

நம் ஊர் ரேஷன் தானியங்களை ஸ்ரீ கேர் ஒரு தடவை பார்வையிட்டால் தமக்கு எப்போதுமே ரேஷன் வேண்டாமென்று கூறியிருப்பார்.

★

"மதுரையில் இருவர் 'டிரேடில்' மெஷினை வைத்துக்கொண்டு கள்ளநோட்டுகள் தயாரித்துக் கொண்டிருந்தனர். ரூ. 9950 வரை அச்சடித்துக் கொண்டிருக்கும்போது போலீஸார் நுழைந்து பிடித்து விட்டனர்."—மதுரைச் செய்தி.

முழுசாகப் பத்தாயிரம் ஆக்குவதற்குள் இந்தப் போலீஸுக்கு என்ன அவசரமோ தெரியவில்லை.

★

"பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு பலப்படவேண்டும். முதலில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ரயில் போக்கு வரத்து வசதி அதிகரிக்கவேண்டும்."

—செய்தி.

"முக்கியமாகப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்து சேருவதற்கு ரயில் வசதி அதிகரிக்கவேண்டும்" என்று கூறுகிறார் ஓர் அகதி.

★

"சூரிய மண்டலத்தில் கருப்பு நிறம் வாய்ந்த சில பெரிய புள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றால் மனித குலத்துக்கு எவ்வித உபயோகமுமில்லை."

—ஒரு சென்னைவாசி.

சூரிய மண்டலத்தில் என்ன? பூமண்டலத்தில்கூட சில 'பெரிய புள்ளிகள்' இருக்கின்றனர். இவர்களாலும் ஒருவித உபயோகமும் கிடையாது.

விற்பனை வரிகளும் சென்ற மூன்று வருஷத்தில் விதித்திருக்கும் மற்றப் புது வரிகளும் ஈடுசெய்து விட்டன.

நாலுகோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் என்று சொல்வதும் பிசகுதான்.

வரவேண்டியதைக் குறைத்தும் செலவினங்களை மிகைப்படுத்தியும் கணக்குப் போட்டதனால் இந்தத் துண்டு விழுந்திருக்கிறது.

புதிய வரிகளைப் போட்டு வருமானத்தை அதிகப்படுத்துவதும் வருமானம் அதிகமாயிருக்கிறதே என்று சர்க்கார் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் அதிகப்படுத்துவதும் சர்க்கார் பொருளாதார நிபுணர்கள் அனுசரிக்கும் ஒரு தந்திரம். இந்தத் தந்திரத்துக்கு நம்முடைய மதிமந்திரிகள் இரையாகி வருகிறார்கள்.''

இந்த வருஷத்து பட்ஜெட் அறிக்கையிலிருந்து மேற்கண்டவாறு நாம் எழுதியது நூற்றுக்கு நூறு உண்மை என்பது நிரூபிக்கப்படுகிறது.

சென்ற வருஷ பட்ஜெட் கொண்டு வந்தபோது கனம் கோபால் ரெட்டி நாலு கோடி ரூபாய் துண்டு விழும் என்று எதிர் பார்த்தார். அதைச் சரிக் கட்டுவதற்காகப் பல புதிய வரிகளைக் கொண்டு வரப்போவதாகச் சொன்னார். புது வரிகளுக்கு நாட்டிலே பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. சட்டசபை அங்கத்தினர் சிலரும் எதிர்த்தார்கள். புது வரிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவையெல்லாம் கைவிடப் பட்டன.

அதனால் குடி முழுகிப் போய்விட்டதா? 1949—50ல் சென்னை மாகாணத்து வரவு செலவில் துண்டு விழுந்ததா? சர்க்காரின் பொருளாதாரம் சீர்குலைந்ததா? இல்லவே இல்லை. திருத்தப்பட்ட கணக்குகளின்படி 1949-50ம் ஆண்டின் நிலைமை இதுதான்:—

வரவு	ரூ.	56,91 30,000
செலவு	ரூ.	56,38,17,000
மிச்சம்	ரூ.	53,13,000

இப்படி மிச்சம் ஏற்படும் நிலைமை இருக்கும்போது சென்ற வருஷத்தில் நிதி மந்திரி கொண்டு வந்த பட்ஜெட்டில் நாலு கோடி ரூபாய் அதிகப்படி செலவாகும் என்று காட்டியதும், அதை ஈடு செய்யப் பல புது வரிகள் போடுவதாகச் சொன்னதும் எவ்வளவு அபத்தம் என்பது தெளிவாக வில்லையா?

சென்ற வருஷத்தில் வெள்ளப் பாழ், காய்ச்சல் பாழ் காரணமாக நிலவரியில் 70 லட்சம் ரூபாய் வரையில் தள்ளிக் கொடுக்கப் போகிறார்கள். அதையும் கணக்கில் எடுத்துக் கொண்ட பிறகு மேற்கண்டவாறு 53 லட்சம் மிகுதியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, சென்ற வருஷத்தில் தயாரிக்கப்பட்ட சென்னை பட்ஜெட்டைப் போல் பிசகான முறையில் பட்ஜெட் தயாரிப்பதற்கு பொருளாதார விஷயங்களில் எவ்வளவு அறியாமை இருந்திருக்க வேண்டும் என்று அறிந்து கொள்ளலாம்.

கொண்டு வருவதாகச் சொன்ன புதிய வரிகள் எல்லாவற்றையுமே விட்டு விட்டால் கௌரவக் குறைவு நேர்ந்து விடும் என்று எண்ணி, மோட்டார்வரி, ஹோட்டல் வரி போன்ற இரண்டொரு வரி இனங்களைப் பிடிவாதமாகக் கனம் கோபால் ரெட்டி அமுலுக்குக் கொண்டு வந்தார். அந்த வரிகளைப் போடாதிருந்தாலும் சென்ற வருஷத்து வரவு செலவு சரிக்கட்டி யிருக்கும் என்பது இப்போது தெளிவாகிறது. அந்த வரிகளில் கிடைத்திருக்கக் கூடியதைவிட அதிகமாகவே (அதாவது 53 லட்சம் ரூபாய்) மிச்சம் விழுந்திருக்கிறது அல்லவா!

போகட்டும்; போன வருஷத்து பட்ஜெட்டின் பிசகான முறையை இந்தவருஷமும் கடைப் பிடிக்காமல் சீர்திருத்தியிருப்பதற்காக நாம் நிதி மந்திரியிடம் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம். அரசாங்க பீடங்களில் உள்ளவர்கள் செய்த தவறுகளை எடுத்துக் காட்டிய பிறகாவது திருத்திக் கொண்டால் அதற்காகவே நாம் நன்றியுடன் வந்தனம் செலுத்த வேண்டியதுதான்.

இந்த வருஷத்தில் சென்னை மாகாணத்தின் உத்தேச வரவு செலவு வருமாறு:—

வரவு	ரூ.	55,21,25,000
செலவு	ரூ.	55,57,23,000
அதிகச் செலவு	ரூ	35,98,000

இவ்வாறு 35 லட்சம் துண்டு விழும் என்று காட்டியிருந்தாலும் அதற்காகப் புது வரி போடப்போவதில்லை. புது வரி போடும் அவசியமும் இல்லை. ஏனெனில் அடுத்த வருஷத்தில் இந்த வருஷத்துத் திருத்தப்பட்ட வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பிக்கும் போது இந்த 35 லட்சம் துண்டு விழுவதற்குப் பதிலாகச் சில லட்சம் மிச்சம் ஏற்படக்கூடும். இதை அறிந்துதான் நிதி மந்திரி புதுவரிகள் கொண்டுவரவில்லை என்று கருதுகிறோம்.

இந்த நிலைமையில் சென்ற வருஷத்தில் அநாவசியமாகப் புதிதாய் விதித்த சில வரிகளை இந்த வருஷத்தில் எடுத்துவிட்

கல்கி

மலர் 9 இதழ் 31

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

என்ன சேதி?

பரவாயில்லை பட்ஜெட்

"ஆஹா! என்ன சுகம்! அடாடா! என்ன ஆனந்தம்!" என்று ஒருவன் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் அவ்வளவு சந்தோஷப்படுவதற்கு என்ன காரணம் என்று விசாரித்தார்கள். "வயிற்று வலியால் ரொம்பக் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தேன். வயிற்று வலி நின்றதும் வெகு சுகமாயிருக்கிறது. மிக ஆனந்தமாயிருக்கிறது!" என்று அவன் பதில் சொன்னான்.

கனம் கோபால் ரெட்டியார் பட்ஜெட் கொண்டுவரப் போகிறார் என்றால், யார் தலையில் எத்தனை பெரிய கல்லைத் தூக்கிப் போடுவாரோ என்று எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது வழக்கம். ஆகவே, இந்த வருஷத்து பட்ஜெட்டில் அவர் புதிய வரி ஒன்றும் கொண்டு வரவில்லையென்று தெரியப் படுத்தியதும் சென்னைச் சட்டசபை அங்கத்தினர்கள் கரகோஷம் செய்து ஆரவாரித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை அல்லவா? சென்னை மாகாணத்துப் பொது மக்களும் "அப்பாடா! இந்த மட்டோடு கோபால ரெட்டி நம்மை விட்டாரே!" என்று பெருமூச்செறிந்து ஓரளவு உற்சாகப் படுகிறார்கள்.

அதோடு கூட, இந்த வருஷத்துப் பட்ஜெட்டைப் படித்ததும், நமக்கு இன்னொரு பெரிய ஆறுதல் உண்டாகிறது. "தனக்காகவும் தெரியாது; சொன்னாலும் கேட்கமாட்டான்" என்பதாகப் பிரசித்தி பெற்ற சில புள்ளிகள் உண்டு. நம்முடைய நிதி மந்திரி கனம் கோபால ரெட்டி அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவரல்ல என்பதைத் தெரிந்து கொள்கிறோம். அவருக்குத் தமக்காக அவ்வளவு தெரியாவிட்டாலும் பிறர் சொல்வதற்குக் கொஞ்சம் செவி கொடுக்கிறார்; பழைய அநுபவங்களிலிருந்தும் சிறிது படித்துக் கொள்கிறார். சென்ற இரண்டு வருஷத்து பட்ஜெட்டுகளில் அவர் செய்த தவறுகளைத் தெரிந்து கொண்டு இந்த வருஷத்தில் அந்த தவறுகளை மறுபடி செய்யாமல் மாகாண பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார். அந்த வரையில் நாம் உற்சாகமடைய இடமிருக்கிறது அல்லவா?

"அபத்த பட்ஜெட்டும் அவசர வரி விதிப்பும்" என்ற தலைப்பில் 1949-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28உ "கல்கி" இதழில் நாம் எழுதியிருந்ததை நேயர்கள் மறந்திருக்க முடியாது. அந்தக் கட்டுரையின் முக்கியமான பகுதி இதுதான்:—

"ஒரு அரசாங்கத்தின் பட்ஜெட்டைத் தயாரிப்பவர்கள் வரவையும் செலவையும் சரியாக மதிப்பிட்டு பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால் பட்ஜெட்டுக்கு அர்த்தமே இல்லை.

வரவைக் குறைவாகவும் செலவை அதிகமாகவும் காட்டி பட்ஜெட் தயாரிக்கக் கூடாது. அப்படித் தயாரித்தால் அதன் விளைவு என்ன? ஜனங்கள் தலையில் அநாவசியமாக வரியைச் சுமத்துவதுதான்.

தற்சமயம் சென்னை மாகாணத்திற்கு வருஷ வருமானம் ரூபாய் ஐம்பது கோடிக்கு மேல் வருகிறது. வீண் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக நிர்வாகத்தை நடத்தினால் இந்த ஐம்பது கோடி ரூபாய்க்குள் மாகாண அரசாங்கம் நடக்கும்.

பூரண மதுவிலக்கினால் ஏற்பட்ட வருமான நஷ்டத்துக்கும் பலவகை



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 31 | மார்ச் 5 | விரோதி ௵ மாசி 22௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் நெ.1 நெ.2


No.1 No.2

டாய்லெட் (ஸ்நான) சோப்புகள்

பொறுக்கி எடுக்கப்பட்ட புஷ்டியளிக்கும் தாவர எண்ணெய்களையும் இதர மூலங்களையும் சேர்த்து புகழ் வாய்ந்த சிறந்த முறையில் பிரத்யேகமாய் திறம்பட தயாரிக்கப் படுகின்றன. அவைகளின் பரிமளம் கமழும் சிறந்த நுரையே அழகை யூட்டி கிருமிகளையும் கொல்லுகிறது.


கவனியுங்கள்

இந்த சௌந்தரிய சோப்புக்கள் சாஸ்த்ரீய முறைப்படி பரிசுத்த மானவை என்றும் நன்மை பயக்குபவை என்றும் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. சில சோப்புகள், தவறுதலாக, பரிசுத்த மானவைகளாக கருதப்படுகின்றன. ஏனெனில் உதாரணமாய் பார்ப்பதற்கு பளிங்குபோல் தென்படுவதினால்; இது அவைகளின் பரிசுத்தத் திற்கோ அல்லது தரத்திற்கோ எவ்வித அறிகுறியுமாகாது.



நெ. 1 — இப் பெரிய கட்டி பணத்திற்கேற்ப உத்தமமான மதிப்பு வாய்ந்தது. உங்களுடைய ஸ்நானங்களில் நீங்கள் திருப்தியைக் காண்பீர்கள்.

ஆராய்ந்தறிந்தோர் உபயோகிக்கும் சோப்புகள்



கோத்ரெஜின் இதர உயர்ரக தயாரிப்புகள்

ஷேவிங் ஸ்டிக், ஷேவிங் 'ரவுண்டு' க்ளிசரின் கூந்தல் தைலம்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தரவாதமானது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.-மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி


மார்ச்
18 முதல்
கலைப்பூங்காவிலே
பூத்திட்ட ஒரு புதுக்
காதல் மலர்....
விஜயகுமாரி
ஜூபிடர் தயாரிப்பு
டைரக்ஷன் ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டுடியோ
சென்ட்ரல்


ஒவ்வொரு ஸ்நானமும் உங்களுக்குக் கொடுக்கக்கூடியது எண்ணெய் ஸ்நானத்தின் வழவழப்பு
கோரா எண்ணெய் ஸ்நான சோப்பின் செழிப்பான நுரை உள்ளே நன்றாக இறங்கி உங்களுடைய சர்மத்தை சுத்தமாகவும் அதிக மிருதுவாகவும் செய்கிறது. அதன் லேசான, சுத்தமான எண்ணெய்கள் இயற்கையான வாசனைகளையும் கிருமி நாசினிகளையும் சர்மத்தின் வெகு கீழே கொண்டு போகின்றன. ஆனாலும் குளிர்ந்த ஸ்நானத்தால் உங்கள் சர்மத்திலிருந்து ஒரு விநாடியில் கோரா நுரையைப் போக்கிவிடலாம். மேலும் புதிய மணமும் பாதுகாப்பும் கோரா ஸ்நானத்திற்குப் பிறகு பல மணி வரையும் தங்குகின்றன.
கோரா ஸோப்
சுத்தமான எண்ணெயே மூலப்பொருள்
தயாரிப்பாளர்கள் —
டிபார்ட்மெண்ட் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அண்டு காமெர்ஸ்
கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்


அதிசயம், ஆனால் உண்மை.
இந்தக்குழந்தையின் தாய் ஒரு மோட்டார் கார்!
குழந்தையின் தந்தை
ஒரு பிரம்மச்சாரி !!
பெரிய புதிர், ஆனால் சுலபம்
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
வாழ்க்கை
AVM
புரொடக்ஷன்ஸ்
இப்போது 60 இடங்களில் வெற்றி முழக்கத்தோடு!